

# அச்சம் தவிர்ப்போம்!

# அறவழி நடப்போம்!

## விடுதலை நாள் விழா பேருரை

### மாண்புமிகு முதல்வர்

அன்புக்குரிய உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்களே, நீதிபதிகளே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, தலைமைச் செயலர் அவர்களே, செயலர்களே, சட்ட மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் அவர்களே, சட்டப்பேரவைத் தலைவர் மாண்புமிகு ராஜாராம் அவர்களே, சட்டப் பேரவை உறுப்பினர்களே, முப்படைத்தளபதிகளின்பொறுப்பேற்று நாட்டைக் காக்கும் நல்லோர்களே, சட்டம்-ஒழுங்கு-அமைதியைப்பாதுகாத்துவரும்காவல் துறையின் தலைவர்களே, காவல்துறை நண்பர்களே, என் எதிரே இருக்கும் ரத்தத்தின் ரத்தமான அன்பு உடன் பிறப்புக்களே! உங்கள் அனைவருக்கும் சுதந்திர தினத்தின் நல் வாழ்த்துக்களைத் தமிழக அரசின் சார்பிலும் அமைச்சரவை சார்பிலும் நன்றி உணர்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இருக்கின்ற, கலந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்ற அனைவருக்கும், உங்கள் அனைவரிடமும் மனம் திறந்து பேசுகின்ற வாய்ப்பை நல்கிய தமிழ்ப்பெருங்குடிமக்கள் அனைவருக்கும் கரம் கூப்பி மீண்டும் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் விடுதலையைப் பெற்றுத் தந்த தியாகிகளையும், அறவழியில் போராட்டம் நடத்தி இந்திய நாட்டின்தந்தை என்று நம்மால் போற்றப்படுகின்ற மகாத்மா காந்திக்கும் அவரோடு சேர்ந்து உடமைகளையும் சுகங்களையும் இளமையிலேயே இழந்த லட்சக்கணக்கானவர்களுக்கும், இழந்து என்றால் யாரோ பறித்து அல்ல, அவர்களாகவே முன்வந்து இந்திய விடுதலைக்காக இழந்தார்கள்— அவர்கள் அனைவருக்கும் இன்று நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒருநாட்டை விடுதலை செய்யும்போது எத்தனையோ பிரச்னைகள் எழும் என்பதை வரலாற்றைப் பார்த்துத் தெரிந்து கொண்டு இருக்கிறோம். சுதந்திரம் எதற்காகப் பெறப்பட்டதோ அது இந்தியத் துணைக்கண்டத்து மக்கள் அனைவருக்கும் கிடைத்து விட்டதா என்றால் மகிழ்ச்சியோடு பதில் சொல்ல முடியாது என்பதை நேற்றுதொலைக்காட்சியிலும், வானொலியிலும் உரையாற்றிய இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் வாக்கியத்திலிருந்து அறிகிறோம். நாட்டில் சுதந்திரம் எதற்காக வேண்டும் ? எண்ண, எழுத, பேச உரிமை உண்டாக வேண்டும். நாட்டின் விடுதலைக்குப் பாதகம் இல்லாமல் சட்டம், ஒழுங்கு அமைதிக்குப் பாதகம் இல்லாமல் சோசலிச சமுதாயத்தை உருவாக்க அதைத்தகர்க்காமல் அந்தக் கருத்துக்களை வெளியிட வேண்டும்.

ஆனால் நாட்டில் அப்படிப் பேசப்படுகின்ற நிலைமைகளை, சிறிய குறைகளை மிகைப்படுத்தி பெரிதாக்கி செய்தி வெளியிடுகின்ற நிலைகளை நாம் காண்கிறோம். மக்களு மனதில் சுதந்திர உணர்வு இல்லாமல், அந்த நாட்டு மக்களை அடிமைப்படுத்த வன்முறையாளர்கள் முயலுகிறார்கள். மக்களிடையே பீதியை உண்டாக்க, சோர்வு மனப்பான்

மலர் 11
இதழ் 5
தமிழரசு
1-9-1980

மையை உண்டாக்க, அச்சத்தை உண்டாக்க திட்டமிட்டு கும்பல்கள் முயலுவதையும் அதைப் பெரிதுபடுத்தி செய்தி வெளியிடுவதையும் பார்க்கிறோம். இதைப் பார்த்து நாட்டிலே அமைதி இல்லை என்று கருத வேண்டும் என்று அந்த வன்முறைக் கும்பல் கருதுகிறது. இந்த வன்முறைக் கும்பல்கள் நாட்டை யாருக்காவது அடிமைப்படுத்த, கொள்கை என்ற பெயரில் நாட்டில் எப்படியாவது நமது சுதந்திரத்தை அழித்து, மனிதர்களை இயந்திரங்களாக்கி அவர்களுடைய உணர்வுகளை அடிமைப்படுத்தி மாசு கற்பிக்க முயற்சி செய்வதை சுதந்திரத்தில் நம்பிக்கை உள்ள யாரும் ஏற்றுக்கொள்ள முடியாது என்ற உறுதியை, சபதத்தை நாம் இன்று எடுத்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். வழக்கு மன்றத்தில் வழக்குரைஞர்கள் தங்களுக்காக மட்டும் வாதாடுவது என்றால் மக்களுக்காக வாதாட யாரும் இருக்க மாட்டார்கள். ஆலைகளில் வேலை செய்பவர்களாக இருந்தாலும் சரி, நெய்து கொடுக்கும் நெசவாளர்களானாலும் சரி, போக்குவரத்தை இயக்குகின்ற ஓட்டுநர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் அனைவரும் எங்களுக்குத் தேவையானதை மட்டும் செய்வோம், மற்றவர்களுக்குச் செய்யமாட்டோம் என்று கூறினால் அதை நாடு ஏற்றுக்கொள்ள இயலாது. அவர்கள் 60 கோடி மக்களுக்காக உழைக்கிறோம் என்ற உணர்வோடு பணியாற்ற வேண்டும். ஒருவர் உழைப்பு பலர் வாழ்க்கைக்கு உத்திரவாதம் தந்தாக வேண்டும். இதுதான் ஜனநாயகம். அதைத் தியாகத்துக்கு விலை என்று கருதாமல் மற்றவர்கள் தரும் காணிக்கையாக எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர மற்றவர்களைத் துன்பப்படுத்தி, வருத்தி வேதனைப்படுத்தி காரியம் ஆற்றுபவர்கள் தமிழகத்தில் இருக்க மாட்டார்கள். இந்தியத் துணைக்கண்டத்திலும் இருக்க மாட்டார்கள்.

உதாரணமாக ஒரு மருத்துவர் தன்னுடைய குழந்தைகளுக்கு மட்டுமே மருத்துவம் பார்ப்பது என்றால் பல லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து அரசுஅவரை மருத்துவராக்கத் தேவையில்லை. அப்படிச் செய்வது நாமே இந்த நாட்டைப் பழி வா பாகும். நாடு அவர்களுக்கா நாட்டின் நல்வாழ்வுக்காக அவ கிறார்கள் என்பதைச் சிந்திப்பதோ யற்ற கருத்துக்களைப்பரப்பவேண்டா சுதந்திரத்தின் பெயரால் அரசின் சா நாட்டு மக்கள் அனைவருக்கும் வேண்டுகோ விடுக்கிறேன். சிந்திப்பது மட்டுமல்ல அரசுக்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். ஒரு கருத்தைப் பேசுவது, விவாதிப்பது, விவாதித்துப் பிறகு பெரும்பான்மைக்கருத்தை ஏற்றுக் கொள்வது தான் ஜனநாயகம். ஆட்சியாக இருந்தாலும் சரி, தனிப்பட்டவர்களானாலும் சரி; தாங்கள் விரும்புவதைப் பெரும்பான்மையினர் மீது திணிப்பது சர்வாதிகாரம். நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்று இரண்டு மாதம் முடிகிறது. வெறுப்பு உணர்வை மறந்துவிட்டு ஜாதிமத உணர்வை அறவே தூக்கி எறிந்து விட்டு, என் பக்கத்தில் இருப்பவர் எந்த ஜாதி என்று தெரியாமல்இன்றுசுதந்திர தினத்தைக் கொண்டாடுவது போல் எதிர் காலத்திலும் கொண்டாடுவோம் என்ற உணர்வு உங்களுக்கு இருக்க வேண்டும் என்று அமைச்சரவை சார்பில் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். நாம் அனைவரும் ஒன்றுபட்டால் நாட்டில் நடத்த முடியாதது எதுவும் இல்லை. நாம் அனைவரும் ஒன்றுபட்டு வாழ வேண்டிய நிலை உருவாகுமானால், உணர்வு பூர்வமாக, அச்சத்தை-பீதியைத் தூக்கி எறிந்துவிட்டு குறிக்கோளுக்காகப் பணியாற்றும் மாபெரும் வல்லமை ஏற்படும்.

ஒத்துழைப்பும் ஆதரவும் தந்தால் தமிழகம் மட்டுமல்ல; இந்தியத் துணைக்கண்டமே மகோன்னத நிலையை அடையும். இந்தியத் துணைக் கண்டத்தின் மீது படையெடுக்க யாருக்கும் துணிச்சல் வராது. மக்களை அச்சுறுத்த சுயநலக் கும்பல் வன்முறை மூலம் முயலுகிறார்கள். இளைஞர்களை, தாய்மார்களை, நாட்டிலுள்ள அனைவரையும் காக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. அந்தப் பொறுப்பை அரசு நிறைவேற்றும்.

நீங்கள் யாரும் கவலைப்படத் தேவையில்லை. அச்சத்தைக் கைவிட்டு, சுதந்திரத்தைக் காப்பாற்றுவோம். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற அமரர்-அண்ணாவின் வழியில்-தந்தை பெரியாரின் சமுதாய சீர்திருத்தக் கொள்கைகளை-மகாத்மாகாந்தியின் அறவழியில் நிறைவேற்ற ஒருங்கிணைந்து பாடுபடுவோம். நன்றி உணர்வோடு உங்களைக் கைகூப்பிக் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் நினைத்தால் எதையும் சாதிக்க முடியும்! நமக்காக ரத்தம் சிந்திய, தூக்குமேடை ஏறிய தூக்குமேடை ராஜகோபாலனை நேற்று தொலைக் காட்சியில் பார்த்தேன். அப்படிப் பட்டவர்கள் லட்சக்கணக்கானவர்கள் எங்கெங்கோ இன்னும் உயிரோடு இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் நன்றி கூறி, நம்முடைய வாழ்க்கையைப் பாதுகாத்த பெரியவர்களை வாழ்த்தி வணங்கி மீண்டும் நாம் அனைவரும் ஒன்றுபட்ட உணர்வோடு இருக்க வேண்டும் என்று கேட்டு அண்ணா நாமம் வாழ்க! இந்திய சுதந்திரம் வாழ்க! என்று கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

[விடுதலைத்திருநாளன்று (15-8-80) சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேசியக்கொடி ஏற்றி வைத்து ஆற்றிய உரை]

## முதலாவது—

## இரண்டாவது அட்டை

**கோட்டையில் கொடியேற்று விழாக்காட்சிகள்**
**(விடுதலை நாள் — 15-8-1980)**

**குடியரசு தினத்தன்று நடைபெற்ற அலங்கார ஊர்திகளுக்குரிய பரிசுகளை முறையே, வேளாண்மைத் துறை இயக்குநர், கால்நடைத்துறை இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் ஆகியோர், மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்து 15-8-80ல் பெற்றுக் கொள்வதை 2-வது அட்டையில் காணலாம்.**

ஒரு நாட்டின் வாழ்விற்கு வளமும் பொலிவும் ஊட்டுவதில் தொழில் வளர்ச்சி இன்றியமையாத பங்கினை ஏற்றுள்ளது என்பதனை அனைவரும் அறிவர்.

சிறு தொழில்களையும் கிராமத் தொழில்களையும் ஏராளமான அளவில் உருவாக்கிப் பெருமளவுக்கு வேலை வாய்ப்பளிக்க வேண்டுமென்பது தமிழ்நாட்டு அரசின் தொழில் கொள்கையாகும். கடந்த மூன்றாண்டுகளில் இவ்வகையில் சிறு தொழில்கள், கிராமத் தொழில்களின் வழியாகப் பெருமளவுக்கு வேலை வாய்ப்பு உருவாகியுள்ளது.

குறிப்பாக, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்களின் ஏழ்மை நிலையைப் போக்கி அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திட அனைத்துத் தொழில் திட்டங்களிலும் செய்யப்படுகின்ற முதலீடுகள் அமைந்தாக வேண்டும் என்ற இலட்சியத்தோடு தமிழ்நாடு அரசு ஆர்வத்தோடு செயலாற்றி வருகிறது. அதே நிலையில் பெரிய நடுத்தரத் தொழில்களின் வளர்ச்சியிலும் போதிய அளவில் ஈடுபாடு காட்டி வருகிறது.

பொதுவாகக் கிராமங்களில் அமைந்துள்ள சாத்தியக் கூறுகளையும், வாய்ப்புக்களையும் வளவாயில்களையும், மூலப் பொருட்களையும், திறனையும் பயன்படுத்துவதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டுவருகின்றன.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், கிராமப்புறங்களில் கிடைக்கும் மூலப் பொருட்களைக் கொண்டு முறையாகத் திட்டமிட்டு தக்க அமைப்புக்களை ஏற்படுத்திட வேண்டிய பயிற்சி அளித்துச் செயல்படுத்துவதன் மூலம் கிராமப் புறங்களில் வேலை வாய்ப்பினை உருவாக்கும் சீரிய பணியில் சிறப்பாக ஈடுபட்டுள்ளது.

பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், வறட்சிப் பாங்கான பகுதிகளின் வளத் திட்டம், கைவினைஞர்களுக்கான பயிற்சித் திட்டம் முதலிய சிறப்புத் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

மேலும் கிராமத் தொழில்கள், குறிப்பாகக் குடிசைத்தொழில்கள் வாயிலாகப் பல்வேறுதொழில்கள் பல்கிப் பெருகிடவும், பெருமளவுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கும் நோக்கத்தோடும் தமிழ்நாடு அரசு 1978-ம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் புகழ்வாய்ந்த தொழில் நுணுக்க அறிஞர் டாக்டர் நாயுடம்மா அவர்களின் தலைமையில் ஒரு குழுவை நிறுவியது. இக் குழு தனது அறிக்கையில் வேலைவாய்ப்புகளை அதிகமாக உருவாக்கித் தரக்கூடிய பல்வேறு தொழில் திட்டங்களைப் பற்றி குறிப்பாக 308 திட்டங்களை எடுத்துக் காட்டிப் பரிந்துரைகளை வழங்கியுள்ளது, இப்பரிந்துரைகளின் அடிப்படையில் தொழில் திட்டங்களைச் செயல்படுத்துவது குறித்து அரசு உரிய வகையில் கவனம் செலுத்தி வருகிறது.

குறிப்பாக அண்மைக் காலத்தில் கைத்தறித் தொழில்கள், கதர் கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள், கைத்திறத் தொழில்கள், தேயிலைத் தொழில்கள் நல்ல வளர்ச்சியுற்றுள்ளன. தமிழ்நாடு அரசு எல்லா உதவிகளையும் அளித்து வருகிறது. அதன் பயனாக வேலை வாய்ப்பும் அவ்வத் துறைகளில் பெருகியுள்ளது.

தங்குதடையின்றி தொழில்கள் வளரும் நிலையில் பல இடர்ப்பாடுகள் அவ்வப்போது எழுந்துள்ளன. மின்சக்தி, எண்ணெய், நிலக்கரி, இரும்பு, சிமெண்டு, இரயில் வாகன வசதி இவைகள் போதிய அளவுக்குக் கிடைக்கவில்லை. தொழில் வளர்ச்சியில்

# புத்துயிர் ஊட்டும் கைத்தொழில்கள்

**மாண்புமிகு ஊரக-தொழில் அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி**

வளரும் தமிழகம்



நாட்டங்கொண்டு, இவற்றையெல்லாம் உரிய வகையில், அவ்வப்போது சமாளிப்பதற்குத் தமிழ்நாடு அரசு மத்திய அரசினை அணுகி வருகிறது.

மாநிலத்திலுள்ள சிறுதொழில் பிரிவுகளுக்கான இரும்பு எஃகுப் பொருட்களின் தேவையைக் கருத்திற்கொண்டு தமிழ் நாட்டிற்குக் குறைந்தபட்சத் தேவையை நிறைவு செய்யும் வகையில் இரும்பு எஃகுப்பொருட்களை ஒதுக்கும்படியும் மத்திய அரசை நாங்கள் கேட்டுள்ளோம்.

தமிழகத்தில் சில துறைகளில் விளைந்துள்ள நல்ல முன்னேற்றங்களையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

தேங்காய் உற்பத்தியில் தமிழ் நாடு இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. இத்துறையில் பெருமளவுக்கு வேலை வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. கயிறு தயாரிக்கும்தொழிலாளர்களுக்குக் கயிறு தயாரிக்கும் நிலையங்களையும், இழை பிரிக்கும் பிரிவுகளுக்கு கயிற்றுத் தறிகளை விநியோகிப்பதற்கும், தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

தமிழ் நாட்டில் 31-3-79-ம் நாளைய நிலையில் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் பணி தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் 18 என்ற அளவில்தான் இருந்தன. தீப்பெட்டிப் பணிக் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை இப்பொழுது 48 ஆக உயர்ந்துள்ளது.

1980-81 ஆம் ஆண்டில் கூடுதலாக 10 பணிச் சங்கங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. இது மட்டுமல்லாமல், தீப்பெட்டிகளைத் தயாரிக்கும் தீப்பெட்டிப் பணியாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், பணியாளர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பினை அளித்து வருகின்றன. 31-3-79-ஆம் நாளைய நிலையில் இச் சங்கங்களின் எண்ணிக்கை 100 ஆக இருந்தது. இன்றைய நிலையில் இவைகளின் எண்ணிக்கை 255 ஆக உயர்ந்துள்ளது.

1980-81-ல் மேலும் 21 பணியாளர் சங்கங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. இது மட்டுமல்லாமல், தீப்பெட்டிகளைத் தயாரிக்கும் தீப்பெட்டிப் பணியாளர்கள் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் பணியாளர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பினை அளித்து வருகின்றன. 31-3-79-ஆம் நாளைய நிலையில், இச் சங்கங்களின் எண்ணிக்கை 100 ஆக இருந்தது. இன்றைய நிலையில் இவைகளின் எண்ணிக்கை 255 ஆக உயர்ந்துள்ளது.

1980-81-ல் மேலும் 20 பணியாளர் சங்கங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

1979-80-ஆம் ஆண்டில் பொதுவாகத் தொழிற் கூட்டுறவு சங்கங்களில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாகப் பெருமளவு வேலை வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.



**முதன் முதலாக....**

* தமிழ்நாட்டில் முதன் முதலாகக் கதர்ப் பிரச்சாரத்தை ஆரம்பித்தவர் தந்தை பெரியார்.
* தமிழகத்தில் கள்ளுக்கடையை எதிர்த்து முதன் முதலில் மறியல் செய்தவர் தந்தை பெரியார்.

இன்றைக்கு வளர்ச்சி கண்டு வரும் பிறிதொரு தொழிலாகப் பட்டுப்பூச்சி வளர்ப்புத் தொழில் விளங்குகிறது. கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள விவசாயிகள், வேளாண்மையை மட்டும் நம்பிக் கொண்டு போதுமான வருமானம் இல்லாமல் துயர்படுகிறவர்களுக்கு வருமானம் வரக்கூடிய அளவில் 1979-ம் ஆண்டு இத்திட்டம் துவக்கப்பட்டது. இந்தத் தொழில் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு அரசு ஆற்றிய பணிகளினால் இன்றைக்குத் தமிழகத்தில் 1,57,000 விவசாயப் பெருங்குடி மக்கள் இந்தத்தொழிலில் ஈடுபட்டு உள்ளனர். இத்திட்டத்தின் மூலம் இந்த ஆண்டு மேலும் 40 ஆயிரம் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கான முயற்சியை எடுத்து வருகிறோம்.

இதற்கான அதிக அளவில் பயன் தரக்கூடிய எம். 5 என்ற முசுக் கட்டை இனத்தை விவசாயிகளுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் மூன்று ஆயிரம் பட்டுப் புழு வளர்ப்பு நிலையங்களையும் ஆங்காங்கே நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்தொழில் நன்கு பரவியுள்ள வட ஆர்க்காடு கோவை, சேலம் போன்ற மாவட்டங்களில் மாவட்டம் பட்டுப் புழு வளர்ப்பு நிலையங்கள் நிறுவப்படவிருக்கின்றன. இதற்காக 2.65 இலட்சம் ரூபாய் செலவிடக் கருதியுள்ளோம். வறட்சி மீட்புப் பணித் திட்டத்தின் மூலமும், மலைவாழ் மக்கள் முன்னேற்றத் திட்டத்தின் மூலமும் செயல்படுத்தப்படும் திட்டத்திற்காக தொகை 2 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தத் திட்டங்கள் வரையப்பட்டுள்ளன. குறித்த காலத்தில் விவசாயிகளுக்குப் பட்டுப் புழுக்களை வழங்க 'அட்டை முறை' அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட விலையில் விவசாயிகளுக்கு இவற்றை வழங்க, அரசாங்க விற்பனைக் கிடங்குகள் நிறுவவும் சீரான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் கிராமத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள், பல்கிப் பெருகுவதற்கு மாவட்டத் தொழில் மையங்கள் சிறப்பாகப் பணியாற்றி வந்துள்ளன. இந்தியத் துணைக் கண்டத்திலே பிற 22 மாநிலங்களைவிட தமிழகத்திலேதான் மாவட்டத் தொழில் மையங்கள் மிகச் சிறப்பாகப் பணியாற்றி வருவதோடு சிறு தொழில் முனைவர்களுக்கு உறுதுணையாகத் துணை நின்று நல்ல ஊக்கத்தை அளித்துக் கொண்டிருக்கின்றன.

1979-80-ல் மட்டும் 67,000 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் வகையில் 5,632 புதிய சிறு தொழில்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

நலிந்த பல சிறு தொழில்கள் புத்துயிர் பெற்று நன்முறையில் இயங்கிட தொடக்கச் செலவு உதவித் தொகை வழங்கும் திட்டமும், சிறு தொழில் வளர்ச்சிக்காக அரசு உருவாக்கிய பல திட்டங்களில் ஒன்றாகும்.

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் போன்ற நிறுவனங்கள் இந்த மாநிலத்தின் தொழில் முன்னேற்றத்திற்குச் சீரிய பங்கைச் செலுத்தி வருகின்றன.

பொதுவாக இன்றைய நிலையில் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. குறிப்

பாக, மின்னணுத் தொழில்களைப் பொறுத்துக் கூற வேண்டுமானால் தமிழ்நாட்டில் சிறு தொழில்கள், அதிநுட்பம்வாய்ந்த அநேகப் பொருட்களைத் தயாரிக்கின்றன. மின்சாரம் மற்றும் மின்னணுத் தொழில்களைக் குறிப்பாகச் சிறுதொழில் துறையில் மேம்படச் செய்வதற்கான திட்டங்கள் பல வகுக்கப்பட்டுள்ளன. தமிழ் நாடு மின்னணுத் தொழில் நிறுவனத்தின் தீவிரமான செயற்பாட்டுடன் இத் தொழில்களின் வளர்ச்சி மேலும் வேகமடையும் என எதிர்பார்க்கின்றோம். சென்னையிலுள்ள விக்ரம் சாராபாய் மின்னணுத் தொழில் பேட்டையிலுள்ள சிறு தொழிற் கூடங்களில் உற்பத்தி செய்யப்பட்ட "என்கோடன் மற்றும் சி. ஆர். டி. டிஸ்பிளேயர்ஸ்" போன்ற அதிநுட்பமான மின் அணு உறுப்புக்கள், அண்மையில் நாடே களிக்கத்தக்க வகையில், வெற்றிகரமாக விண்வெளியில் செலுத்தப்பட்ட எஸ். எல். வி. 3 எனப்படும் "ரோகினி"யில் பயன்படுத்தப்பட்டன. தமிழகத்துத் தொழிற்சாலைகளில் உருவாக்கப்பட்ட அந்த நுட்பப் பொறிகள் விண்வெளி ஆராய்ச்சி சாதனங்களுக்குப் பயன்பட்டன என்பது நாம் பெருமைப்படத் தக்க அரிய சாதனையாகும்.

அண்மையில் அறிவிக்கப்பட்டுள்ள மத்திய அரசின் புதிய தொழில் கொள்கை அறிக்கையின் படி, மிகச் சிறிய தொழில்கள், சிறிய தொழில்கள், துணைத் தொழில்கள் ஆகியவற்றின் முதலீட்டுக்கான அதிகபட்ச வரம்பும் உயர்த்தப்பட்டுள்ளன. இதன் மூலம் இத் தொழில்கள் மேலும் பயனடைய வழிகள் ஏற்படும்.

சிறிய தொழில்களைச் சிற்றூர் தோறும் வளர்ப்பதால், நாட்டின் பொருளாதாரத்தைப் பொலிவாக்க முடியும் என்ற வகையில் ஜப்பான் நாடு சீர் பெற்றுச் செழித்திருப்பதை உலகமே கண்டு வியந்திருக்கிறது. அந்த லட்சிய அடிப்படையில் கிராமத் தொழிலை — ஊரகத் தொழில்களைப் பெருக்கவும், நலிந்த எளிய கிராம மக்களின் வாழ்வில் புன்னகை அரும்பவும், புதிய திட்டங்களை நமது அரசு நாளும் வகுத்து வருகின்றது. நமது கனவுகள் நினைவாகட்டும்! தொழில் வளம் எங்கும் மலரட்டும்! எல்லோர்க்கும் எல்லாம் என்ற லட்சியத்தை நோக்கி இந்த வையகம் நகரட்டும்.

**(சென்னை வானொலியில் 17-8-80-ல் ஒலிபரப்பப்பட்டது).**

# கவிஞர் போற்றும் மா கவிஞர்



பாரதியார் உலககவி!—அகத்தில் அன்பும்
பரந்துயர்ந்த அறிவினிலே ஒளியும் வாய்ந்தோர்!
ஒருருக் கொருநாட்டுக் குரிய தான
ஒட்டைச்சாண் நினைப்புடையர் அல்லர்; மற்றும்
வீரர்அவர்! மக்களிலே மேல்கீழ் என்று
விள்ளுவதைக் கிள்ளிவிட வேண்டும் என்போர்!
சீருயர்ந்த கவிஞரிடம் எதிர்பார்க் கின்ற
செம்மைநலம் எல்லாமும் அவர்பாற் கண்டோம்!

—பாவேந்தர் பாரதிதாசன்.

புத்தொளியிற் பழந்தமிழ்க்கோர் புதுமை பூட்டிப்
புத்துயிரும் புதுமணமும் புகுத்தி ஞானச்
சத்தியொளி மிகவிளங்கும் சொற்க ளாலே
தாய்நாட்டின் தளையறுக்கும் தவமே பாடி
எத்திசையும் இளந்தமிழர் இன்று கூடி
இறந்தேனும் ஈன்றவளை மீட்போம் என்று
பத்தியொடும் அறப்போரில் முனைந்து நிற்கப்
பண்ணினது பாரதியின் பாட்டே யாகும்!

—நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை.

ஊரறிய நாடறிய உண்மை யெல்லாம்
ஒருவரையும் அஞ்சாமல் எடுத்து ரைத்தோன்
ஆரமுதம் அனையகவி பாடித் தந்தோன்
அமரகவி யென்றெவரும் புகழப் பெற்றோன்
சீருயரும் தமிழ்மக்கள் செய்த வத்தால்
தென்னாடு சிறக்கவந்த சுப்ர மண்ய
பாரதியார் பெயர்போற்றி ஏத்து வோமே
பாமாலை புனைந்தவற்குச் சாத்து வோமே!

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

# ‘கல்வி சிறந்த தமிழ்நாடு’

## யுனெஸ்கோ தலைவர் பாராட்டு

சென்னைக்கு வருகை தந்த ‘யுனெஸ்கோ’ டைரக்டர் ஜெனரல் டாக்டர் எம்‘போ. அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் 18-8-80 அன்று விருந்தளித்தார். சிறப்பு விருந்தினரான டாக்டர் எம்‘போஅவர்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வரவேற்றுப் பேசினார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் வரவேற்புரையில் குறிப்பிட்டதாவது:

‘‘ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் கலாச்சார நிறுவனத்தின் தலைமை இயக்குநர் டாக்டர் எம்‘போ அவர்களையும், திருமதி எம்‘போ அவர்களையும் அவர்கள் குடும்பத்தினரையும் தமிழகத்தில் வரவேற்கும் வாய்ப்பு பெற்றதை, நானும் என் அரசைச் சேர்ந்த மற்ற அமைச்சர்களும் பெரும் பேறாகவும், பெருமையாகவும் கருதுகின்றோம். யுனெஸ்கோ டைரக்டர் ஜெனரல் தமிழகத்திற்கு வருகை புரிந்துள்ளது இதுவே முதல் முறையாகும். அம்முறையில் எங்களுக்கு இவ்வருகை இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது.

‘‘தனிப்பட்ட முறையில் டாக்டர் எம்‘போ அவர்கள் ஏற்கெனவே ஒருமுறை செனகல் நாட்டின் அதிபருடன் தமிழகத்திற்கு வந்துள்ளார்கள். யுனெஸ்கோவின் தலைவர் என்ற முறையிலும், தமிழகத்தின் உற்ற நண்பர் என்ற முறையிலும், அவரைத் தமிழகத்தின் நாலரைக் கோடி மக்களின் சார்பில் இன்று வரவேற்பதில் பேருவகை கொள்கின்றேன்.

‘‘சமாதானம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய அடிப்படைகளின் பேரில் புதியதொரு சமுதாயத்தைப் படைக்கும் பணியின் முன்னோடியாக, அந்த உணர்வுகளை முதலில் மக்களின் உள்ளத்தில் எழுப்பி, நிலைநிறுத்த வேண்டும் என்பது மனித சமுதாயத்தின் நலனில் நாட்டம் கொண்ட அனைவரின் ஒருமித்த கருத்தாகும். இப்பணியில் யுனெஸ்கோ ஆற்றிவரும் பங்கு மகத்தானது. எழுத்தறிவின்மையை அறவே அகற்றுதல், அனைவருக்கும் தொடக்கக் கல்வி அளித்தல், சமூக இன வேறுபாடுகளைக் களைதல், கிழக்கு மேற்கு நாடுகளின் கலாச்சாரங்களை இருதரப்பினரும் அறிந்து பாராட்டி போற்றி பேணுவதற்கான சூழ்நிலையை உருவாக்குதல், வாழ்க்கைத்தரம் உயர்வதற்கான வழிவகைகளைக் காண்பதில் அறிவுபூர்வமான ஆராய்ச்சி நடத்துதல் ஆகியவையே யுனெஸ்கோவின் ஐம்பெரும் கொள்கைகளாகும்.

‘‘இந்த உயரிய கோட்பாடுகளை இந்திய நாடு என்றுமே ஏற்றிப் போற்றியுள்ளது என்பது வரலாறு கண்ட உண்மையாகும். அதிலும் குறிப்பாக, இந்தியத் துணைக் கண்டத்தின் பகுதியான தமிழ்நாட்டின் பண்பாட்டோடும், பாரம்பரியத்தோடும் ஒன்றி நிற்பவை இந்தக் கோட்பாடுகள். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ‘யாதும் ஊரே; யாவரும் கேளிர்’ என்ற உலகப் பொதுமையை உணர்த்தியவர் தமிழ்க் கவிஞர் கணியன் பூங்குன்றனார். இன, சமூக, தேசிய வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு, மக்கள் அனைவரும் வளமான, வாய்மையான வாழ்வு வாழ்ந்து, தங்கள் உயர்வுக்கும், அதன் மூலம் தரணியின் உயர்வுக்கும், பாடுபட வேண்டும் என்ற உணர்வு, இந்திய மக்களுக்கும், குறிப்பாகத் தமிழக மக்களுக்கும் என்றுமே தலையாய உணர்வாக அமைந்துள்ளது.

‘‘தமிழகத்தைப் பொறுத்த வரையில், தன்னுடைய வருவாயில் ஏறத்தாழ 25 விழுக்காட்டைக் கல்வியின் வளர்ச்சிக்காக ஒதுக்கி, பள்ளிச் சிறுவர்களிடையே மட்டுமல்லாமல், பாமர மக்களிடையேயும் கல்வி அறிவைப் பரப்பி முற்போக்கான பல திட்டங்களை நாம் நிறைவேற்றி வருகின்றோம். சாதி, மத, இன வேறுபாடின்றி மாணவர் அனைவருக்கும், 12-ஆம் வகுப்பு வரை இலவசக் கல்வி தமிழ்நாட்டில் அளிக்கப்படுகிறது. 8-ஆம் வகுப்பு வரை ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவும் இலவசமாக வழங்கப்படுகின்றது. 1 முதல் 3



யுனெஸ்கோ தலைவர் திரு. எம்'போ அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 18-8-80க் நினைவுப்பரிசு அளித்தார்.

வகுப்புகள் வரை பயிலும் ஏழைக் குழந்தை களுக்குப் புத்தகங்கள், மற்ற கல்வி சாத னங்கள், பள்ளிச் சீருடைகள் ஆகியவற்றை அரசே தன் நிதியிலிருந்து வழங்கி வருகின் றது.

''கடல் கடந்து வாழும் தமிழருக்குத் தமிழ் மொழிப் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்புகளும், வசதிகளும் செய்து தருவ தில் இந்த அரசு மிகுந்த நாட்டம் கொண் டுள்ளது.'

''எங்கள் அமைச்சரவையில், என் தோழர் களாகப் பணியாற்றும் நிதி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன், கல்வி அமைச்சர் திரு அரங்கநாயகம் ஆகியோர் அண்மையில் மொரிஷியஸ், ஸெஷல்ஸ் தீவுகளுக்கும் தமிழர்கள் வாழும் மற்ற பகுதிகளுக்கும் சென்று, அவர்களுடன் தமிழ்த் தாயகம் தொடர்ந்து கலாச்சார உறவு கொள்ள திட் டங்களை வகுப்பதற்குப் பரிந்துரைகள் செய்துள்ளனர். இதற்காக விரிவான திட்டம் ஒன்றைத் தமிழகம் விரைவிலேயே வகுத்து யுனெஸ்கோவிற்கு, மத்திய அரசின் மூலம் அனுப்பி வைக்கும். இத் திட்டத் திற்கு யுனெஸ்கோவின் ஆதரவும், உதவியும் தாராளமாகக் கிடைக்குமென்று நான் எதிர் பார்க்கின்றேன்.

''அறிவு அற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும் உள்ளழிக்கலாகா அரண்'' என்று உலகக் குடிமகனான தமிழ் நாட்டைச் சேர்ந்த திருவள்ளுவர் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே எடுத்துக் காட்டியுள்ளார்கள். சொந்த நாட்டுப் பண் பாட்டிலே உறுதியாக ஊன்றி நின்று, அதே சமயத்தில் உலக நாடுகளின் கலாச்சார வளம், அறிவியல் கோட்பாடுகள் ஆகிய வற்றினாலும் பலன் பெறும் வகையில் இந்திய மக்கள் தங்கள் தாய் நாட்டுத் தரை யிலே கால் ஊன்றி தரணி முழுவதையும் அரவணைக்கக் கரங்களை எதிர் நீட்டு வார்கள் என்று தேசியக் கவி தாகூரும், நாட்டின் தந்தை மகாத்மா காந்தியும் இலட் சியக் கனவு கண்டார்கள். அந்தக் கனவை நனவாக்கும் பணியில்தான் தமிழக அரசு தமிழ் மக்களின் பேராதரவுடன் முனைப் பாகச் செயல்பட்டு வருகிறது.

''இதுவரை தமிழ்நாட்டுக் கலாச்சாரத் தைப் போற்றிப் பேண பல்வேறு திட்டங் களின் மூலம் பெரும் உதவி அளித்து வந் துள்ள யுனெஸ்கோ நிறுவனம், நாம் ஏற்றுக் கொண்டுள்ள புத்துலகப் படைப்புப் பணி யில் எக்காலத்திலும் நமக்கு உறுதுணை யாய் நின்று ஏற்ற உதவிகளைச் செய்ய முன் வரும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.



''செனகல் குடியரசின் அதிபர் டாக்டர் செங்கோர் அவர்கள் திராவிட மொழி ஆராய்ச்சியில் ஆழ்ந்த ஈடுபாடும், தேர்ந்த புலமையும் பெற்றவர்கள். புகழ்பெற்ற கவிஞரும் கூட. அடுத்த உலகத் தமிழ் மாநாடு தம் நாட்டுத் தலைநகரான டக்கார் நகரில் நடக்கவேண்டுமென்று அவர்கள் அழைப்பு விடுத்திருந்தார்கள். அடுத்த உலகத் தமிழ் மாநாடு, தமிழகத்தில் சங்கம் வளர்த்த மதுரையம்பதியில் 81-ஆம் ஆண்டு சனவரியில் கூடவிருக்கின்றது. அம்மாநாட்டிற்கு யுனெஸ்கோவின் தலைவர் என்ற முறையில் தாங்களும், தமிழில் மிகுந்த ஈடுபாடு கொண்ட செனகல் நாட்டு அதிபர் டாக்டர் செங்கோர் அவர்களும் கலந்து கொள்ள வசதிப்படுமென்று நான் எதிர்பார்க்கின்றேன்.

''தங்களை வரவேற்க இன்று நடக்கும் இந்த விருந்துபசாரத்தில் திரு ம.பொ.சி. அவர்களும் கலந்து கொள்வது எனக்குப் பெருமகிழ்ச்சியை அளிக்கின்றது. திரு. ம. பொ. சி. மேலவைத் தலைவர் மட்டுமல்ல; அவர் தாய் நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் முன்னணியில் நின்றவர். தாய் நாட்டிற்காகவும், தமிழுக்காகவும் பல தியாகங்களைச் செய்தவர்; தொடர்ந்து செய்து வருபவர். அவர் இந்த விழாவில் கலந்து கொள்வது மிகவும் பொருத்தமானதாகும்.

''தமிழ் மொழியில் பேரார்வமும், நீங்காத பற்றும் கொண்ட, தமிழ் மக்கள் உயர்வடைய வழி காட்டியவர் எங்கள் தலைவர் அண்ணா. தமிழ் அன்பையும், தமிழ் உணர்வையும் அவர் நாட்டுக்குக் காணிக்கையாக்கி அதிகாரப் பொறுப்பை ஏற்றவர். அவர் வழியில் நாங்கள் நடக்கின்றோம் என்று சொல்வதில் பெருமை கொள்கின்றோம். இன்று இந்த அரசு செயல்படுத்தி வரும் முற்போக்கான திட்டங்கள் அண்ணா எங்களுக்கு வகுத்துத்தந்தவை. அண்ணா காட்டிய பாதையில் நாங்கள் உறுதியாக நின்று, மக்கள் நல்வாழ்வுக்காகப் பாடுபட்டு வருகின்றோம்.

''புதிய சமுதாயத்தை உருவாக்க அறிவியல் முறைக்கு ஏற்ப தொண்டாற்றிவரும் யுனெஸ்கோவிற்கும், தொன்று தொட்டே உலகப் பொதுமையைப் போற்றி வந்துள்ள பாரம்பரியப் பெருமையைக் கொண்ட தமிழகத்திற்கும் நெருங்கிய, நிலையான உறவும், அந்த அடிப்படையில் ஒத்துழைப்பும் ஏற்படுவதற்குத் தங்கள் வருகை ஒரு முன்னோடியாக அமையும் என்று கருதுகின்றேன். அந்த உறவு மலர்ந்து, வளர்ந்து உலகே அதனால் பயன்பெறும் நாள் வெகு விரைவில் வருமென்று எதிர்பார்க்கின்றேன். மீண்டும் தங்களுக்கு இனிய வாழ்த்துக்களைக் கூறி, தங்கள் வரவு நல்வரவாகுக, நம் உறவு தழைத்து ஓங்குக என்று வாழ்த்துகின்றேன்.''

முதலமைச்சர் அவர்கள் தன்னைக் கௌரவித்தமைக்கு, டாக்டர்' எம்'போ அவர்கள் நன்றி தெரிவித்து, பேசினார்கள்

தமிழ்நாட்டில் தமது குறுகிய காலசுற்றுப்பயணத்தின்போது முதலமைச்சர் அவர்கள் அளித்த அன்பான வரவேற்பிற்கு டாக்டர்எம் 'போ நன்றிதெரிவித்தார்.தமக்கு டாக்டர் பட்டம் அளித்து கௌரவித்த சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும் தமது நன்றியறிதலைத் தெரிவித்துக் சொண்டார் டாக்டர் எம் 'போ.

மேலும், யுனஸ்கோ டைரக்டர் ஜெனரல் பேசுகையில் தமிழ்நாட்டில் கல்வி, கலாச்சார மேம்பாட்டுக்கென அரசு ஆற்றி வரும் பணிகளைப் பாராட்டினார். தமிழ் மொழியின் தொன்மையையும், வளமையையும் பண்பாட்டையும் மிகவும் புகழ்ந்துரைத்தார். இயன்ற எல்லாவித உதவிகளையும் தமிழ்நாட்டிற்கு யுனெஸ்கோ செய்யும் என்றும் உறுதி அளித்தார்.

விருந்துக்குப்பின் திரு நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன், திரு சீர்காழி கோவிந்தராஜன் மற்றும் அரசு நர்த்தகி செல்வி சுவர்ணமுகி ஆகியோரின் கலைநிகழ்ச்சிகள் நடந்தன. மாண்புமிகு அமைச்சர்கள், பல்கலைக் கழகத் துணை வேந்தர் மற்றும் முன்னணிக் கலைஞர்கள் விருந்தில் கலந்து கொண்டனர்.

## தமிழ் வளர்த்த பெரியார்கள் :

# தமிழவேள் உமாமகேசுவரனார்

கு. சிவமணி

'எங்கும் தமிழ், எல்லாம்தமிழ்' என்று எழுபது ஆண்டுகட்கு முன்னரே முழக்கமிட்டு, தமிழின் இன்றைய பல்துறை வளர்ச்சிக்கும் அன்றே கால்கோள் செய்த தமிழ்ப் பெருஞ் சிந்தனையாளர்!

'தொண்டு- தமிழ்- முன்னேற்றம்' என்பதைத் தம் கடமையாகக் கொண்டு, சொல்லரிய சோதனைகளுக்கிடையே எண்ணரிய சாதனைகளைப் புரிந்த பெருந்தமிழ்ச் செயல் மறவர்!

''தங்கு புகழ்ச் செந்தமிழ்க்கோர் அன்பராகில் அவர்கண்டீர் யாம் வணங்கும் கடவுளரே'' என்று தாம் வழிபடும் இறைவனளவுக்கு நல்ல தமிழர்களைப் போற்றி வணங்கிய மாபெருந் தமிழ்த் தொண்டர்!

எதை-ஏன்-எப்படிச் செய்வது என்றறியாமல் தவித்த நற்றமிழ் இளைஞர்களுக்கு 'இதை-இதற்காக-இப்படிச் செய்ய வேண்டும் என்று நெறியுணர்த்தி நேர்வழி நடத்திய தமிழ்ப்பெருந் தானைத் தலைவர்!

ஏட்டுப் படிப்போடு தொழிற்படிப்பையும் இணைத்துப்பள்ளிப் படிப்பினைப் பயனுறுமாறு செய்ததுடன், நிலையங்கள் பல நிறுவிய கல்விச் சிந்தனையாளர்!

7-5-1883 அன்று தோன்றி- இளமையில் தஞ்சைத் தூய பேதுரு கல்லூரியில் இளங்கலைப் பட்டம் பெற்றுச் சிலகாலம் தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணி புரிந்து-பின்பு சென்னைச் சட்டக் கல்லூரியில் பயின்று தேர்ச்சி பெற்று-தஞ்சையில் ஏறத்தாழ 32 ஆண்டுக் காலம் வழக்குரைஞர் என்னும் பெயர்ப் பலகைகூட இல்லாமல் அந்த நாளிலேயே திங்கள் ஒன்றிற்கு ஆயிரம்ரூபாய்க்குக் குறையாத வருமானமுடைய தலைசிறந்த வழக்கறிஞராகத் திகழ்ந்து கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைமை ஏற்று-நாடு மொழி இனம் வாழத் தம்முடைமை அனைத்தையும் ஈந்து-தம் வடபுலப் பயணத்தின்போது 9-5-'41 அன்று சரயு நதிக்கரையில் புகழுடம்பு எய்தியவர் தமிழவேள் ஆவார்.

தஞ்சை நகரில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஒன்பதாவது ஆண்டு விழா நடைபெற்றதன் விளைவாகத் 'தஞ்சைத் தமிழ்ச் சங்கம்' தோற்றம் பெற்றுத் 'தமிழகம்' என்ற திங்கள் இதழ் ஒன்றையும் சிலகாலம் நடத்திப் பின் போற்றுவாரும் புரப்பாரும் இல்லாமையால் நிலைபெறாது போயிற்று. அதன் பின்பு, தமிழன்பர்கள் சிலர் தஞ்சைப் 'பஞ்சநதிபாவாமடம்' என்னுமிடத்தில் ஒருங்குகூடித் தாகூரின் சாந்திநிகேதனத்தைக் கருத்திற்கொண்டு 'வித்தியாநிகேதனம்' ஒன்றை நிறுவினர். அந்த வித்தியாநிகேதனப் பொறுப்பாளர்களுடன் மன வேறுபாடு கொண்ட இளைஞர்கள், தமிழவேள் உமா மகேசுவரரின் இளவலும், அரசாங்க அலுவலரும், தமிழ் வாழ்வே தம் வாழ்வாகக் கொண்டவரும், எண்ணியதை எண்ணியாங்கு முடிக்கும் திண்ணியரும் ஆகிய இராதாகிருட்டிணர் தலைமையில் திரண்டனர்; தஞ்சை வடவாற்றங் கரை-கந்தப்ப செட்டியார் சத்திரப் படித்துறையில் அமர்ந்தபடி தமிழின் நேற்றைய சிறப்பும்-அன்றைய தாழ்வும்-நாளைய உயர்வும் பற்றிச் சிந்தித்ததன் விளைவே கரந்தைத் தமிழ்ச்சங்கம் உருவாகக் காரணமாயிற்று.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தொடக்க விழா 14-5-1911 அன்று 'சங்கம் நிறுவிய துங்கன்' இராதாகிருட்டிணரின் இனிய வரவேற்புரையுடன், நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் தலைமையில் முறைப்படி நடைபெற்றது. சங்கச் செயற்குழுவினரின் ஒருமித்த வேண்டுகோளுக்கிணங்க உமாமகேசுவரர் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைமைப் பொறுப்பை ஏற்றார்; முதல் ஐந்தாண்டுகள் சங்கத் தலைவராக மட்டுமே செயல் புரிந்தார். அடுத்து வந்த ஆண்டுகளில் 'சங்கம் என்றால் உமாமகேசுவரர், உமாமகேசுவரர் என்றால் சங்கம்' என்று சொல்லுமாறு மூச்சும் பேச்சும் தமிழாக-சிந்தனையும் செயலும் சங்கமாகக் கொண்டு தம் வாழ்நாள் முழுவதும் தொண்டு செய்தார். மிக இளமைக் காலத்திலேயே அவருடைய மனைவியார் உலகநாயகி



அருந்தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் வல்ல பெருஞ் சொற்கொண்டல்!

சுருங்கக்கூறின், வருந்தி வந்த எவர்க்கும் வாய்த்த 'நீர்நிறை ஊருணி!'- 'உள்ளூர்ப் பழுத்த பயன்மரம்!'—பிணிபோக்கும் 'மருந்துமரம்'; திருவள்ளுவர் சுட்டிய பண்பும் சால்பும் அமைந்த ஒப்புரவாளர்!

அவர் தாம், தமிழவேள் த.வே உமாமகேசுவரனார்!

தஞ்சை மாநகரின் கருந்திட்டைக் குடியில், தொண்ணூற்றேழு ஆண்டுகளுக்கு முன்பு, அரசாங்க அலுவலராகிய வேம்பப் பிள்ளைக்கும் அவர்தம் மனைவியார் காமாட்சியம்மையாருக்கும் இரண்டாவது குழந்தையாக,

அம்மையாரையும், தலைமகன் பஞ்சாபகேசனையும் இழந்த ஆற்றொணாத துயரம், அரும்பெரும் தமிழ்த் தொண்டாக மாற்றுருக் கொண்டது. (கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் பணியாற்றி ஓய்வு பெற்ற டாக்டர் சிங்கார வேலர் தமிழ்வேள் உமாமகேசுவரரின் கடைசி மகனாவார்.)

1911-இல் தோன்றிய கரந்தைத் தமிழ்ச் சங்கம் 1914 இல் சட்டப்படிப் பதிவு செய்யப் பெற்றது.

நாள்-கிழமை-திங்கள் இதழ்களைப் பொதுமக்கள் படித்துப் பயன்பெற வேண்டும் என்பதற்காக 1915இல் இலவசப் படிப்பகம் தொடங்கப்பட்டது.

6-10-1916 விசயதசமி அன்று, உமாமகேசுவரர், 'செந்தமிழ்க் கைத் தொழிற்கல்லூரி' என்னும் கல்வி நிலையத்தை, ஆங்கிலம் தமிழ் வடமொழி ஆராய்ச்சியையம் மருத்துவப் புலமையையும் இசைத் திறத்தையும் பொழுது போக்காகக் கொண்ட பெரு வள்ளல் அரித்துவார மங்கலம் கோபால்சாமி இரகுநாத இராசாளியாரின் வாழ்த்துடன், தொடங்கினார். அப்போது நாற்பது மாணவர்களைக் கொண்டிருந்த அக்கல்வி நிலையம் 1930 இல் 450 பேரைக்கொண்ட உயர் தொடக்கப் பள்ளியாக வளர்ச்சி பெற்றது. வெறும் புத்தகப் படிப்புடன் கைத்தொழிற் கல்வியும் கற்பிக்கப் பெற்றது. அந்த நிலையம் இன்று, 'இராதாகிருட்டிண தொடக்கப்பள்ளி' என்றும், 'உமா மகேசுவர மேனிலைப் பள்ளி' என்றும் இருபெரும் நிலையங்களாக ஓங்கி வளர்ந்து ஆயிரக் கணக்கானவர்க்குப் பயிலும் வாய்ப்பினை அளித்துக் கொண்டுள்ளது.

அப்போது சங்கத்துக்கெனத் தனிக்கட்டிடம் இன்மையால், அப்பாவு செட்டியார் சத்திரத்தில் சங்கக் கூட்டங்கள் நிகழ்ந்தன. 1924-25இல், உமா மகேசுவரரின் உலையாத முயற்சியினால் வடலாற்றின் வட-தென்புற வெற்றிடங்கள் விலைக்கு வாங்கப் பெற்றுத் தமிழ்ப் பெருமன்றமும் சில கட்டிடங்களும் கட்டப் பட்டன.

1925-இல் 'தமிழ்ப்பொழில்' என்னும் உயரிய இலக்கியத் திங்கள் இதழைத் தமிழவேள் தொடங்கினார்; தனித்தமிழ் இலக்கிய ஏடாகையால் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள இதழ்களே வெளியிடப் பெற்றன. சில நேரங்களில் வெளியீடுவதற்குத் தடையும் ஏற்பட்டதுண்டு. அப்போதெல்லாம் தமிழவேளின் நண்பர்கள், 'பொதுமக்கள் விரும்பும் பகுதிகளைச் சேர்த்தால் கையிழப்பு ஏற்படாது என்றும், இல்லையேல் எண்ணிக்கை குறைந்து இறுதியில் வெளியிடுவதை நிறுத்த வேண்ட நேரிடும்' என்றும் கூறுவர். தமிழ்ப்பொழிலில் ஒட்டி ஒரு படி மட்டுமே வெளியிடப்பட்டுத் தாம் ஒருவரே அதைப் படிக்க நேர்ந்தாலும், பொழில் தனது இலக்கியத் தகுதியிலிருந்து தாழாது என்று உரைத்துக் கைப்பிடிப்பு ஏற்பட்ட போதிலும் அதனை வெளியிடுவதைத் தம் கடமையாகக் கொண்டார்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வெள்ளிவிழா தமிழகமே வியந்து போற்றும் வண்ணம், 1938 ஏப்ரல் 15, 16, 17 ஆகிய நாட்களில்-தமிழும் சைவமும் தம்மிரு கண்களெனக் கொண்டவரும், தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகியவற்றில் பெரும் புலமை பெற்ற வரும், ஒலிபெருக்கி இல்லாத அந்த நாட்களில் பல மணிநேரம் சொற்பொழிவாற்றிக் கேட்டாரைத் தம்பால் பிணிக்கும் வியத்தகு சொல்லேருழவரும், பாண்டியத்துரைத் தேவரைக் கொண்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்தையும், மறைமலையடிகள், நல்லசாமிப்பிள்ளை முதலியவர்களைக் கொண்டு சைவசித்தாந்த சமாசத்தையும் தோற்றுவித்த பெருந்தகையாளரும், ஞானாசிரியரும், திருப்பாதிரிப்புலியூர்த் திருமடத்தின் தலைவரும் ஆகிய அருட்டிரு. ஞானியார் அடிகள் தலைமையில் நிகழ்ந்தது. வெள்ளி விழாவின் இரண்டாம் நாள் அன்று தமிழவேள் உமா மகேசுவரரின் விருப்பத்திற்கிணங்கத் தமிழுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் கரந்தைப் புலவர் கல்லூரியை, அருட்டிரு ஞானியாரடிகள், பேராசிரியர் வெள்ளை வாரணனாரையே மாணவர் நிலையில் கொண்டு 'முருகன்' என்னும் தலைப்பை விளக்கி, முறையாகத் தொடங்கி வைத்தார்கள். ஆண்டுதோறும் அதில் பயின்று வெளிவரும் நூற்றுக் கணக்கானவர்கள் தமிழகத்துக்கு அப்பாலும் தமிழ்த்தொண்டு புரிந்து வருகின்றனர்.

தமிழவேள் உள்ளத்தால் சைவராயினும், உணர்வால் எல்லாச் சமயத்தையும் போற்றும் இயல்பினர். திருவையாற்று ஏழூர்த் திருவிழாவின்போது, அன்பர்கள் சூழ ஏறத்தாழ இருபத்தைந்து கல் நடந்தே சுற்றி வருவதை ஒவ்வோர் ஆண்டும் கடமையாகக் கொண்டிருந்தார். தமிழவேள் எந்த நிலையிலும் இனமானம் காப்பவர். அதே சமயத்தில் எண்ணியதை எண்ணியவாறே நிறைவேற்றுவதில் வல்லவர்.

தமிழவேள் இருந்தபோது 'கரந்தைத் தமிழ்ச் சங்கப் பள்ளி' எல்லா வகையிலும் மற்றக் கல்வி நிலையங்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தது. எட்டாவது வகுப்பு மாணவர், அவ்வகுப்புக்குரிய பாடத் திட்டங்களுடன் பெரும் பள்ளி இறுதி வகுப்புக்குரிய ஆங்கிலம்-தமிழ் ஆகிய இரு பாடங்களையும், தமிழ் இலக்கியத்தையும் படிக்க வேண்டும். ஒரு முறை மாணவர்களின் பயனுக்காக, சிலப்பதிகாரம்-புகார்க் காண்டம் மட்டும் அச்சடித்துப் பயன்படுத்தப்பட்டது. சிலப்பதிகாரம் முழுவதையும் பதிப்பித்திருந்த டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள், தம் இசைவு இல்லாமல் புகார்க் காண்டத்தைப் பதிப்பித்தது தவறு என்றும், தக்க ஈாரணம் காட்டுமாறும், தவறினால் வழக்கிடப்படும் என்றும் ஒரு வழக்குரைஞர் மூலமாக அறிவிப்பு ஒன்றை உமா மகேசுவரருக்கு அனுப்பியிருந்தார். ஐயர் பதிப்புக்கு முன்னரே செட்டியார் பதிப்பு ஒன்று அந்த

## தயிரோ தயிர்!

**பல்கேரிய நாட்டில் வசிக்கும் மக்கள் மட்டும் நீண்ட ஆயுட்காலம் உடையவர்களாக இருப்பதன் இரகசியம் என்ன?**

**புற்று நோயுடன் போராடும் உணவு எது?**

**உடலின் தேவையற்ற கட்டிகளின் வளர்ச்சியினைத் தடைப்படுத்துவது எது?**

**தொற்றுநோய்க்கு எதிராகச் செயல்பட்டும், நோய்தீர, உண்ட மருந்தின் பின் விளைவுகளைத் தடுக்கவல்ல ஆகாரம் என்ன?**

**வைட்டமின் 'பி' உயிர்ச் சத்துக்களடங்கிய தயிர்தான், மேலேயுள்ள வினாக்களுக்கெல்லாம் விடையாகும்!**

**தயிரில் உடலைப் பேணும் கிருமிகள் உள்ளன. தயிரை உட்கொள்வதால், அவை உடலுக்கு ஊறு விளைவிக்கும் நோய்க் கிருமிகளைக் கொன்று விடுகின்றன.**

**மனித உடல் வளர்ச்சிக்கு உகந்ததாயுள்ள தயிரைத் தாராளமாகத் தினசரி உட்கொண்டு உடலைப் பேணலாமே!**

நாலுக்கு இருந்தமையால்'வழக்கு மன்றத்திலேயே தக்க மறுமொழி தரப்படும்' என்று உமாமகேசு வரர் பதிலிறுத்தார். அந்த நிகழ்ச்சி அத்துடன் முடிவுற்றது. அடுத்து வந்த கரந்தைத் தமிழ்ச் சங்க ஆண்டு விழாவுக்கு டாக்டர் உ. வே. சா. தலைமையேற்றார். புத்தக வெளியீடு பற்றிய அறி விப்புக் காரணத்தைத் தமிழ்த் தாத்தாவும் கேட்கவில்லை; மறு மொழியைத் தமிழவேளும் தர வில்லை; மனங்கலந்த கேண்மைய ராக இருவரும் பழகியமை, செய்தியறிந்த மற்றவர்க்கு வியப்பாக இருந்தது.

முதன்முறையாகக் கட்டாய இந்தி திணிக்கப்பட்டபோது தமிழ்ச் சமுதாயம் கொதித்தெழுந் தது. நீதிக் கட்சியினராகிய தமிழ வேள் உமாமகேசுவரரும் கட்டாய இந்திக்கு எதிராகப் போர் முழக் கம் செய்தார்; நாடு முழுதும் சுற்றி அணி திரட்டினார்; பல் வேறு கண்டனத் தீர்மானங் களை இயற்றி அரசுக்கு அனுப்பி வைத்தார். இந்தி எதிர்ப்புப் படைக்குத் தஞ்சையில் வர வேற்புக் கொடுத்து வாழ்த்தி யனுப்பினார்.

உமாமகேசுவரர், பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் 'நீராடும் கடலுடுத்த' என்னும் பாடலை, நிகழ்ச்சிகளில் தமிழ்த்தாய் வணக்கமாகப் பாடும் மரபினை முதன் முதலாகத் தோற்றுவித் தார்;

1913-ஆம் ஆண்டு முதற் கொண்டே பல்கலைக் கழகத்தில் தமிழ் கட்டாயப் பாடமாக ஆக்கப்படவேண்டும் என்று வற் புறுத்தினார்.

'வித்துவான்' என்னும் வட மொழிப்பட்டத்தை மாற்றித் தமிழ் படித்தவர்க்குத் தமிழி லேயே 'புலவர்' என்று பட்டம் அளிக்க வேண்டும் என்றுஅண்ணா மலைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவில் எடுத்துரைத்து வெற்றி யும் கண்டார்.

ஸ்ரீமான்-ஸ்ரீமதிகள், அக்ரா சனாதிபதி - காரியதரிசிகள், நமஸ்காரம் - வந்தனோபசா ரங்கள் முதலிய பல வடமொழிச் சொற்களுக்கு விடை கொடுத்து, திருவாளர்- திருவாட்டிகள், தலைவர் - செயலாளர்கள், வணக்கம்-நன்றிகூறல்கள் ஆக உலவச் செய்த சிறப்புடையவர்; ஜில்லாபோர்டு, தாலுக்கா போர்டு, பஞ்சாயத்து போர்டு, முனிசிபாலிட்டியாக இருந்தவற்றை நாட்டாண்மைக் கழகம், வட் டாண்மைக் கழகம், ஊராண் மைக் கழகம், நகராண்மைக்கழக மாக மாற்ற வழி வகுத்தவர்;

ஆண்டுதோறும் அரை நூறு புலவர்களையாவது உருவாக்கு வதற்கு வாய்ப்பாகப் புலவர் கல்லூரியைத் தோற்றுவித்தார்.

அறிவையும் ஆராய்ச்சியையும் அடித்தளமாகக் கொண்ட கருத் துப் பரிமாற்றங்களுக்காக, தமிழ்ப் பொழில் என்னும் திங்கள் இதழைத் தொடங்கினார்; பழந் தமிழர் இசைமரபைப் புலப்படுத் தும் விபுலானந்த அடிகளாரின் யாழ்நூல், தொல்காப்பியம், சொல்லதிகாரம் தெய்வச்சிலை யார் உரை, நெல்லை வருக்கக் கோவை, கரந்தைத் தமிழ்ச்சங்க வெள்ளிவிழா மலர், தமிழரசி குறவஞ்சி, நல்லூர் ஞானப் பிர காசரின் சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி, பரதசாத்திரம், பாரத சார வெண்பா, கச்சிக்கலம்பகம் யவனமஞ்சரி, இந்தியத் தல யாத்திரை முதலிய பல நூல் களும் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தின் வெளியீடுகளாகும்.

உமாமகேசுவரர் தமிழகக் கடைத் தெருவில் உள்ள ஆங்கி லப் பெயர்களை அகற்றித் தமிழி லேயே எழுதுவித்தார். இருப்புப் பாதை நிலையங்களின் பெயர்கள் நல்ல தமிழில் செம்மையாக எழுதப்பெற வேண்டுமென்று 1932லேயே தில்லித் தலைமை யகத்துடன் தொடர்பு கொண்டு வற்புறுத்தி வந்தார்.

சென்னை, அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழுக் களில் பல்லாண்டுகள் உறுப்பின ராகப் பணியாற்றித் தமிழ்ப் புலமையும், கீழ்க்கலை மொழி களுடன் சேர்ந்த தமிழ்க் கலை களும் சிறக்க வழி வகுத்தார்.

தமிழவேள் தமிழ் நலம் காப் பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார். திருவையாற்று அரசர்கல்லூரி, பல்கலைச் செல்வ ராகிய சரபோசியரசரால் பிராம ணர்களுக்கு வடமொழியை மட்டுமே பயிற்றுவிப்பதற்காகத் தோற்றுவிக்கப் பெற்றது. தமிழ் மாணவரும் அத்தகைய வாய்ப் பினைப் பெற வேண்டும் என்று விரும்பி, எதிர்ப்புகளுக்கிடையே பெருமுயற்சி செய்து, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் வித்து வான் படிப்பினை ஏற்படுத்தித் தமிழ் மாணவர்களும் இலவச மாக உணவும் உறையுளும் பெற் றுத் தங்கள் தமிழ்க் கல்வியைத் தக்கவாறு வளர்த்துக் கொள்ளும் அரியவாய்ப்பை, அப்போது மாவட்டக் கழகத் தலைவராக இருந்த சர். ஏ. டி. பன்னீர்ச் செல்வத்தின் பேருதவியுடன் பெற்றுத் தந்தமை, காலா காலத்திற்கும் அங்குப் பயிலும் தமிழ் மாணவர்களும் தமிழ் நலம் பேணுவோரும் நன்றியுடன் நினைந்துபோற்றத்தகும் தொண் டாகும்.

தமிழவேளின் புனிதம் போற் றிய பொதுநலத் தொண்டினால் தஞ்சைத்தரணி பல்துறையிலும் வளர்ச்சி பெற்றது. தஞ்சை வட் டாண்மைக் கழகத் தலைவராக 16 ஆண்டுகளும், தஞ்சைமாவட்ட ஆட்சிக் கழகத்தின் உறுப்பினராக 12 ஆண்டுகளும், அதன் இடைக் காலத் தலைவராகவும் நகராண் மைக்கழகத் தலைவராகப் பல ஆண்டுகளும் பணிபுரிந்தார். தஞ்சையில் கூட்டுறவு இயக்கம், கரந்தைத் திராவிடக் கூட்டுறவு வங்கி, கூட்டுறவு அச்சகம், நில அடமான வங்கி முதலிய பல நிறுவனங்களைத் தோற்றுவித் தார். அரசாங்க வழக்குரைஞ ராகவும் பணியாற்றினார்.

உமாமகேசுவரருக்கு, 1933 இல் அருட்டிரு ஞானியாரடிகள் தமது மணி விழாவின்போது 'செந்தமிழ்ப் புலவர்' என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கி வாழ்த்தினார்கள்; 1935-இல் பொதுநலத் தொண்டினைப் போற்றும் வகையில் அரசாங்கத் தார், 'அரசர் வெள்ளிவிழாப் பதக்கத்'தையும் 'இராவ்சாகேப்' என்னும் பட்டத்தையும் வழங்கிப் பாராட்டினார்கள். 1938 இல் கரந்தைத் தமிழ்ச் சங்க வெள்ளி விழாவின்போது 'தமிழவேள்' என்னும் பட்டத்தைத் தமிழறி ஞர்கள் சூட்டித் தம் நன்றிப் பெருக்கினைப் புலப்படுத்தி னார்கள்.

**சாதிக் கொடுமைகள் வேண்டாம் - அன்பு தன்னிற் செழித்திடும் வையம்**
**-பாரதியார்.**

உமாமகேசுவரர், வடநாட்டி லுள்ள பல்கலைக்கழகங்கள், மொழி வளர்ச்சி மன்றங்கள், மக்கள் முன்னேற்ற இயக்கங்கள் முதலியவற்றின் செயல்திறத் தைக் கண்டறிவதற்காக 1941இல் தம் வடபுலப் பயணத்தை மேற் கொண்டார். கல்கத்தா, காசி, சாரநாத் முதலிய இடங்களில் காணவேண்டியவற்றைக் கண்டு, பிரயாகையில் நீராடி அரித்து வார் போகும் வழியில் காய்ச்சல் காணவே, அயோத்திக்கருகி லுள்ள பைசாபாத் மருத்துவ மனையில் சேர்க்கப் பெற்று அங் கேயே புகழுடம்பு எய்தினார்; சரயு ஆற்றங்கரையில் அவரு டைய பூதவுடல் எரியூட்டப்பட் டது.

அன்று தமிழவேள் உமாமகேசு வரர் விதைத்த தமிழ்த்தொண்டு இன்று வேரோடு விழுதுபல விட்டு விரிந்து பரந்த ஆலமர மாகக் காட்சி அளிக்கிறது.

# வாடிக்கையாளர்களின் இன்றையத் தேவை
# உயர்ந்த தரம்! நியாயமான விலை!!
# அத்தேவைகளைச் சிறப்பாகப் பூர்த்தி செய்யும் பணியில்
# டான்சியின் இணையற்ற சேவை.





ஏற்றமிகு தோற்றம்! எழிலார்ந்த படைப்புகள்!
உயர்ந்த தரம்! நியாயமான விலை!
இல்லத்திற்கும், அலுவலகத்திற்கும் எழில் கூட்டும் கட்டில், மேஜை, நாற்காலி, சோஃபா, மடக்கு நாற்காலி, எஃகு ரேக்கு, பீரோ போன்ற சாதனங்களுக்கு மட்டுமல்ல டான்சி—
தொழிற்துறைக்கேற்ற இரும்புக் கட்டுமானங்கள், இயந்திரங்கள், கோபுரங்கள், இரும்பு வார்ப்படங்கள், செப்புக்கம்பிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், பதனிடப்பட்ட பாங்கான தோல், தோலினாலான பொருட்கள், பாதுகாப்புக் காலணிகள், கையுறைகள், சி.ஐ. பைப்புகள், எனாமல் பூசப்பட்ட கம்பிகள், ஃபிரஞ்ச் பாலிஷ், மற்றும் அதைச் சார்ந்த பொருட்களையும் தயாரித்தளிப்பதில் **தனிப்புகழ்** பெற்ற நிறுவனம் டான்சி!
டான்சியின் 55 தொழிற்கூடங்களில் ஆண்டு ஒன்றுக்கு ரூ 16 கோடிக்கும் மேற்பட்ட தொழிற்துறைக்கும் வீட்டு உபயோகத்திற்கும் ஏற்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

*நினைவிருக்கட்டும்—தரத்திற்கோர் சின்னம் டான்சி!*

## டான்சி
## தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014
தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI




'மக்களாட்சி' என்பது மனித இனம், அரசியல் பரிணாமம் காரணமாகப் பெற்றெடுத்த அரிய ஆட்சிமுறை.

இந்திய அரசியலில் துருவ நட்சத்திரமாகத் திகழ்ந்த இரு மாபெரும் தலைவர்கள் மக்களின் சமூகப் பொருளாதார வாழ்வில் மாற்றங்களை விளைவிக்கும் ஆற்றல், திறன், சக்தி மக்களாட்சி முறையில் அடங்கி இருப்பதை உணர்ந்து, அதனை நாட்டு மக்களுக்குத் தெளிவுபட எடுத்துரைத்தார்கள்.

''இரத்தம் சிந்தாமல் சமூகப் பொருளாதார வாழ்வில் மாறுதல்களைக் கொண்டு வரும் ஒரு அரசு முறை''

—என்று மக்களாட்சி என்பதற்கு விளக்கம் கொடுத்தார் அரசியல் மேதை டாக்டர் அம்பேத்கார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருபடி மேலே சென்று, ''ஜனநாயகம் என்பது ஒரு அரசு முறை மட்டுமல்ல, வளமான புதுவாழ்விற்கு அது ஓர் அன்பழைப்பு''

"Democracy is not a form of Government alone; It is an invitation to a new way of life".

என்று குறிப்பிட்டார்.

இந்திய நாட்டில் அடித்தளத்தில் அழுத்தி வைக்கப்பட்டிருந்த மக்களிடையே தோன்றி அவர்களின் மன எழுச்சிக்காகப் போராடிய இந்த இரு பெரும் தலைவர்கள் ஜனநாயக அமைப்பிற்குக் கொடுத்த விளக்கங்களை உள்ளடக்கமாகக் கொண்டு திட்டங்கள் தீட்டிச் செயலாற்றி வருகிறது, தமிழ்நாடு அரசு.

இதற்கு ஆதாரம் எங்கும் தேடி அலைய வேண்டியதில்லை. ஆளுநர் உரை நிதிநிலை அறிக்கை-அரசின் செயல்விளக்கக் குறிப்பு-குறுகிய காலத்தில் அரசின் அறிவிப்புகள் பெற்றிருக்கின்ற செயல்வடிவங்கள் ஆகியவற்றை ஆராய்ந்தாலே போதுமானது.

வறுமைக்கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள் வாழ்வு நிலையை உயர்த்துதல் அடித்தள மக்களைக் கரையேற்றுதல்-வளமற்றவர்களின் வாழ்விலே முன்னேற்றம் ஆகியவற்றை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு முனைப்புடன் பணியாற்றி வருகிறது நமது அரசு. அது, நடைமுறைப்படுத்தும் நல்ல திட்டங்களில் அந்தக் குறிக்கோள் வெளிப்படுகின்றது.

**வேலைக்கு உணவுத் திட்டம் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்:**

''வறுமை என்பது வாலிபர்களை வாழ்வதற்கு முன்பும், வயதானவர்களைச் சாவதற்கு முன்பும் அழித்து விடுகின்ற கொடிய நோயாகும்'' என்றார் ஒரு மேனாட்டு அறிஞர். இந்த நோய் கிராமப்புறங்களில்தான் அதிகமாகப் பரவிக் கிடக்கின்றது. சரியாகச் சொல்லவேண்டுமானால், நகரப்புறங்களில் நிலவும் வறுமைக்கு ஓரளவு கிராமப்புறத்து வறுமைதான் காரணமாகும். இந்திய நாட்டில் வறுமையைப் பற்றி ஆராய்ந்து தாண்டேகர், ராத் என்ற இரண்டு பேராசிரியர்கள், நகரப்புறங்களில் வறுமையில் வாடும் ஏழைகளில் 20 சதவிகிதத்தினர் கிராமப்புறங்களில் இருந்து வாழ்வுக்கு வழிதேடி, நகரங்களைச் சென்றடைந்தவர்கள்தான் என்று கருத்துத் தெரிவித்துள்ளார்கள். அதனால்தான், கிராமப்புறத்தில் நிலவும் வறுமைக்கெதிராகவும், அதற்குக் காரணமான வேலையில்லாத் திண்டாட்டத்தையும் எதிர்த்து நேரடித் தாக்குதல் கொடுத்துள்ளது தமிழக அரசு. 'வேலைக்கு உணவுத் திட்டம்', 'வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்' அதன் முதற்கட்டமாகும்.

தமிழ்நாட்டில் வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் சென்ற ஆண்டு 43,199 வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 32,904 வேலைகள் முடிக்கப்பட்டன.

23 இலட்சம் பேர்களுக்குமேல் வேலை செய்து மொத்தம் 142 இலட்சம் உழைப்பு நாட்கள் பணியாற்றி, 9.27 கோடி ரூபாய் மதிப்புள்ள வேலைகளைச் செய்துள்ளனர்.

50,639 டன்கள் அரிசி பயன்படுத்தப்பட்டுள்ளன. வேலைவாய்ப்புறுதித் திட்டத்தின் கீழ் 1,89,000 பேருக்கு வேலை அளிக்கப்பட்டது.

## மாவட்ட வளர்ச்சிப் பணிகள் :

திருச்சி மாவட்டத்தைப்பொறுத்தவரை 'வேலைக்கு உணவுத் திட்டம்'' 'வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்'' ஆகியவற்றின் கீழ் 1979-80-ஆம் ஆண்டு 1313 பாசன வசதிப் பணிகள், 3856 சாலை அமைப்புப் பணிகள் உட்பட 7087 பணிகள் நிறைவேற்றப்பட்டன.

30.6.1980 வரை சுமார் இரண்டு இலட்சம் பேர்களுக்கு

வேலை வாய்ப்பளித்து. 1.71 கோடி ரூபாய் பெறுமானமுள்ள 8260 பணிகள் செய்து முடிக்கப்பட்டன. இவற்றிற்காக 8275 டன் அரிசி வழங்கப்பட்டது.

வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் வேலை கேட்டு 39,570 பேர் தங்களின் பெயரைப் பதிவு செய்துகொண்டார்கள். 30.6.80 வரை அவர்களில் 27,534 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

**கிராமத் தன்னிறைவுத் திட்டம் :**

''நீங்கள் கண்களைத் திறந்து பார்க்க மறுப்பீர்களேயானால், நம்மில் யாரும் விரும்பத்தகாத வகையில் பெரும் புரட்சி உருவாகும். அதை எதிர்த்து நிற்க நம்மால் இயலாது''

"If you do not open your eyes there will be a Revolution in a form which none of us might desire but none of us would be able to resist".

நாட்டு மக்களின் வாழ்வில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளைக் கருத்திற்கொண்டு பொருளாதார மேதை திரு கே.டி.ஷா அவர்கள் விடுத்த அறிவுரை அடித்தளத்து மக்கள் நலன் புறக்கணிக்கப்பட்டால் ஏற்படக்கூடிய விளைவுகளைச் சுட்டிக் காட்டுகிறது. இந்த ஏழை எளிய மக்கள் கிராமப்புறங்களிலே வாழும் தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் நோக்கத்தோடு, வகுக்கப்பட்டதுதான் தமிழக அரசின் கிராமத் தன்னிறைவுத் திட்டம். வறுமைக் கோட்டிற்கும் கீழே இருக்கும் குடும்பங்கள் ஒரு குறிப்பிட்ட வாழ்க்கைத் தரத்தைப் பெற்றிட வழிவகை செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும், அரசின் உதவியுடன் செயலாக்கப்பட்டு வரும் பொது மற்றும் சிறப்புப் பணிகளைத் தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் முக்கியத்துவம் கொடுத்து நிறைவேற்றுவது தன்னிறைவுத் திட்டத்தின் இலட்சிய இலக்காகும்.

''நமது நாட்டிலுள்ள கிராமங்கள் அனைத்தும் வளமான நல்வாழ்வு பெற்று ஒவ்வொன்றும் ஒரு தனி குடியரசாக விளங்க வேண்டும்'' என்று குறிப்பிட்ட அண்ணல் காந்தியடிகளின் எண்ணங்களுக்கு எழில் உருவம்கொடுக்கசங்கற்பம் ஏற்று சாதனை புரிந்துவரும் நமது தமிழக அரசு தன்னிறைவுத் திட்டத்தைத் தீவிரமாக நடைமுறைப்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு இந்தத் திட்டம் 69 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டது. இந்த ஆண்டு மேலும் 100 ஊராட்சி ஒன்றியங்களுக்கு விரிவுபடுத்த வழிவகை காணப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்காக இந்த ஆண்டிற்கு மட்டும் ரூ. 10 கோடி வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. திருச்சி மாவட்டத்தில் வேப்பூர், ஆலத்தூர், ஜெயங்கொண்டம், உப்பிலியாபுரம், க. பரமத்தி ஆகிய ஐந்து ஊராட்சி ஒன்றியங்களிலும் தன்னிறைவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை 55,568 என்று கணக்கிடப்பட்டுள்ளது. அவர்களுக்குப் பல்வேறு திட்டங்களின் கீழ் உதவிகளும், வேலை வாய்ப்பும் அளிக்கப்பட்டுள்ளன.

தன்னிறைவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஐந்து ஊராட்சி ஒன்றியங்களில் குடிநீர் வசதி, சாலை வசதி, பள்ளிக்கூட வசதி, சிறுபாசன வசதிகள், மருந்தகங்கள் மற்றும் தாய்சேய் நல விடுதிகள் போன்ற 145 வளர்ச்சிப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. வேலைக்கு உணவுத்திட்டம், வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் 31.55 இலட்ச ரூபாய் செலவில் 1,527 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தில் இவ்வைந்து ஊராட்சி ஒன்றியங்களில் 1979-80-ஆம் ஆண்டின் 1,245 பேருக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது. அவர்களில் தாழ்த்தப்பட்டவர்கள் 1,025 பேர்.



முதியோர், ஆதரவற்ற கைம்பெண்கள், உடல் ஊனமுற்றோர்களுக்கான உதவித் தொகை பெற்றவர்களின் எண்ணிக்கை 888. விவசாயத்திற்கு நிலம் ஒப்படை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,055. அதில் தாழ்த்தப்பட்டவர்கள் 703 பேர். ஒப்படை செய்யப்பட்ட நிலங்களின் மொத்தப் பரப்பளவு 740.54 ஏக்கர். வீட்டு மனைப்பட்டா பெற்றவர்களின் எண்ணிக்கை 926. மேலும் அரிசன நலத்திட்டத்தின் கீழ் வீட்டு மனைப்பட்டா பெற்றவர்களின் எண்ணிக்கை 174பேர். திருச்சி மாவட்டத்தில் ஐந்து ஊராட்சி ஒன்றியங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தன்னிறைவுத் திட்டத்தை இந்த ஆண்டு கரூர், தாந்தோணி, குளித்தலை, முசிறி, துறையூர், தாத்தையங்கார்பேட்டை, தா.பழூர் ஆகிய ஏழு ஊராட்சி ஒன்றியங்களில் விரிவுபடுத்த அரசு அனுமதியளித்துள்ளது.

**குடிசைகளுக்கு மின் ஒளி வழங்கும் திட்டம் :**

நாடு முழுமையும் மின்மயமாவது பொருளாதார வளர்ச்சிக்கும் நாட்டில் சமதர்மத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் நல்ல படிக்கட்டுகளாகும். அதனால்தான் ''மின்சார இணைப்புப் பெறாத குடிசைகளே கிராமங்களில் இல்லை'' என்ற நிலை உருவாகிட நமது அரசு செயலாற்றி வருகிறது.

இதுவரை தமிழ்நாட்டில் 1.93 இலட்சம் அரிசன மற்றும் ஏழைகளின் குடிசைகளுக்கு இத்திட்டத்தின் கீழ் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளன.

திருச்சி மாவட்டத்தில் இத்திட்டத்தின்கீழ் இதுவரையில் 20,892 குடிசைகளுக்கு மின்னொளி வழங்கப்பட்டுள்ளது. 1980-81-ஆம் ஆண்டில் 9,225 குடிசைகளுக்கு மின்னொளி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வறுமைக்கோட்டிற்குக் கீழே தவழும் மக்களின் வாழ்வு முன்னேற்றம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது, தமிழக அரசு. அதன் காரணமாக நல்வாழ்வுத் திட்டங்களனைத்தும் நல்லவண்ணம் செயல்படுத்தப்படுகின்றன. அரசின் சிந்தனை வேகத்திற்கேற்ப நிர்வாக இயந்திரம் செம்மையாகச் சுழல்கிறது. விளைவு: வளர்ச்சிப் பாதையில் திருச்சி முனைகிறது! திருச்சி மட்டுமா? தமிழகமே அப்பாதையில் ஏறுநடைபோடுகிறது!

கற்களைப் பயன்படுத்தித் தீ உண்டாக்கவும், தற்காப்புக்கான ஆயுதங்களையும், அன்றாட உபயோகத்திற்கான பொருட்களைச் செய்து கொள்ளவும் மனிதன் முற்பட்ட காலம், கற்காலம் எனப்படுகிறது.

மனித இனம் சிறிது சிறிதாக மேம்பாடுற்று, உலோகத்தின் பயனறிந்து, கற்களைக் கைவிட்ட காலம் உலோக காலம் என்று குறிப்பிடப்படுகிறது.

பொன்னின் பயனுணர்ந்த இக்காலம் பொற்காலம் என்று கூறப்படலாம் என்றாலும், இந்த நவீன யுகத்தைப் 'பிளாஸ்டிக் யுகம்' என்று கூறுவதே சாலப் பொருத்தமுடையதாக இருக்கும்.

அந்த அளவுக்குத் துறைதோறும் பிளாஸ்டிக் பொருட்கள் பயனுக்கு வரத் தொடங்கி விட்டதை நாம் பார்க்கிறோம்.

கரண்டி, கூடை, சல்லடை, வாளி, தட்டு, குவளை, தம்ளர், டப்பா, சீசா, சாய்வு நாற்காலி, நாற்காலி, மோடா, பை, மின் விசிறி போன்ற வீட்டுச் சாமான்களுக்கு மட்டும் இக்காலத்தில் பிளாஸ்டிக் பயன்படுவதில்லை.

மருத்துவமனைகளிலும், தொழிற்சாலைகளிலும்கூட இரும்பு பிடித்திருந்த இடத்தின் பெரும்பங்கை இப்போது பிளாஸ்டிக் பிடித்து விட்டது.

வெப்பத் தடை ஆற்றலுடையதாகவும், வெப்பமூட்டப்பட்ட நிலையில் தேவையான விதத்தில் உருவாக்கத் தக்கதாகவும், வசீகரமிக்கதாகவும், இலேசானதாகவும், சிக்கனச் செலவில் கிடைத்துவிடக் கூடியதாகவும் முன்னேறியுள்ள 'பிளாஸ்டிக்- வானில் பறக்கும் விமானத்திலிருந்து, கடலில் மிதக்கும் சாதாரண மீன்பிடிப் படகுவரை பயன்படுகிறது.

படச் சுருள்கள் (Films), தகடுகள் (Flats), நார்ப் பொருள்கள் (Fibres), தண்டுகள் (Rods) குழாய்கள் (Pipes, Tubes), ஒயர்கள் (Cables), அடுக்குத் தகடுகள் (Laminates) கூட்டினைப்பாலான தோல் (Synthetic Leather) ஆகியவைகளாகவும் இன்றைய தினம் உருவாகி வரும் பிளாஸ்டிக் கானது, தொழில் நுணுக்கத்துறையிலும் பெரும் பயன் உடையதாகி விட்டதை யாராலும் மறுக்க முடியாது.

இரும்புப் பொருட்களின் மேலேகூட, மின் தடை கருதி பிளாஸ்டிக் வண்ணங்களும், எனாமலும் இப்போது பூசப்பட்டு வருகிறது.

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பார்கள்

பிளாஸ்டிக் இல்லா ஊரில் குடியிருப்போர் யாராவது உண்டா? தெய்வங்களின் விக்கிரகங்கள்கூட அல்லவா இப்போது பிளாஸ்டிக்கில் உருவாகி ரேடியப் பூச்சோடு பிரகாசிக்கின்றன!

இப்படி 'கிடு கிடு' முன்னேற்றம் கண்டு வரும் பிளாஸ்டிக் பொருட்களைச் செய்வது எப்படி?

இதைப் பல்வேறு பிரிவுகளின் மூலம், முறைப்படி மாணாக்கர்களுக்குப் பயிற்றுவிக்கும் நல்ல பணியைச் செய்து வருவதுதான் 'சிப்பெட்' (The Central Institute of Plastics Engineering and Tools).

சென்னை, கிண்டியிலுள்ள தொழிற்பேட்டையில், *1968*-ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டதுதான் இந்த நிறுவனம்.

*1970* ஜூலை 25-ஆம் நாளன்று அப்போதைய கல்வியமைச்சரும் இப்போதைய நிதியமைச்சருமான மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் தலைமையில், அப்போதைய மாண்புமிகு மத்திய அரசாங்க அமைச்சர் திரிகுண சென் அவர்கள் இதனைத் துவக்கி வைத்தார்.

இதன் முதலாவது தலைவராகப் பொறுப்பேற்று நிர்வகித்தவர், அன்றைய மத்திய திட்டக் குழுவில் முக்கிய அங்கம் வகித்தவரும், இன்றைய மாண்புமிகு மத்திய நிதியமைச்சருமான திரு. ஆர். வெங்கட்ராமன் ஆவார். *(1969-71)*

அவருக்குப் பின்னர் இப்போது டாக்டர் பானர்ஜி இதன் கௌரவத் தலைவராக இருந்து வருகிறார். இவர் ரப்பர் தொழில் நுணுக்க மேதையாவார்.

ஐக்கிய நாடுகள் சபையின் வளர்ச்சித் திட்ட (UNDP) உதவியுடன் தொடங்கப்பட்ட இந்த நிலையத்தை மத்திய உறுப்பினர்கள் ஐவரும் மாநில அரசின் உறுப்பினர்கள் ஐவரும் கொண்ட குழு ஒன்று நிர்வகித்து வருகிறது. இதன் செயல்முறைகளைக் கண்காணித்துச் செம்மைப்படுத்தி வருகிறது.

பம்பாய், கல்கத்தா, டில்லி, அகமதாபாத் போன்ற இடங்

# சிறப்புறப் பணியாற்றும் 'சிப்பெட்'



களில்கூட இந்நிறுவனம் உண்டு. ஆனால் ஸ்கூட்டர் பாகங்கள், தொலைபேசி பாகங்கள், மின் விசிறி இறக்கைகள் போன்றவை இங்கேதான் சிறப்புறச் செய்யப் பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்று மதி செய்யப்படுகின்றன.

இப்படிப்பட்ட பொருட்களை இங்கே பண்பட்ட பொறியா ளர்கள், திறமைமிக்க பயிற்சி யாளர்களின் மேற்பார்வையில் பயிற்சி மாணவர்களே திறம்படச் செய்து வருகிறார்கள்.

அச்சு வார்ப்பு வரைபடப் (Mould design) பயிற்சிக்கென இங்கே சேர்க்கப்படும் மாண வர்கள் படிப்புக் காலம் ஓராண் டாகும்.

எந்திர-தயாரிப்புப் பொறி யியல் (mechanical production Engineering) அல்லது எந்திர நுணுக்கப் பொறியியல் துறைப் பட்டம், தொழில்துறை அனு பவம் போன்றவை இப்பயிற் சிக்கு வரும் மாணவர்களி டம் எதிர்பார்க்கப்படுகின்றன.

அச்சு வார்ப்புகளைச் (mould making ) செய்வதற்கான பயிற்சி, புதிய அச்சுகளைத் தயா ரித்தல், அச்சுகளுக்குப் பாலிஷ் கொடுத்தல், அச்சு வார்க்கத் தேவையான நுணுக்க எந்திரங் களைச் செய்தல் போன்ற சில கூறுகளாகப் பிரிக்கப்பட்டு இப் படிப்பு இரண்டாண்டுக் காலம் பயிற்றுவிக்கப்படுகிறது.

தொழில் நுட்பப் பயிற்சித் தேர்வு பெற்றோர், இயந்திரப் பிரிவிலாவது ஐந்தாண்டுக் காலப் பணி செய்த அனுபவம் ஆகியவை இதற்கான படிப்புத் தகுதிகளாகக் கோரப்படுகின்றன.

பிளாஸ்டிக் ரசாயனக் கலவைப் (Plastic processing) பயிற்சியும் இங்கே அளிக்கப்படுகிறது. இதற் கான பயிற்சிக் காலம் ஓராண்டு ஆகும்.

பொறியியல் தொழில் நுணுக் கம், ரசாயனத்துறைப் பட்டம், விஞ்ஞான அறிவு ஆகியவை இதற்கான தகுதிகளாக எதிர் பார்க்கப்படுகின்றன.

'சிப்பெட்' அமைவதற்கான எட்டு ஏக்கர் நிலம் தமிழக அர சால் அளிக்கப்பட்டது ஆகும். ஆனால், இங்கே பயிற்சி பெற வருகின்றவர்களில் தமிழ்நாட் டைச் சார்ந்தோரின் சதவிகிதம் மிகவும் குறைவாகவே இருப்பது ஒரு குறைபாடு'.

இங்கே பயிற்சியளிக்கப் பயன் படுத்தப்படுகின்ற முக்கிய இயந் திரங்கள் பெரும்பாலும் வெளி நாட்டிலிருந்து வரவழைக்கப் பட்டவைகளாகும். இவை 'ஏர் கண்டிஷன்' வசதி செய்யப்பட்ட அறைகளில் வைத்துப் பராமரிக் கப்படுகின்றன. அண்மையில் 'எச். எம். டி.' (HMT) நிறுவ னத்திலிருந்தும் சில இயந்தி ரங்கள் வரவழைக்கப்பட்டுள் ளன.

ஏறத்தாழ நூறு பேர், ஒவ் வோர் பயிற்சியாண்டிலும் இங்கே வந்து பயின்று பலனடை கிறார்கள். இவர்கள் தங்கிப் பயில விடுதி வசதியும் இங்கே உண்டு. தனியே சாப்பாட்டு அறை, விளையாடுமிடம், டெலி விஷன் பார்க்கத் தனியிடம், நூலகம் ஆகிய எல்லா வசதி களும் பயிற்சி மாணாக்கர்களுக் குச் செய்து தரப்படுகின்றன.

விடுதியினை ஒட்டியுள்ள கொடிபடர்ந்த குடிலில் மயில்கள் அகவும். செய்குளத்தில் வாத் துக்கள் நீச்சல் பழகும்.

''எப்போதும் எந்திரங்களுட னேயே பழகி வரும் மாணவர் களுக்கு, இதெல்லாம் மனமகிழ்ச்சி உண்டாக்குவதாக இருக்கும் என் பதனாலேயே இவ்வாறு வைத் திருக்கிறோம்'' என்றார்கள் 'சிப் பெட்'டின் முக்கிய அதிகாரிகள்.

இங்கே செய்யப்படும் பொருட்கள் எந்த அளவுக்கு வெப்ப ஆற்றல் உடையவை? தெறிப்பில்லாமல் உருவாக்கப் பட்டிருக்கின்றனவா? வேறெந்தக் குறையும் இல்லாமல் உருவாகி யுள்ளனவா?- என்பதையெல்லாம் கண்டறிய தனியொரு ஆய்வுக் கூடமும் (laboratory) இங்கே இருக்கிறது.

இத்தகைய அரும்பணி ஆற்றி வரும் 'சிப்பெட்'டின் பத்தாம் ஆண்டு நிறைவு விழா அண்மை யில் நடைபெற்றது. அதில் பங் கேற்றுச் சிறப்பித்த சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு ஜி. ஆர். தாமோதரன், பயிற்சி முடித்த மாணவர்களுக் குச் சான்றிதழ்கள் வழங்கிப் பாராட்டினார்.

'சிப்பெட்'டில் பயிற்சி முடித்து வெளிப்படும் மாணாக்கர்களுக்கு வளர்ந்துவரும் தொழில் உலகில் மிக நல்ல வரவேற்பு எப்போ துமே இருந்து வருகிறது.

—பி. எல். ராஜேந்திரன்



# வெள்ளி விழாக் காணும்....
# இயல் இசை நாடக மன்றம்



**வா**ழ்வு சிறிது, வளர்கலை பெரிது' என்று சொல்லப்படுகிறது. கலை, காலத்தையும் வென்று நிலைத்து நிற்கிறது. உலகக் கலைகள் யாவும் புகழ் வாய்ந்தவை, என்றாலும், தமிழகக் கலைகள் தனிச்சிறப்பு வாய்ந்தவையாகத் திகழ்கின்றன.

உலகப் புகழ் பெற்ற நமது நாட்டுக் கலைகளைப் பேணி வளர்த்து வரும் தலை சிறந்த நிறுவனமான தமிழ்நாடு இயல், இசை நாடக மன்றம், கடந்த 25 ஆண்டுகளாக அரும்பணி யாற்றி வருகிறது. அதன் வெள்ளி விழா ஆகஸ்ட் 10-ஆம் நாள் முதல் 17-ஆம் நாள் முடிய சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு மண்டபத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

ஆகஸ்ட் 10-ஆம் நாளன்று மேதகு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் விழாவைத் துவக்கி வைத்தார்; மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் விழாவுக்குத் தலைமை ஏற்றார், மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பாராட்டுரை வழங்கினார். மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் திரு ம. பொ. சி. அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

நாமகிரிப்பேட்டை திரு கே. கிருஷ்ணன் அவர்களின் நாயன இசையுடன் விழா துவக்கமாகியது.

விழாவுக்கு வந்திருந்தோரை, இயல் இசை நாடக மன்றத்தின் தலைவர் மாண்புமிகு நீதிபதி திரு பு. ரா. கோகுலகிருஷ்ணன் அவர்கள் வரவேற்றார். அவர் அப்போது குறிப்பிட்டதாவது :

''இந்த ஆண்டு முழுவதும் இயல் இசை நாடக மன்றத்தின் வெள்ளிவிழா மாவட்டம்தோறும் கொண்டாடப்பெறும்''

அடுத்து, வெள்ளிவிழா அறிக்கையையும்-விழாவுக்கு வந்திருந்த வாழ்த்துச் செய்திகளையும் மன்றச் செயலாளர் திரு டி. வி. நாராயணசாமி அவர்கள் படித்தார்.

பின்னர், விழாவைத் துவக்கி வைத்த மேதகு ஆளுநர் தமது உரையில் குறிப்பிட்டார் :

''தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் நுண்கலைகளின் வளர்ச்சிக்குத் தொண்டு செய்து வருவது மட்டுமல்ல - கலைஞர்களுக்கு - தன்னால் இயன்றவகை எல்லாம் உதவி செய்து வருகிறது.

''இசை தனிக் கவர்ச்சி பெற்ற ஒன்று. அது, சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்கும் தூதுவனாகப் பணிபுரிகிறது. மதம், சாதி, என்று சொல்லப்படுகின்ற எல்லாத் தடைகளையும் அது தகர்த்து எறிகிறது. நமது இந்திய நாட்டில் பல்வேறு மொழிகள் பேசப்பட்டு வந்தாலும், பல்வேறு பழக்க வழக்கங்கள் நடைமுறையில் இருந்து வந்தாலும், அவை அனைத்தையும் மீறிய ஓர் ஒருமைப்பாடு காணப்படுகிறதே, அதற்குக் காரணம் என்ன ? ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள இசை, நடனம், நாட்டியம் நுண் கலைகள் ஆகியவை உருவாக்கியிருக்கும் சாதனைதான் இந்த ஒருமைப்பாட்டுக்குக் காரணம்.''

பின்னர் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் இயல் இசை நாடக மன்றத்தின் வெள்ளிவிழா மலரை வெளியிட்டார். முதல் பிரதியை திருமதி எம். எல். வசந்தகுமாரி பெற்றுக் கொண்டார்.

பன்னிரண்டு கலைஞர்களுக்குப் பொன்னாடை அணிவித்துத் 'தனிப் பெரும் கலைஞர்கள்' என்ற சிறப்பு விருதை மாண்புமிகு முதல்வர் வழங்கினார்.

விருது பெற்றோர் விவரம் வருமாறு :

திருமதி ருக்மணி தேவி, திருமுருக கிருபானந்தவாரியார், திரு செம்மங்குடி சீனிவாசய்யர், திரு திருவீழிமிழலை சுப்பிரமணிய பிள்ளை, திருமதி கே. பி. சுந்தராம்பாள், திரு எம். கே. ராதா, திரு கே. சாரங்கபாணி, திருமதி டி. பாலசரசுவதி, திருமதி டாக்டர் எம்.எஸ். சுப்புலட்சுமி, திருமதி எஸ். ஆர். ஜானகி, திரு பாலக்காடு மணி அய்யர், திருமதி சந்திரா அம்மையார்.

இவர்களில், திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களும் திருமதி கே. பி. சுந்தராம்பாள் அவர்களும் நேரில் வரவில்லை. திருமதி பால சரசுவதி வெளிநாடு சென்றிருந்தமையால் அவருக்குப் பதிலாக அவரது சகோதரரும், திரு கே.சாரங்கபாணிக்குப் பதிலாக அவரது மனைவியாரும் விருதுகளைப் பெற்றுக் கொண்டனர்.

நலிந்த கலைஞர்களுக்குஆண்டு தோறும் வழங்கும் 500 ரூபாய் நிதி உதவியின் கீழ், பத்துக் கலைஞர்களுக்குப் பொற்கிழி வழங்கப் பெற்றது. இசைக்கலைஞர்களான திரு சுந்தரம் பிள்ளை,

—நிகழ்ச்சித் தொகுப்பு
தமிழ்ப்பித்தன்

# அஞ்சலக வங்கியின் மாபெரும் பரிசுத் திட்டம்

## ஆண்டுக்கு இரு முறை
## குலுக்கல்கள் ஜனவரியிலும் ஜூலையிலும் நடைபெறும்

## ரூ. 20.5 இலட்சத்திற்கு
## 11,116 பரிசுகள்

ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ லட்சத்திற்குக்
கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.

| | | |
|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ரூ. | 50,000 |
| 10 மூன்றாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ரூ. | 500 |
| 10,000 ஆறாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ரூ. | 50 |

ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசுக் குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5½% உயர் வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறாதவர்க்கும் அளிக்கப்படும்.

விவரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

இயக்குநர்,
தமிழ்நாடு அரசு சிறு சேமிப்புத்துறை,
சென்னை-600 002.

*விவரங்களுக்கு :*

இயக்குநர்,
சிறுசேமிப்புத் துறை,
சென்னை-600 002.

மண்டல தேசிய சேமிப்பு இயக்குநர்,
சென்னை-600 002.

ஆணையர், சென்னை மாநகராட்சி,
மற்றும் எல்லா
மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
உங்களுக்கு அருகாமையிலுள்ள
அஞ்சல் அலுவலகம்.

ADVT

திரு திருவாரூர் ராமசாமி, மருத்துவக்குடி திரு எஸ். ராஜகோபால அய்யர் ஆகியோர், நாடகக் கலைஞர்களான திரு பி. எஸ். வெங்கடாசலம், திரு டி. பி. பொன்னையா, திரு வாசுதேவ முதலியார், திருமதி பார்வதிசந்திரஹாசன் ஆகியோர், ஆர்மோனிய இசைக்கலைஞர் திரு சி. எஸ். கோபாலகிருஷ்ணன், வயலின் கலைஞர் திருதனபால், பரதநாட்டியக் கலைஞர் திருமதி பட்டம்மாள் ஆகிய 10 கலைஞர்களுக்கு முதல்வர் அவர்கள், முதல்வர் நிதியிலிருந்து மேற்கொண்டு ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அவரது அறிவிப்பு, கலைஞர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் மிகுந்தமகிழ்ச்சியை உருவாக்கியது.

பின்னர், மன்றத்தின் இந்நாள் அலுவலர்கள் பதினான்கு பேர்களுக்கும் முன்னாள் அலுவலர்கள் பதினைந்து பேர்களுக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கினார் மாண்புமிகு முதல்வர்.

பின்னர், மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம வீரப்பன் அவர்கள் கலைஞர்களைப் பாராட்டிப் பேசினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''கலைஞர்கள் எப்போதும் பிறரால் ஊக்குவிக்கப்பட வேண்டியவர்கள்; அவர்கள் எத்தகைய சிறந்த கலைஞர்களாக இருப்பினும், ஊக்குவிக்கப்பட்டால்தான் அவர்கள் வளர்ச்சி பெறமுடியும், ஒளி வீசித் திகழ முடியும். தமிழகத்தில், இந்தப் பணியைத் தமிழக அரசே இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாகக் கலைஞர்களுக்கு நல்கிவருகிறது.''

''வரலாற்றை நாம் எப்போதும் சரிவர எழுதிவைப்பதில்லை. தமிழ் நாடக வரலாறு உருவாக்கப்பட வேண்டும்.''

பின்னர், மாண்புமிகு முதல்வர் தமது தலைமை உரையை ஆற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டார் :

'நலிந்த நிலையில் உள்ள கலைஞர்களுக்குப் பொற்கிழியாக இங்கே 500 ரூபாய் வழங்கப்பட்டது. நியாயமாக 3 வேளை உண்ண இந்தப் பணம் ஒரு மாதத்திற்குப் போதுமா ?

"ஆனால் அவர்கள் இந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்ட போது அவர்கள் அடைந்த மகிழ்ச்சியைக்கவனிக்கவேண்டும்.

"பணத்தைப் பற்றி நினைக்காமல் நம்மை மதிக்க-நினைவுபடுத்த தமிழக மக்கள் தயாராக இருக்கின்றனரே என்று அறிந்து மகிழ்ச்சி கொள்கின்றனர்.

"கலைஞர்கள் யாராக இருந்தாலும் சரி - நடிகராக இருந்தாலும் நாட்டியமாடுபவராக இருந்தாலும், இசைவல்லுநராக இருந்தாலும் அவர்களை மக்கள் மதிக்கும்போது பாராட்டும்போது அவர்களுக்குத் திருப்தி ஏற்படுகிறது.

"இதுதான் நாம் அவர்களுக்கு அளிக்கும் ஊட்டச்சத்து ஆகும். பணத்தால் அல்ல.

"பிறரால் பாராட்டப்படுகிறோம். மதிக்கப்படுகிறோம். அந்த வகையில் நம் கலைத் தொழில் இருக்கிறது என்று எண்ணும் திருப்தி அவர்களுக்கு மேலும் ஊக்கத்தை அளிக்கும்.



"பாராட்டுவிழா நடத்தி கௌரவிக்கும் இந்தச் செயல் பாராட்டுக்குரியது.''

மன்றச் செயலாளர் நடிகமணி திரு டி. வி. நாராயணசாமி அவர்கள் நன்றி தெரிவிக்க, விழா இனிது நிறைவேறியது.

ஆகஸ்ட் பத்தாம் நாள் முதல் 17-ஆம் நாள் முடிய ஒவ்வொரு நாள் மாலையிலும்பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

ஆகஸ்ட் 15-ஆம் நாளன்று, மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திருராஜாராம் அவர்கள் தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் கருத்தரங்கைத் துவக்கி வைத்தார்.

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் சட்டமன்ற மேலவை துணைத் தலைவர், புலமைப்பித்தன், ஆகியோர் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

கருத்தரங்கின் துவக்கத்திற்கு முன்னர் கொத்தமங்கலம் சு. விசுவநாதன் அவர்களின் காந்தி மகான் கதை, வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது.

இயல்- இசை நாடக மன்றத்தின் வெள்ளி விழா - கண்டோர், கேட்டோர் அனைவரின் உள்ளங்களையும் கொள்ளை கொண்ட விழாவாக அமைந்தது.



வெள்ளிவிழாத் தொடக்க நாள் காட்சிகள் 4 வது அட்டையில்....

அடுத்துப் பேசிய மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் திரு ம.பொ.சி. அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார் :

# காட்சி கண்காட்சியே!

இராசேந்திரன்—

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வெள்ளிவிழா!

பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்திலே, போற்றிப் புகழத்தக்க விதத்தில், நடைபெற்ற ஏழு நாட்களும்; கலையுணர்வு மிக்கார்க்குப் பெருமகிழ்ச்சி சூழும் நாட்களாக விளங்கின சென்னை மாநகரில்.

1955-ல், 'மெட்ராஸ் ஸ்டேட் நாடக அகாடமி' என்ற பெயரில் அரசு அரவணைப்பில் அரும்பிய இந்தக் கலை நிறுவனம் கடந்த இருபத்தைந்து ஆண்டுக் காலமாக ஆற்றிவரும் கலைத்தொண்டு இணையற்றதாகும். இயல், இசை நாடகம், நாட்டியம், திரைப்படம், கிராமியக் கலைகளின் வளர்ச்சிக்கு ஏற்றமும் எழுச்சியும் உண்டாக்கிட... இந்த இயல் இசை நாடக மன்றத்தின் செயல்வேகம் மெச்சத்தக்க புயல்வேகம் என்றால் சரியாக இருக்கும்.

அரசவைக் கலைஞர், கலைமாமணி திரு நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் குழுவினரின் நயம் மிகுந்த நாதசுரம்...செல்வி ஸ்ரீ[illegible]யா, செல்வி வைஜயந்திமாலாவின் பாங்குமிகு பரதம்... சண்டிகார் திருமதி ஷோபா கோசர் குழுவினரின் களிப்பூட்டும் கதக்...திரு எம்பார் விஜயராகவாச்சாரியாரின் அருமை மிகுந்த 'திருநீலகண்டர்' காலட்சேபம்.... பூரணம் நியூ தியேட்டர்ஸாரின் 'அடிமைகள்' என்கிற அற்புத நாடகம்..செல்வி ஷோபா நாயுடுவின் கச்சிதமான குச்சிப்புடி நடனம்....அரசவைக் கலைஞர், கலைமாமணி திருமதி வைஜயந்திமாலா பாலியின் தரமான பரதம்....பெங்களூர், கலைமாமணி திரு. டி. சி. சுந்தரமூர்த்தி குழுவினரின் அற்புதப் புரவியாட்டம், கிராமிய நடனங்கள் அசாம் மாநில, ஒரிசா மாநிலக் கலைக்குழுவினரின் நெஞ்சைக் கவரும் நிகழ்ச்சிகள்...விழுப்புரம் திரு நல்லுசாமி குழுவினரின் திருமுருகன் சேவடி போற்றும் காவடியாட்டம், கரக ஆட்டம்... திரு கொத்தமங்கலம் விசுவநாதன் குழுவினரின் காந்திமகான் கதை. அரசவைக் கலைஞர், கலைமாமணி திரு மதுரை சோமசுந்தரம் குழுவினரின் இனிக்கும் இசை நிகழ்ச்சி..கர்நாடக மாநில கலைக்குழுவினரின் 'நயி கதே' நாடகம்:.. ஆடற்கலைக்கழகு தேடப்பிறந்த செல்வி சுவர்ணமுகியின் நாட்டியம்'' ஹெரான் தியேட்டர்ஸாரின 'மாவீரன் அலெக்சாண்டர்' நாடகம்.... திருமதி சேலம் ஜெயலட்சுமியின் வாய்ப்பாட்டு..கலைமாமணி திரு. முனிரத்தினம் தவில்..... டாக்டர், கலைமாமணி செல்வி பத்மா சுப்பிரமணியத்தின் சீர்த்திமிகு சிலப்பதிகார நடன நாடகம்....

விழா நடந்த நாட்கள் தோறும் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்திலே இப்படி பலதரப்பட்ட கலை நிகழ்ச்சிகள் எனப் பட்டியல் போட்டுக் காட்டப்பட்டிருந்தன.

ஆனால் ஒன்று—

அவற்றுக்கெல்லாம் மேலாக, நூற்றாண்டு விழா மண்டபத்திற்கு வருகை தந்த ஒவ்வொருவர் நெஞ்சையும் தொட்டிழுத்தது ஒன்று உண்டென்றால் அங்கே நுழைவாயிலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலையுலகப் புகழ்மணிகளின் திருவுருவப்பட, பழங்கால இசைக்கருவிகளின் வியப்புறத்தக்க கண்காட்சியே அது!

**படக் கண்காட்சி:**

இந்நாட்டு இங்கர்சால், தென்னாட்டு பெர்னாட்ஷா என்றெல்லாம் புகழ்குவித்த பேரறிஞர் அண்ணா அவர்களின் படத்தை மையமாகக் கொண்டு இடமும் வலமுமாக ரயில் வண்டித் தொடராக அமைக்கப்பட்டிருந்தது படக்கண்காட்சி.

ஏழிசை மன்னர் எம். கே. தியாகராஜபாகவதர், அவ்வை தி. க. சண்முகம், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, கந்தர்வகான எஸ். ஜி. கிட்டப்பா, நயினா பிள்ளை, பொன்னையா பிள்ளை, இசைமேதை ஜி. இராமநாதன், ஜெயம்மாள், தனம்மாள், வழுவூர் பட்டக சுந்தரம்பிள்ளை, பெங்களூர் நாகரத்தினம்மாள், எம். எம். தண்டபாணி தேசிகர், மாரியப்ப சுவாமிகள், வைத்தினாத பாகவதர், அரியக்குடி ராமானுஜ ஐயங்கார், திரையுலக மேதைகள் ராஜா சாண்டோ, எஸ். எஸ். வாசன், இயக்குநர் கே. சுப்பிரமணியம், டி. ஆர். சுந்தரம். நாடக மேதைகள், சி. கன்னையா, எம். ஜி. நடராஜ பிள்ளை, எம். எம். சிதம்பரநாதன், பி. எஸ். வேலுநாயர். திரையுலக முதல் கதாநாயகி டி. பி. ராஜலட்சுமி, நாட்டியாச்சார்ய வழுவூர் எஸ். மாணிக்கம் பிள்ளை, மீனாட்சி சுந்தரம் பிள்ளை, முத்துக்குமாரசாமி பிள்ளை, கே. எஸ். அனந்தநாராயணய்யர், இசை நாடக நடிகர் எம்.எஸ். தாமோதரராவ், இசைமேதை சிதம்பரம் வி. சபாபதி பிள்ளை முதலானோரின் திருவுருவங்கள், கலையுலகில் ஆட்சி செலுத்திய காலத்திய அவர்களது கம்பீரத்தை உணரவைப்பதாகத் திகழ்ந்தன.

'சின்னதோர் குழலுக்குள்ளே செகத்தையே உருட்டும்' இசைப்புலமை மிக்க நாதசுர மேதை டி. என். ராஜரத்தினம், இராமசாமி பிள்ளை, மதுரை பொன்னுசாமி பிள்ளை, வைத்தியநாத பிள்ளை, வீருசாமி பிள்ளை, காருகுறிச்சி அருணாசலம் நடேச பிள்ளை-தவில் மேதைகள் மீனாட்சிசுந்தரம், பஞ்சாபகேச பிள்ளை, கண்ணுசாமி பிள்ளை, பக்கிரியா பிள்ளை, கொன்னக்கோல் பக்கிரியா பிள்ளை ஆகியோரின் தோற்றங்கள் நாதசுர உலகில் அவர்கள் ஏற்படுத்திக் காட்டிய நல்ல பல மாற்றங்களை நினைவுகூர வைத்தன.

காலட்சேபம் செய்வதில் ஞானப் புகழ் பெற்றவர்களான எம்பார் ஸ்ரீரங்காச்சாரியார், சரஸ்வதி பாய்-வயலின் இசை வளர்த்த கிருஷ்ணய்யர், கோபால கிருஷ்ணய்யர்-புல்லாங்குழலிசை வல்ல பல்லடம் சஞ்சீவி ராவ், திருப்பாம்புரம் என். சாமினாத பிள்ளை, வீணை வித்வான் காரைக்குடி சாம்பசிவ ஐயர், கஞ்சிரா மேதை மாமுண்டியா பிள்ளை முதலானோர் முறுவலித்தனர் வண்ண ஓவியங்களாக.

கலையுலகில் தமிழ்மணம் பரவிடக் காரணமான தேசியக்



கவிஞர் பாரதியார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை, பாபநாசம் சிவன், கிருஷ்ணசாமி பாவலர், பாஸ்கரதாஸ், வசனகர்த்தா இளங்கோவன், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, சங்கரதாஸ் சுவாமிகள், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, செய்குத்தம்பி பாவலர். அருணாசலக் கவிராயர், எஸ்.டி. சுந்தரம் ஆகிய பல பெரும் பைந்தமிழ் மேதைகள் படமாகப் புன்னகைத்தார்கள்.

நாடக உலகில், திரையுலகத்தில்-நிகரற்று விளங்கிய நவாப் ராஜமாணிக்கம், காளி என். ரத்தினம், எம்.சி. முத்துகிருஷ்ணன், ஏ. பி. நாகராசன், பி. யூ. சின்னப்பா, வி. ஏ. செல்லப்பா, காசி விஸ்வநாத பாண்டியன், யதார்த்தம் டி. பி. பொன்னுசாமி பிள்ளை, பி. எஸ். கோவிந்தன் டி. ஆர். மகாலிங்கம், டி. எஸ். பாலையா, வி. நாகையா, பி. ஆர். பந்துலு, பி. எஸ். செட்டியார் ஆகிய பலரின் உருவங்கள் உயிரோவியங்களாகச் சித்தரிக்கப் பட்டிருந்தன.

**குறைகள் :**

கலைக்காகவே தமது வாழ்நாளெல்லாம் வகைபட இயங்கிய, இன்னும் பல மேதைகளின் உருவப்படங்களும் இந்தக் கண்காட்சியிலே அணி செய்தன. ஏராளமான மக்கள் இவற்றை நாள்தோறும் கண்டுகளித்தார்கள்.

'பழுத்த மரத்தில் கல்லடி இயற்கை' என்பது போல இதிலும் ஒரு குறைபாடு.

இரண்டொரு நட்சத்திரங்களின் பெயர்களைச் சொல்லி, ''அவர் படத்தைக் காணோமே.. இவர் படத்தைக் காணோமே'' என்று சில முதுபெரும் ரசிகர்கள் குறைபட்டுக் கொண்டது நம் காதில் விழுந்தது. நாம் அதை இயல் இசை நாடக மன்றச் செயலாளர் நடிகமணி திரு டி.வி. நாராயணசாமி அவர்களின் காதில் போட்டோம்.

இதற்கு அவரளித்த பதில்:

''கலைத்துறையில் நிகரற்று விளங்கிய இன்னும் பலரின் திருவுருவப் படங்கள் திறந்து வைக்கப்பட இருக்கின்றன. ஆண்டுதோறும் இருபது இருபத்தைந்து பேர்களின் உருவப்படங்கள் இப்படிப்பட்ட விழாக்களில் திறந்து வைக்கப்படுகின்றன. ஒரேயடியாக எல்லோருடைய படங்களையும் திறப்பது என்பது அவ்வளவு சாத்தியமில்லை. தவிரவும் இங்குள்ள இடவசதிக்கு ஏற்றபடிதானே நாங்கள் படம் மாட்ட வேண்டியிருக்கிறது!''

**இசைக் கருவிகள்:**

இயல், இசை, நாடகம் என்று தமிழ் மூன்று வகைப்படுவது போலவே இசைக் கலையும் மூவகையாகப் பிரிக்கப்படுகிறது. அவை ஆடல், பாடல், கொட்டு என்பவைகளாகும்.

ஆடலுக்கானாலும், பாடலுக்கானாலும், கொட்டுக்கானாலும் இசைவாத்தியக் கருவிகள் இன்றியமையாதவைகளாகும்.

குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி விளரி, தாரம் எனத் தமிழிசை ஏழாகக் கூறிக்கப்படுகிறது.

இதனையே வடநூலார் சட்சமம், ரிடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதம் என்று பெயரிட்டழைக்கின்றனர். இந்தப் பெயர்களின் முதலெழுத்துக்களின் கோவைதான் ச, ரி, க, ம, ப, த, நி என வரிசைப்படுத்தப்பட்டது.

தெற்கத்திய இசையோ, வடக்

கத்திய இசையோ, மேற்கத்திய இசையோ எதுவானாலும் — இசைக் கருவிகளின் துணையின்றி எந்த இசையுமே அவ்வளவாக எடுபடுவதில்லை. உண்மை.... வெறும் புகழ்ச்சியில்லை !

இப்படிப்பட்ட இசைக் கருவிகள் இந்தியாவெங்கும் நான்கு வகையினதாகப் பிரிக்கப் பட்டுள்ளது. மொத்த எண்ணிக் கையில் அவை ஏறத்தாழ 500 ஆகும். அவற்றில் தமிழகத்திலே மட்டும் வழக்காற்றிலும், வர லாற்றிலுமாகச் சுமார் 250 இசைக் கருவிகள் இருக்கின்றன.

துளைக் கருவிகள், நரம்புக் கருவிகள், தோல் கருவிகள், கஞ்சக் கருவிகள் என்ற அந்த நால்வகை இசைக் கருவிகளில் சில-இந்த இயல் இசை நாடக மன்ற வெள்ளிவிழாக் கண்காட்சி யிலே வைக்கப்பட்டிருந்தன.

இசைக்கருவிகள் தயாரிப்பதில் மேதையான கலைமாமணி திரு. பா. தாமோதரன் அவர்கள் அவற்றை நுணுக்கமாகவும் சிறப் பாகவும் உருவாக்கியிருந்தார்.

முகவீணை, வங்கியம், பெரு வங்கியம், திமிரி, ஆம்பற்குழல் நாதசுரம் பாரி, திமிரி நாதசுரம் (இரண்டரை கட்டை மத்திம சுதியுடையது) ஆகியவை இக் கண்காட்சியில் இடம் பெற்றி ருந்த சில இசைக் கருவிகளாகும்.

''இலக்கியங்களில் நாதசுரம் என்ற பெயர் எங்கேயும் காணப் படவில்லை; வங்கியம் என்று தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது'' என்று நமக்கு விளக்கும் திரு பா. தாமோதரன், ஆம்பற் குழலை எடுத்துக் காட்டி, ''இது இராமாயணத்தில் வருகிறது'' என்று பாடலையும் கூறி விளக்கி ''அதன்படி செய்தது'' என்றார்.

செங்கோட்டியாழ் பற்றி அவர் கூறியதாவது —''திருநீலகண்டர் முதன் முதலில் இதைத்தான் வாசித்தார்; பிறகுதான் 14 தந்தியுடைய சகோடயாழ் வாசிக்கலானார் என்று புராணத் தில் இருக்கிறது. திருஎருக்கத்தம் புலியூர் கோயில் சிற்பத்தில் இதற் கான முன்மாதிரி கிடைத்தது.''

புதுக்கோட்டைக்கு அருகி லுள்ள திருமயத்தில் - நாரதர் வாசிப்பது போலச் சித்தரிக்கப் பட்டுள்ள மகரயாழும் இந்தக் கண்காட்சியில் செய்து வைக்கப் பட்டிருந்தது.

வீணை, 18 வகையினதாகும். அதில் 'பஞ்சகி' என்பது ஒரு வகை. ஐந்து தந்திகளை உடை யது இது. அதுவும்; மகதி வீணை யும், மயூர வீணையும் இயல் இசை நாடக மன்ற வெள்ளி விழாக் கண்காட்சியை அலங் கரித்தன.

மதுரை,கும்பகோணம் கோயில் சிற்பங்களில் உள்ளதைப் பார்த்து அதன்படி செய்யப்பட்டது தானாம் மகதி வீணை. இது இரண்டே தந்திகள் உடையது.

மயில்போல் வடிவுடைய மயூர வீணையோ ஏழு தந்திகள் உடையதாகும்.

இவை தவிர—
உடுக்கை
எடக்கை
ஜெண்டா
திமிலா
வலம்புரிச் சங்கு
இடைச்சுருங்கிப் பறை
துடி
ஒருகட் பறை,
பதாங்கம் (பாங்கோ டிரம்ஸ் போன்றது)
உபாங்கம்,
குடமுழவு,
தன்னுமை (மண்ணால் செய் யப்பட்ட மிருதங்கம்)
புஷ்கரம் (3 முகங்களுடைய மிருதங்கம்)
—ஆகிய பண்டைத் தமிழகத் துப் பாட்டிசைக் கருவிகள் இக் கண்காட்சியிலே அணி செய்தன. காண்போர்தம் மனங் கவர்ந் தன !

## பாரதியின் முதற் பாடல்

### தனிமை இரக்கம்

குயிலனாய்! நின்னொடு குலவியின் கலவி
பயில்வதிற் கழித்த பன்னாள் நினைந்துபின்
இன்றெனக் கிடையே எண்ணில் யோசனைப்படும்
குன்றமும் வனமும் கொழிதிரைப் புனலும்
மேவிடப் புரிந்த விதியையும் நினைத்தால்
பாவியென் நெஞ்சம் பகீரெனல் அரிதோ?
கலங்கரை விளக்கொரு காவதம் கோடியா
மலங்குமோர் சிறிய மரக்கலம் போன்றேன்
முடம்படு தினங்காள்! முன்னர்யான் அவளுடன்
உடம்பொடும் உயிரென உற்றுவாழ் நாட்களில்
வளியெனப் பறந்தீர் மற்றியான் எனாது
கிளியினைப் பிரிந்துழிக் கிரியெனக் கிடக்கும்
செயலையென் இயம்புவல் சிவனே!
மயலையிற் றென்றெவர் வகுப்பரங் கவட்கே?

மதுரை 'விவேகபாநு' மாத இதழில் 1904 ஆம் ஆண்டு ஜூலையில் முதன்முதலில் அச்சில் வெளிவந்த கவிதை.





மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை



பரிதிமாற் கலைஞர்



சங்கரதாஸ் சுவாமிகள்



முத்துசாமிக் கவிராயர்



செய்குத்தம்பிப் பாவலர்



ப. சம்பந்த முதலியார்



எம். கந்தசாமி முதலியார்



தெ.பொ. கிருஷ்ணசாமிப் பாவலர்



பாரதியா



பாரதிதாசன்

# மறைந்த கலை மேதைகள்



நாமக்கல் கவிஞர்



கவிமணி



மதுரகவி பாஸ்கரதாஸ்



மு. வரதராசனார்



நீ. கந்தசாமிப் பிள்ளை



எஸ். டி. சுந்தரம்



மதுரை பொன்னுசாமிப் பிள்ளை



திருமருகல் நடேசபிள்ளை



செம்பொன்னார் கோவில் ராமசாமி பிள்ளை



சிதம்பரம் வைத்யநாத பிள்ளை.



டி. என். ராஜரத்தினம் பிள்ளை



பி. எஸ். வீருசாமி பிள்ளை
காருகுறிச்சி அருணாசலம்
நீடாமங்கலம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை
பஞ்சாப கேசப் பிள்ளை
அம்மாசத்திரம் கண்ணுசாமி பிள்ளை



பக்கிரியா பிள்ளை
தஞ்சை பொன்னையா பிள்ளை
காஞ்சிபுரம் நயினா பிள்ளை
செம்பை வைத்யநாத பாகவதர்
அரியக்குடி ராமானுஜய்யங்கார்



சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை
வழியூர் பாட்டக சுந்தரம் பிள்ளை
வீணை தனம்மாள்
காரைக்குடி சாம்பசிவ அய்யர்
மகாராஜபுரம் விசுவநாத அய்யர்



முசிறி சுப்ரமண்ய அய்யர்
மதுரை மாரியப்ப சுவாமிகள
விளாத்திகுளம் சுவாமிகள்
எம். எம். தண்டபாணி தேசிகர்
ஜெயம்மாள்



பெங்களூர் நாகரத்னம்மாள்
திருக்கோடிக்காவல் கிருஷ்ணய்யர்
மலைக்கோட்டை கோவிந்தசாமி பிள்ளை
கஞ்சிரா மாமுண்டியா பிள்ளை
கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை



மருங்காபுரி கோபாலகிருஷ்ண அய்யர்
கொன்னக்கோல் பக்கிரியா பிள்ளை
திருப்பாம்புரம் சுவாமிநாத பிள்ளை
பல்லடம் சஞ்சீவிராவ்
புதுக்கோட்டை தட்சிணாமூர்த்தி பிள்ளை



சி. கன்னையா,
மனமோகன அரங்கசாமி நாயுடு
எம். ஆர். கோவிந்தசாமி
பி. எஸ். வேலு நாயர்
எம். எஸ். தாமோதர ராவ்



கே. எஸ். அனந்தநாராயண அய்யர்
எஸ். ஜி. கிட்டப்பா
காளி என். ரத்தினம்
பி. யு. சின்னப்பா
எம். எஸ். முத்துகிருஷ்ணன்



எம். எம். சிதம்பரநாதன்
எம். ஜி. நடராஜ பிள்ளை
எஸ். எஸ். விஸ்வநாத தாஸ்
நவாப் ராஜமாணிக்கம்
அவ்வை சண்முகம்



கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்
கே. ஆர். ராமசாமி
இசக்கிமுத்து வாத்தியார்
டி. பி. பொன்னுசாமி பிள்ளை
எட்டயபுரம் காசி விஸ்வநாதபாண்டியன்



பி. எஸ். கோவிந்தன்



டி. ஆர் மகாலிங்கம்



டி. எஸ். பாலையா



டி. பி. ராஜலட்சுமி



ஏ. பி. நாகராஜன்



கே. தியாகராஜ பாகவதர்



வி. ஏ. செல்லப்பா



எம்பார் ஸ்ரீரங்காச்சாரியார்



சி. சரஸ்வதிபாய்



சபாபதி நட்டுவனார்



பந்தனை நல்லூர்
மீனாட்சிசுந்தரம் பிள்ளை



மன்னார்கோயில்
முத்துக்குமார பிள்ளை



வழுவூர் எஸ். மாணிக்கம்
பிள்ளை



மயிலை கௌரி அம்மாள்



ஈ. கிருஷ்ணய்யர்



பாபநாசம் சிவன்



டைரக்டர் ராஜா சாண்டோ



டைரக்டர் கே. சுப்பிரமணியம்



எஸ். எஸ். வாசன்



பி. ஆர். பந்துலு



வி. நாகையா



ஜி. ராமநாதன்



'சினிமா உலகம்'
பி. எஸ். செட்டியார்



இளங்கோவன்

**நன்றி:**
**தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்**

# பாரதி - தேசிய கவி

**சீனி. விசுவநாதன்**

தேசிய உணர்ச்சி எழுச்சி அலைகள் கொந்தளித்து வீசிய கால கட்டத்தில் பாரதியார் தோன்றினார். சுதந்தரத்தை உயிர் மூச்சாகக் கொண்ட பாரதியார், தேசிய அலையின் உச்சிக்கே ஏந்திச் செல்லப்பட்டார். தேசிய உணர்ச்சியால் உந்தப்பட்ட பாரதியார் தேசத்தை உயர்த்தினார்; அரசியலை உயர்த்தினார்; மொழியை உயர்த்தினார்; தொழிலை உயர்த்தினார்; சத்தியத்தை நிலைநாட்டினார்; ஒழுக்கத்தை வலியுறுத்தினார்.

ஏன் - மக்கள் அச்சம் கொண்டிருந்தபோது பாரதியார் அதை மாற்றிக் களிப்பூட்டினார்; குனிந்த தலையை நிமிர்த்தினார். சோர்ந்த விழியில் ஒளி சேர்த்தார்; கலங்கிய நெஞ்சினைத் தெளிவுபெறச் செய்தார்; இருண்ட மதிக்கு ஒளி கொடுத்தார் பழுத்த கவிதை உள்ளம் படைத்த பாரதியார், அமைதியாக— ஆனால் கம்பீரமாகத் தேசியப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

நாட்டிலே-மக்கள் உள்ளத்தில் தேசியப் பற்றை வளர்க்கவும், விடுதலை வேட்கையை நாட்டிக் கனல் மூட்டவும் நாளெல்லாம் உழைத்தலையே தம் வாழ்க்கையின் இலட்சியத் தொழிலெனக் கொண்டார் பாரதியார். தேசிய இயக்கத்தில் மலர்ந்த மறுமலர்ச்சிக் கவிஞர் பாரதியார், தேசிய விழிப்புக்கும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நிரந்தர சேவை செய்தார்.

தேசிய உணர்ச்சிதான் பாரதியாரையும், அவர்தம் புத்தழகுக் கவிதைகளையும் மக்களுக்கு அறிமுகப்படுத்தியது. சுதந்தர வானில் வானம்பாடியாகத் திரிந்த கவிச்சக்கரவர்த்தி தமது இருபத்து மூன்றாம் வயதிலேயே தேசியக் கவிஞராகத் திகழும் வாய்ப்பைப் பெற்றார்; ஆம்— புதிய தேசிய எழுச்சியின் புரட்சிக் கவி அவர். ஏன், தீர்க்கதரிசிக் கவியும்கூடத்தான்.

பாரதியார் தேசிய கவியாக மலர்ந்ததால் தமிழகம் தனிப் பெருமை பெற்றது; தமிழும் பேறுபெற்றது; பாரதம் புதுப்பெருமை பெற்றது; பாரதப் பண்பாடும் புனிதம் பெற்றது. காரணம், பாரதியார் தேசிய கவிஞரான பின்னர்தான் பாரதத்தை வாழ்த்திப் போற்றுகிற—பாரத சமுதாயத்தைப் பாடிப் பரவுகின்ற-பாரதப் பண்பாட்டை நாவினிக்கப் பாடுகின்ற புதுமரபு தோன்றியது. பாரதி காலத்திற்கு முன்பு அத்தகைய பாடல்கள் தோன்றவில்லை என்பது மட்டுமல்ல-அந்த முயற்சியில் எந்தக் கவிஞரும் ஈடுபட்டதாகவும் தெரியவில்லை. ஆம்; இந்திய தேசியத்தைத் தமிழிலே பாடிய முதல் இந்தியப் பெருங் கவிஞன் பாரதியே!

இந்தியப் பெரு நாட்டின் தேசிய புரட்சித் தீயில் தோன்றி, மலர்ந்த அக்கவிஞன், கனல் தெரிக்கும் தேசியப் பாக்கள் பாடியதோடு மட்டும் நின்றுவிடவில்லை என்பதும் நம் சிந்தனைக்குரியது. பாரதியார் பாரதமாதாவுக்குத் தேச பக்திப் பாடல்களைப் பாமாலையாக்கி அணிவிக்க வேண்டும் என்ற தீவிர முனைப்பில் ஈடுபட்டார். அதற்காக அவர் **1906** ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் **13** ஆம் தேதிய 'சுதேசமித்திரன்' இதழில் ஓர் வேண்டுகோள் 'என்ற தலைப்பில் அறிக்கை வெளியிட்டார்.

''எனது தாய்நாடாகிய பாரதாம்பிகையின் பெருமையை வருணித்து ஆங்கிலத்திலும் தமிழிலும் பல்வேறு காலத்துப் பல்வேறு .புலவர்களால் பாடப்பெற்ற செய்யுள் மணிகளை ஓர் மாலையாகப் புனைந்து பதிப்பிக்கக் கருதியிருக்கின்றேனாதலின் பண்டைத் தமிழ் நூல்களில் பாரதநாடு முழுதினையும் ஒருங்கே புகழ்ந்து கூறப்பட்டிருக்கும் பாடல்களை அறிஞர்கள் தெரிந்தனுப்புவார்களாயின் அவர்மாட்டு மிக்கக் கடப்பாடு உடையவனாவேன். தமிழ்ப் புராணங்களிலும் இதிகாசங்களிலும் நாட்டுப் படலங்களில் நிடதம் கோசலம் முதலிய பகுதிகளைப் பற்றி எழுதப்பட்டிருக்கும் வருணனைகள் பயன்பட மாட்டா. தற்காலத்தே தமிழ்ப் புலமையிற் சான்று விளங்கும் பெருமக்கள் புதியனவாகத் 'தேசபக்திப்' பாக்கள் புனைந்து அனுப்புவாராயின் அவையும் நன்றியறிதலுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

''சீறிய ஆற்றலுடையோனாகிய யான் இப் பெரிய தொழிலை நிறைவேற்றுவதன்கண்ணே எவ்வாற்றானும் துணைபுரிய விரும்புவோர் கால பரியயம் செய்யலாகாதென்று பிரார்த்திக்கிறேன்''.

இதே விண்ணப்பத்தை மீண்டும் **2.8.1906** இல் ''ஓர் சுதேசிய விண்ணப்பம்'' என்ற தலைப்புடன் வெளியிட்டார்.

பாரதியார் எதிர்பார்த்து நம்பியபடி, பாரத அன்னையின் புகழ் பேசும் -பெருமை பாடும் பாக்களைத் தெரிந்தெடுத்தோ புதியனவாகப் புனைந்தோ அனுப்பினார்களில்லை 'தமிழ்ச் சான்றோர்!'

ஆனால், தமிழ்ப்புலவர்களை எதிர்பார்த்து ஏமாற்றமடைந்த பாரதியார் மனம் சோரவில்லை. மாறாக, அவரே தேசிய கவிஞராக மலர்ந்து விட்டார். பெரிதினும் பெரிது விரும்பிய பாரதியார்-எண்ணியதைச் செயல்முடிக்கும் திறன் கொண்ட பாரதியார்-பிறரை எதிர்பார்த்து ஏமாற்றமடைந்தும் விரக்தியடையாத பாரதியார்-மானுடச் சக்தியை ஒன்றெனக் கொண்டு வைய முழுதும் பயனுறப் பாட்டினிலே அறம் கூட்டிட. இமயவெற்பின் மோத பாரததேவியின் மேல் இசைகள் பாடிட-தாமே தேசிய கவிஞரான விந்தையைக் காண்கின்றோம். தமிழ் செய்த தவம்; தமிழன் விந்தையைக் காண்கின்றோம். தமிழன் புரிந்த மெய்த்தவம் பாரதியை வழங்கியது. பாரததேவியின் கடைக்கண் பார்வை பட்டு, புன்மையிருட் கணம் மறைய சுதந்தரக் கதிரவன் - சுதந்தரக் கவிஞன் பாரதியாகப் பிறந்துவிட்டான்.

ஆம்: தேசபக்தித் துறையில் சிறந்த கவிதைகள் - போதிய கவிதைகள் இல்லாத குறையைத் தாம் இயற்றிய பாடல்களால் களைந்து நிறைவு செய்துவிட்டார் பாரதியார். அவர் **1905** ஆம் ஆண்டு முதற்கொண்டே தம் பணியைத் தொடங்கி விட்டார். முதலில் 'சுதேசமித்திர' னில்

# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்

## விஜய் காம்ப்ளெக்ஸ் & யூரியா உரங்களை தயாரிப்பவர்கள்




ஆண்டு தோறும் 5,50,000 டன் விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்களையும் 1,25,000 டன் விஜய் யூரியாவையும் தயாரிக்கின்றோம். தரமான உரங்களை தயாரித்தளிப்பதோடல்லாமல் இந்திய விவசாயம் சிறக்க பல விவசாய மேம்பாட்டுத் திட்டங்களை செயல் படுத்திவருகின்றோம். அவற்றுள் சில:

■ **நீண்டகால விவசாய மேம்பாட்டுத் திட்டம்:**

இந்த 22 திட்டங்களினால் 1,90,000 ஹெக்டர் நிலத்தைக் கொண்ட 76,000 குடும்பங்கள் பலனடைந்து வருகின்றன.

■ **கிராம ஏற்புத் திட்டம்:**

விவசாய உற்பத்தியைப் பெருக்குவதை குறிக்கோளாகக் கொண்ட இத்திட்டத்தினால் 200-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன் பெற்றுள்ளன.

■ **துரித மண் பரிசோதனைத் திட்டம்:**

விவசாயிகள் மண் மாதிரிகள் அனுப்பிய 4 வாரங்களுக்குள் முடிவுகளும் சிபாரிசுகளும் அவர்களுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றன.

■ **நவீன விவசாய நுணுக்கங்களை தெரிவிக்கும் திட்டம்:**

நடமாடும் திரைப்பட ஊர்திகள், வானொலி, சினிமா, செய்தித் தாள்கள் மற்றும் சாகுபடி குறிப்புப் புத்தகங்கள் முதலிய பல்வேறு சாதனங்கள் மூலமாக விவசாயிகள் புரிந்து செயலாற்றும் வகையில் நவீன விவசாய நுணுக்கங்கள் தெரிவிக்கப் படுகின்றன.

மேலும், விவசாய கருத்தரங்குகள், விவசாயிகள் பயிற்சி திட்டங்கள் போன்றவற்றை செயல்படுத்தி விவசாயிகளுக்குத் தேவைப்படும் ஆலோசனைகளும் தரப்படுகின்றன.

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் — இந்திய விவசாய வளர்ச்சியில் முழுமையான ஈடுபாடு கொண்டுள்ள நிறுவனமாகும்.**

VIJAY
MADRAS FERTILIZERS

மேலும் விவரங்களுக்கு, மண்டல மேலாளர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட், 10, வில்லியம்ஸ் ரோடு, திருச்சி 620 001

MFL 2111



வங்கமொழி வாழ்த்தாக்வும், வந்தேமாதர கீதமாகவும் அவர் குரல் ஒலிக்கிறது.

பாரதியார் தேசியக் களத்தில் தம்மைப் பிணைத்துக் கொண்ட கால கட்டத்தில், தேசபக்தர்கள் களின் இதய ஒலியாக ஒலித்துக் கொண்டிருந்தது, 'வந்தேமாதரம்' என்ற தாரக மந்திரச் சொல்லாகும். அந்த மந்திரச் சொல்லைக்கொண்டு-கையாண்டு பாரதியாரும் தமது தேசிய கீதங்களில் அதைத் திரும்பத் திரும்ப ஒலிக்கச் செய்தார். ''வந்தே மாதரம் என்போம் எங்கள் மாநிலத் தாயை வணங்குதும் என்போம்'' என்ற பாடலும் ''நொந்தே போயினும் வெந்தே மாயினும் நம் தேசத்தினர் உவந்தே சொல்வது வந்தேமாதரம்' என்பனபோன்ற பாடல் வரிகளும், எந்தையும் தாயும் குலவி மகிழ்ந்திருந்த நாட்டை வந்தே மாதரம்-வந்தே மாதரம் என்று வணங்கேனோ'' என்பன போன்ற வரிகளும் தேசகபக்தர்களின் நாவிலே ஒலித்தன; நெஞ்சினிலே இனித்தன.

தேசபக்த ஆசுகவியாம் பாரதியார்-பைந்தமிழ்ச் சாரதியாம் பாரதியார் - தேசபக்திக்கே புது இலக்கணமும் கண்டார்.

''தேசபக்தி என்பது நம்மவர்க்கு அந்நியரால் நேரும் தீமைகளை மாத்திரம் ஒழிக்கும் இயல்புடையதன்று. நமக்கு நாம் செய்துகொள்ளும் அநீதிகளையும் நீக்கும் இயல்புடையது'' என்றும்,

''நமது ஒரே தீர்மானமான முடிவான நோக்கம் 'சுதேச சேவகம்' நம்மவர்கள் தினேதினே தேசபக்தியில் முதிர்ந்து, சீரழிந்து பாழாகி வரும் இப்பழைய பெருநாட்டைக் கூடிய சீக்கிரத்தில் மகோன்னத ஸ்திதிக்குக் கொண்டுவர வேண்டும் என்பதே நம்முடைய பிரார்த்தனை''.

என்றும் எழுதி மக்களைத் தேசிய பக்தி-ஸ்வதந்தர பக்தி கொள்ளச் செய்தார்.

நெடிய புகழுக்கும், நீடிய வாழ்வுக்கும் பிறப்பிடமான-நிலைக்களனான இந்துஸ்தானத்துப் பெருமையை -மகிமையை நம்மவர்கள் அறியாத போது, நம்மவர்க்குப் புதிய உயிர் தந்து, ''பாரதத் தாயின் தலைமகனே! கண்ணைத் திற! விழித்துக்கொள் என்று அறை கூவி அழைத்தார். தேசிய, அரசியல், விடுதலையைப் பாடினார் பாரதியார். ஆம்; நாம் அதுவரை அறிந்திராத-இல்லை-மறந்திருந்த இந்தப் பாரதப் பெருநாட்டின்-புண்ணியத் திருநாட்டின் ஜீவசக்தியை உணர்த்திய தேசிய சக்தியின் தலைமகன் தான் பாரதியார்! அந்தச் சக்தியின் வேகத்தில்,

"என்று தணியும் இந்த சுதந்தர
தாகம்!
என்று மடியும் எங்கள் அடிமையில்
மோகம்?"

என்ற கவிதை பிறக்கிறது.

"சொந்த நாட்டிற் பிறர்க்கடிமை
செய்தே துஞ்சிடோம்
இனி அஞ்சிடோம்"

என்ற பாடல் முகிழ்கிறது.

தெளிவாகச் சொல்லவேண்டுமானால், தமிழ்க் கவிதையால் மக்களைத் தட்டி யெழுப்பிய புதிய சக்திதான்-தேசிய சக்திதான் பாரதியார் எனலாம். 'சுதந்தரதாகம்' என்ற-'தேசபக்தி' என்ற என்றுமே அழியாத-அழிக்கவும் முடியாத் உயிர்த் துடிப்பை உள்ளடக்கி இலக்கியச் செறிவுடன்-நயத்துடன்-திபுய அழகுகளுடன் தேசியப் பாடல்களை இயற்றிக் களம் கண்ட பெருங் கவிஞராகத் திகழ்ந்தார்.

இந்திய உபகண்டத்திலே 'தேசிய மகாகவி' என்னும் தகுதியோடு திகழ்ந்த ஒரே கவிஞர் பாரதியார்தான் எனலாம். அவர் விடுதலைப் போராட்டப் போர்க் களத்திலே நின்று பரணி பாடிய கவிஞர். அந்த மகாகவியை நாம், நாட்டின் தேசிய மகாகவி என்று போற்றிப் புகழக் காரணம் நாட்டின் அரசியல் ஆதிக்கப் புரட்சியைப் பற்றி-' 'வேண்டுமடி எப்போதும் விடுதலை' என்று விடுதலையைப் பற்றிப் பாடியும், எழுதியும் போர் எழுச்சிப் பாடல்களைப் பாடியதால் மட்டுமா? அல்ல. அல்லவேயல்ல. பின் என்ன காரணம்? நாட்டு மக்களின் புது வாழ்வுக்கு - மறுவாழ்வுக்கு-நல்வாழ்வுக்கு - பெருவாழ்வுக்கு வழிகாட்டி, நம்மை உயர்த்தி விழிதுயில் -நீடியதுயில் எழுப்பிய பெருஞ் ஜீவசக்தி என்பதால் தான் பாரதியாரை வாய்மணக்க-நெஞ்சு இனிக்கத் 'தேசிய மகாகவி' என்கிறோம்.

உயர்ந்த இலட்சியத்தின் தேவ தூதனாக அவதரித்த பாரதியார் தேசியக் கவிஞராகத் திகழ்ந்ததில் வியப்பில்லை.

—(புவனேஸ்வரி பதிப்பகம் வெளியிட்டுள்ள 'தமிழகம் தந்த மகாகவி' என்னும் நூலிலிருந்து)

# நஞ்சை, புஞ்சை இரு நில விவசாயத்திற்கும் ஏற்றது.



## டிஸக் கலப்பை

உங்கள் உழவுத் தொழிலை நீங்கள்
உட்கார்ந்தபடியே செய்ய உதவும்.
30 அங்குல அகலமும் 8 அங்குல ஆழமும்
உழக்கூடியது.

புவனு



**மினிடில்லர்**
நான்கு டிஸ்க்குகள்
இணைக்கப்பட்டது

*விவரங்களுக்கு:*

## புவனு அக்ரோ சர்வீஸ் கார்ப்பரேஷன்

72, ஆலந்தூர் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை - 600015.

ADVT



# திருக்கழுக் குன்றத்தில் ஒரு மகாமகம்

பி. வி. கிரி.

உருத்திரக்கோடி
ஆதிநாராயணபுரம்
பிரமபுரி
நந்திபுரி
இந்திரபுரி
குமரபுரி
தினகரபுரி

—என்றெல்லாம் புகழப்படும், ஊர் எது?

அதுதான், செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றத்திலுள்ள அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயில் கொண்டுள்ள திருத்தலம்!

நால்வர்களால் பாடல் பெற்ற இத்தலம், செங்கல்பட்டு புகைவண்டி நிலையத்திலிருந்து 12 கி. மீ. தொலைவில் உள்ளது.

**இலட்ச தீபப் பெருவிழா !**

இத்திருத்தலத்தில்தான் வருகிற செப்டம்பர் திங்கள் 17, 18, 19 ஆகிய மூன்று நாட்கள் 'சங்கு தீர்த்த புஷ்கரமேளா-இலட்ச தீபப் பெருவிழா' நடைபெறவிருக்கிறது. அதற்கான ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டு வருகின்றன. நாடு முழுவதிலுமிருந்தும் சுமார் பத்து இலட்சம் மக்கள் இந்தத் திருவிழாவில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

வட இந்தியாவில் கும்பமேளாவும், கும்பகோணத்தில் மகாமகமும் பிரசித்திப் பெற்ற திருவிழாக்களாகும். அதற்கு இணையாக, இந்த 'சங்கு தீர்த்த புஷ்கர மேளா-இலட்ச தீபப் பெருவிழா' நடத்தப்படுகிறது.

**விரிவான ஏற்பாடுகள் :**

மூன்று நாள் நடக்கும் இப்பெருவிழாவில் கலந்து கொள்ள வரும் அன்பர்கள் தங்குவதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன் குடிநீர், சுகாதார வசதி, போக்குவரத்து, மருத்துவ உதவிகளும் விரிவாகச் செய்யப்பட்டு வருகின்றன. குறிப்பாக, ஏழைகள் தங்கவும், அவர்களுக்கு இலவச உணவு வழங்கவும் திருக்கோயில் தீர்மானித்திருக்கிறது. பாதுகாப்புக்குச் சுமார் 3,000 காவலர்கள் மற்றும் சாரணர் படை, தேசிய மாணவர் படை, ஊர்க்காவல் படையினர் வருகின்றனர்.

முதல் நாள், 17-ந் தேதி, யாக பூசையுடன் விழா துவங்குகிறது. இரண்டாம் நாள் 18-ந் தேதி, மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் இலட்சதீப விழாச் சிறப்பு மலரை வெளியிடுகிறார். மூன்றாம் நாள் 19-ந் தேதி காலை சங்குத் தீர்த்தக் குளத்திலிருந்து பஞ்சமூர்த்திகள் சிலைகள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுகின்றன. அன்று இரவு கோயிலும், திருமலையும், திருக்கழுக்குன்ற நகரமும் வண்ண மின்விளக்குகளால் அலங்கரிக்கப்படும். விழாவினையொட்டி, இலட்சம் அகல் விளக்குகள் ஜெகஜ்ஜோதியாய்க் காட்சியளிக்கும். இந்த விழா நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடத்த, செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்களும், அறநிலையத்துறை ஆணையாளர் திரு உ. சுப்பிரமணியம் அவர்களும் தகுந்த ஒத்துழைப்பை நல்கி வருகிறார்கள்.

இந்த இலட்சதீபப் பெருவிழா 12ஆண்டுகளுக்கு ஒருமுறை குரு ராசி கன்னியா ராசிக்குப் பிரவேசிக்கும் வேளையில் நடப்பதாகும். முதல் இலட்சதீபப் பெருவிழா 10-3-1899-ல் நடந்தது. தொடர்ந்து 1921, 1933, 1944, 1956, 1968-ல் நடந்தன. அதற்குப் பிறகு இப்போது நடைபெறுகிறது.

**வேதமலை !**

இத்திருத்தலம் வரலாற்றுச் சிறப்பு மிக்கது.

தொண்டை நாட்டிலுள்ள பாடல் பெற்ற சிவத்தலங்களுள் ஒன்றான இது, இருக்கு-யஜுர்-சாமம்-அதர்வணம் என்னும் வேதங்களும் இறைவனைப் பூசித்து இங்கு மலை வடிவாக அமைந்தன. ஆதலின் இங்குள்ள இறைவனுக்கு வேதகிரி என்றும், வேதாசலம் என்றும் பெயர் வழங்குகின்றது. வேதமே மலையாக உருவெடுத்தலின் இப்பெயர் வந்தது.

ஊரின் நடுவே கம்பீரமாக எழுந்து நிற்கும் இந்த மலை சுமார் 340 அடி உயரமுள்ளது. இம்மலையின் பரப்பு 264 ஏக்கர். மலைவலப் பாதை இரண்டே கால் மைல் நீளமுள்ளதாக இருக்கிறது. இம்மலையில் மூலிகைகள் உள்ளதாகவும், சஞ்சீவிக் காற்று வீசுவதாகவும் இம்மலையை வலம் வருவோர் உடல் நலம் பெறுகின்றனர். இத்திருமலையிலேதான் அருள்திரு வேதகிரீசுவரர் காட்சி தருகின்றார்.

**சங்கு பிறக்கும் குளம் !**

தருமகோடி, தென்கயிலை, கதலிவனம் என வழங்கும் இத்தலத்தில் பல தீர்த்தங்கள் உள்ளன. அவற்றுள் 'சங்கு தீர்த்தம்' என்னும் திருக்குளம் மிகவும் புகழ் பெற்றது. 20 ஏக்கர் பரப்பளவுள்ள இத்திருக்குளத்தில், 12 ஆண்டுகளுக்கு ஓர்முறை சங்கு பிறக்கின்ற அற்புதம் நிகழ்கின்றது. இதனைச் 'சங்கு தீர்த்தம்' என்று கூறுவர். இறைவன் சந்நிதியின் கிழக்கே உள்ளது இத்திருக்குளம். 12 ஆண்டுக்கு ஒருமுறை குரு கன்னியா ராசியில் பிரவேசிக்கும் புனித நாளில், இவ்விறைவன் அம்மையப்பராய் எழுந்தருளி, இத்திருக்குளத்தில் தீர்த்தங் கொடுக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

முதன் முதலில் இத்திருக்குளத்தில் 19-5-1894 ஆம் ஆண்டு சங்கு பிறந்தது. தொடர்ந்து பிறந்த சங்கு கடந்த 1976-ஆம் ஆண்டு பிறந்தது. இவ்வாறு பிறந்த அந்த ஆறு சங்குகள் இன்றுங்கூட இங்கே காணலாம். பொதுவாக, சங்கு கடலில்தான் பிறப்பது வழக்கம். ஆனால், தூய நீரில்-இத்திருக்குளத்தில் பிறப்பது அபூர்வமாகக் கருதப் படுகிறது.

சங்கு பிறப்பது எப்படித் தெரியுமா ?

அன்பென்று கொட்டு முரசே
—மக்கள்
அத்தனை பேரும் நிகராம்
—பாரதியார்

குளத்தில் சங்கு பிறந்ததும், ஓங்கார ஒலியுடன் முழங்கும். அவ்வொலி ஊர் முழுதும் கேட்கும். பிறகு மந்திரம் ஓத, மேள தாளங்கள் முழங்க அந்த அற்புதச் சங்கினை ஊர்வலமாக எடுத்து வந்து இறைவனுக்கு அபிஷேகம் செய்வார்கள். இவ்வாறு இத்திருத்தலத்தின் சிறப்பினைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

**பல்லவ மன்னர்கள்:**

பல்லவ மன்னர்களான இரண்டாம் கந்தவர்மன் (கி. பி. 400-436), மகேந்திரவர்மன் (கி. பி. 600-638), நரசிம்மவர்மன் (கி. பி. 630-638) ஆகியோர் இத்திருத்தலத்திற்குப் பல நன்கொடைகள் வழங்கியுள்ளார்கள். முதலாம் இராசராச சோழன் (கி. பி. 985-1014) முதலான சோழ மன்னர்களும் இத்தலத்திற்குப் பல தானங்கள் செய்துள்ளார்கள்.

மலையடிவாரத்தில் உள்ளது பக்தவத்சலர் என்னும் பெருங்கோயில். சடையவர்மன் சுந்தர பாண்டியன் தன் ஆட்சி 9-ஆம் ஆண்டில் (கி. பி. 1260) இக்கோயில் பணிக்காக நிலம் வழங்கிய செய்தியினைக் கல்வெட்டு ஒன்றால் அறிகின்றோம்.

வடமேற்குத் திசையில், இறைவனருள் சக்தியாய் திரிபுரசுந்தரியம்பாள் திருக்கோயில் காட்சி தருகிறது. தென்கிழக்குத் திசையில், உருத்திரக்கோடி என்ற பழம்பெரும் கோயில் உள்ளது.

**எத்தனைத் தீர்த்தங்கள் !**

இங்குப் பல தீர்த்தங்கள் உள்ளன. தாழக் கோயிலில் நந்தி தீர்த்தமும், மலைவலம் வரும் வழியில் கோடி தீர்த்தமும், ஊருக்குக் கிழக்குத் திசையில் இந்திர தீர்த்தமும், தெற்கில் உருத்திரத் தீர்த்தமும், வசிஷ்ட தீர்த்தமும், கௌசிக தீர்த்தமும், மேற்கில் வருண தீர்த்தமும், அகலிகை தீர்த்தமும் உள்ளன. மலையுச்சியில் சுனை வடிவாயுள்ள சம்பாதி தீர்த்தமும் உள்ளது. இதில் மூழ்கினால் பெரும்பிணி நீங்கும் எனத் தலபுராணம் கூறுகின்றது.

'பட்சி தீர்த்தம்' என்றால் என்ன ?

இம்மலையில் நாள்தோறும் இரு கழுகுகள் காலை 11 மணி அளவில் வந்து, அமுதினை அருந்திச் செல்கின்றது. பல நூற்றாண்டுகளாக நடைபெறும் இந்த அற்புதக் காட்சியை இன்றுங் கூடக் காணலாம். கழுகு வடிவங் கொண்ட முனிவர் இருவர் இறைவனை வழிபடுவதால், கழுகாசலம் என்றும், பட்சி தீர்த்தம் என்றும் இதனைக் கூறுவர்.

**சுரங்க அறையில் !**

தாழக்கோயில் பக்தவத்சலர் சன்னிதியில் ஓர் அறை, நீண்ட காலமாகத் திறக்கப்படாமல் இருந்தது. நான்கு பக்கமும் கருங்கற்களால் ஆன அந்த அறையினுள் என்ன இருக்கிறது?

9-6-1967-ஆம் ஆண்டு அன்று அந்த அறையைத் திறந்துபார்ப்பதென கோயில் நிர்வாகத்தினர் முடிவு செய்தனர். அதன்படி பலர் முன்னிலையில் அறைக் கதவு-அந்தச் சுவற்றின் கல் நீக்கப்பட்டது. முதல் அறையில் எல்லோரும் ஆவலாகப் பார்த்தார்கள். அந்த அறையோ சுத்தமாக இருந்தது! பிறகு சுற்றுமுற்றும் கண்ணோட்டம் விட்டனர். அங்கே ஓர் சுரங்கப் பாதை தெரிந்தது!

அந்தச் சுரங்க அறையும் திறக்கப்பட்டது. அங்கே-அழகிய சிற்ப வேலைப்பாடமைந்த பழங்காலச் சிலைகள் இருந்தன! நீண்ட நெடுங்காலமாகத் திறக்கப்படாத அந்த ரகசிய அறையில் இந்தச் சிலைகள் எப்படி வந்தன? அது பற்றிய ஆய்வுகள் நடத்தப்பட உள்ளதாம்.

இந்தச் சுரங்க அறையில், பள்ளியறைச் சொக்கரும், தேவியும், சிவகாம சுந்தரி, கணபதி, காரைக்கால் அம்மையார், பிரதோஷ நாயகர் ஆகிய திருவுருவச் சிலைகள் கண்டெடுக்கப்பட்டன.

இத்திருத்தலம் குறித்த பல நூல்கள் எழுதப் பெற்றுள்ளன. திருக்கழுக்குன்றப் புராணம், திருக்குழுக்குன்ற மாலை, திருக்கழுக்குன்ற உலா ஆகிய நூல்கள் இத்திருக்கோயிலின் சிறப்பையும், பெருமையையும் கூறும். இந்நூல்களை எழுதியவர், அந்தகக்கவி வீரராகவர். இவர் திருக்கழுக்குன்றத்தின் அருகிலுள்ள உழலூரில் பிறந்தவர்.

இத்தகு சிறப்புமிக்க இத்தலத்தில், பெருவிழா நடக்கின்றது. பெருமளவில் கலந்து கொண்டு பேரின்பம் பெறுவோமா?

# 300 வயதினிலே...

எஸ். சிங்கராஜன்,
இயக்குநர்,
ஆவணக் காப்பகம்.

தமிழ்நாடு ஆவணக்காப்பகம், புனித ஜார்ஜ் கோட்டை ஆவணங்களின் மூன்றாவது நூற்றாண்டு விழாவினை (TRI - CENTENARY) 1980-இல் கொண்டாடக்கருதியுள்ளது. இவ்வாண்டு புனித ஜார்ஜ் கோட்டை ஆவணங்களின் மூன்றாவது நூற்றாண்டு விழா ஆண்டாகும. இவ்விழா தமிழ்நாடு ஆவணக்காபபக மாநாட்டு மண்டபத்தில் இவ்வாண்டு சூலைத் திங்கள் 14-ஆம் நாள் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

இவ்விழாவின் முதல் கட்டத்தில் ''ஸ்வார்பிகா'' எனப்படும் சர்வதேச ஆவணக்காப்பியல் குழுவின் தெற்கு மற்றும் மேற்கு ஆசியப் பகுதியின் பிரிவு தனது செயற்குழு மாநாட்டைத் துவக்கியது. ''ஸ்வார்பிகா'' (Swarbica) அம்மாநாட்டைத் தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில் மூன்று நாட்கள் நடத்தியது. இது தமிழ்நாடு ஆவணக்காப்பக வரலாற்றில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும். இதனால் ஆவணககாப்பியல் உலகில். தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தின் அந்தஸ்தும் முக்கியத்துவமும் சர்வதேச அளவிற்கு உயர்ந்துள்ளன. வரலாற்றுச் சான்றுகளுக்குரிய ஆவணங்கள் வேண்டி, உலகின் பல்வேறு பாகங்களிலிருந்தும் தமிழ்நாடு ஆவணக் காப்பகம் வரும ஆராய்ச்சி அறிஞர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன என்று ஐயத்திற்கிடமின்றிக் கூறலாம். இவ்வரலாற்று ஆராய்ச்சி மையத்தை ஓர் ஆராய்சசி மையமாகவும், ஆவணக்காப்பியலில் பயிற்சியளிக்கும் ஒரு நிறுவனமாகவும் மாற்றக்கூடும் என்று நம்பப்படுகிறது; இவ்விரண்டு காரியங்களுக்கும் சர்வதேச ஆவணக் காப்பியல் குழுவிடமிருந்து ஊக்க உதவித்தொகை பெற வேண்டியுள்ளது.

**தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில் உள்ள ஆவணங்களின் வகைகள் :**

*1639*-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் *22*-ம் நாளிடப்பட்ட தங்கத் தகட்டில் எழுதப்பட்ட சாஸனம் ''பிரான்சிஸ்டே'' என்பவருக்குச் சென்னப்ப நாயக்கரால் அளிக்கப்பட்டது. இதுவே நவீன கால சென்னை வரலாற்றின் முதல் ஆங்கில ஆவணமாகும். 'பிரான்சிஸ்டே' என்பவராலேயே இதன் வரைவு தயாரிக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப் படுகிறது. *1639* முதல் *1670*-ஆம் ஆண்டு வரையிலான ஆவணங்கள் அந்துப் பூச்சியினாலும், காலப்போக்கில் மக்கியும் அழிந்து பட்டன. ஆரம்பகால ''கன்சல்டேஷன் தொகுதி' (Consultation Volumes) *1670*-ஆம் ஆண்டிற்குரியதாகும். ஆனால், தொடர்ச்சியான ஆங்கில ஆவணத் தொகுப்புகள் *1672*-ஆம் ஆண்டு முதலே உள்ளன. இதனால் தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில் மேற்படி கால கட்டத்திற்கு முந்திய ஆவணங்கள் இல்லையென்று பொருளல்ல; ஏனெனில் *1670*ஆம் ஆண்டிற்கு முற்பட்ட டச்சு டானிஷ் ஆவணங்கள் இக் காப்பகத்தில் உள. சென்னைப்பட்டன அரசரின் சாசனம் மூலம் சென்னைக் கடற்கரையில் (Coromandal Coast) கோட்டையும் அரண்மனையும் கட்டிய பிறகு, 'ஆவணக்காப்பு' என்ற சொல்லின் பொருள் விளக்கும் வண்ணம் ஆங்கில ஆவணங்கள் முறையாகத் தொகுக்கப்பட்டன.

கிழக்கில் இந்தோனேசியா முதல் மேற்கில் மோரிஷியஸ் வரையில் நடைபெற்ற பிரிட்டிஷ் அரசின் நடவடிக்கைகளுக்கு சென்னையேமையமாகும். எனவே தான் புனித ஜார்ஜ் கோட்டை ஆவணங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன. இரண்



டாவதாக, கன்னியாகுமரி முதல் நர்மதை ஆறு வரையிலான பகுதிகள் சென்னையின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்தன. இவ்வாறாக, புனித ஜார்ஜ் கோட்டை ஆவணங்கள் மிகப் பரந்த நிலப் பரப்பிற்குரிய வரலாற்றுத் தகவல்களை உள்ளடக்கியுள்ளது; நவீன கால தென்னிந்தியாவின் வரலாறு மற்றும் நாகரிகம் பற்றிய விளக்கங்களைக் கொண்டுள்ளன.



மேற்படி ஆவணங்கள் மட்டுமல்லாமல், தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகத்தில் சுமார் 5,00,000 புத்தகங்களும் உள்ளன. இவைகள் 1873ஆம் ஆண்டு முதல் அச்சிடப்பட்டவை; தமிழக அரசு தலைமைச் செயலகத்திலிருந்தும் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்தும், மற்றும் அரசின் பல துறைத் தலைவர்களிடமிருந்தும் மாற்றப்பட்ட புத்தகங்களும் அவற்றுள் அடங்கும். இப்புத்தகங்கள் தமிழ்நாட்டின் முற்கால வரலாறு, நாகரிகம், பண்பாடு, வாணிகம் ஆகியவற்றைக் கண்ணாடிபோல் காட்டுகின்றன. இவ்வாறாக, புனிய ஜார்ஜ் கோட்டை ஆவணங்களும், தமிழ்நாடு ஆவணக்காப்பககாலத்தில்உள்ளபுத்தகங்களும் பொதுவாக ஆசியாவின் வரலாற்றையும் குறிப்பபாகத் தென்னிந்தியாவின் வரலாற்றையும் அறிந்துகொள்ள கலங்கரை விளக்கம்போல் பயன்படுகின்றன.

**நிர்வாகமும் அதன் மூலங்களும் :**

நவீன கால வரலாறு என்ற நோக்கில், ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி கால ஆங்கில ஆவணங்களே ஆரம்ப எல்லையாக உள்ளன. இவ்வாவணங்கள் கோட்டையில் நடைபெற்ற வர்த்தக நடவடிக்கைகள் பற்றியவையாகும். 17ஆம் நூற்றாண்டு முதலான ஆட்சியாளர்களின் அறிவுடைமையைப் பற்றி அறிய ஏதுவாகிறது. அவைகள் ஆட்சியாளர்களின் வாதங்கள் முடிவுகள் ஆகியவைகளைக் கொண்டுள்ளன. வணிகம், நாடு பிடித்தல் போன்றவை முக்கியமான விவகாரங்களாக இருந்தபோது உள்ள காலத்தின் வவேகம் பற்றி அறிய முடிகின்றது. தமிழ்நாட்டின் ஆவணத் தொகுதிகளிலிருந்து பின்வரும் இரண்டு செயல்கள் இணையாக நடைபெற்றன என்று அறிகிறோம்:—

1. இந்தியர்களின் உரிமைக் குரல்.

2. ஆங்கிலேயர்கள் அளிக்க முன்வந்த தீர்வுகள்.

புனித ஜார்ஜ் கோட்டை ஆவணங்களிலிருந்து நிர்வாக விவகம் பற்றி அறிகிறோம். பல நிபுணர்களின் அறிக்கைகள் உள்ளன. எடுத்துக்காட்டாக 1859-ஆம் ஆண்டு ஏ. சி. காட்டன் அறிக்கையில் ஜீவ நதிகளை இணைத்து கால்வாய்ப் போக்குவரத்தை அபிவிருத்தி செய்வது பற்றிய சாத்தியக்கூறுகள் விளக்கப்பட்டுள்ளன. இந்த எண்ணங்கள் இவ்விருபதாம் நூற்றாண்டில் கங்கை-காவிரி நதிகள் இணைப்புத் திட்டம் பற்றி இந்திய தேசியவாதிகளால் தீவிரமாகக் கருதப்படுகின்றன.

1854-ஆம் ஆண்டு சென்னை ராஜதானியால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கைகள், நிலவரி வசூல் செய்வதில் காவல் துறையினர் வழக்குகள் தொடர்பாகவும் செய்யப்பட்ட சித்திரவதை பற்றிய அறிக்கைகள் ஆகியவை உள்ளன. எல்லா வழக்குகளிலும் தொடர்ந்து சித்திரவதை கையாளப்பட்டு வந்ததாகவும் ஆங்கிலேய அதிகாரிகள் அவற்றைக் கண்டும் காணாதது போல் நடப்பதாகவும் குழு அறிக்கை அளித்தது; மேலும்வருவாய்த்துறையிலிருந்து காவல் மற்றும் நீதித்துறைகளைப் பிரிப்பதற்கும் நீதித்துறை சுதந்திரமாக இயங்குவதற்கும் பரிந்துரை செய்தது. இந்த சீர்திருத்தங்களின் விளைவாக சர் சார்லஸ் டிரெவெல்யான் சென்னை ராஜதானியின் கவர்னராக இருந்த போது 1857-ம் ஆண்டில் சுயேச்சையான காவல்துறை துவங்கப்பட்டது; 1861-ஆம் ஆண்டில் சென்னையில் உயர்நீதிமன்றம் துவங்கப்பட்டது. எந்த வழக்கிலும், சித்திரவதையைக் கையாளும் அதிகாரிகளைப் பதவிநீக்கம் செய்வது என்றும் அவர்களைத் திரும்ப வேலைக்கு எடுத்துக் கொள்ளக்கூடாது என்றும் அரசாங்கம் தீர்மானித்தது.

1857-ஆம் ஆண்டில் சென்னையில் பல்கலைக் கழகம் அமைக்கக் கருதப்பட்டபோது, சென்னை ராஜதானியின் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயிற்று மொழியாக எதைத் தேர்ந்தெடுக்கலாம் என்ற பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, சென்னை ராஜதானியின் ஆளுநர் ஹாரிஸ் பிரபு (1854-59) ஒரு குழுவை எலியட்டின் தலைமையில் அமைத்தார். அக்குழுவின் அறிக்கையும் உள்ளது. அக்குழு ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாக வைககலாம் என்று கூறியது. ஆயினும், தமிழையே பயிற்று மொழியாக வைக்கலாம் என்று சென்னை ராஜதானி ஆளுநர் ஹென்றி போட்டிங்கர் 1851-ல் உத்தரவிட்டதால் பிற்கால சந்ததியார்கள் பாதுகாக்கப்பட்டனர். 1854ஆம் ஆண்டு கூட்டுக்கிராமக் குத்தகை பிரச்சினை பற்றி மிகப் பெரிய அளவிலான வாக்கு

வாதங்கள் இடம் பெற்றன என்பதை புனித ஜார்ஜ் கோட்டையின் வருவாய்த்துறை ஆவணங்களிலிருந்து அறிகிறோம்.

சர் தாமஸ் மன்றோ ஜமீந்தாரி முறைக்கு மாற்றாக ரயத்துவாரி முறையைத் தொடங்கி வைத்த போதிலும் கூட்டு கிராமக் குத்தகையின் (Joint Village Rent) தன்மைகள் பற்றிய வாக்குவாதங்கள் மறையவில்லை. ரயத்துவாரி முறையிலிருந்து பெரும் குறைபாடு விவசாயி மேலும்வறுமையடைந்ததுதான். முற்கால தமிழகக் கிராமங்களில் கூட்டுறவு முறை இருந்து வந்தது கிராமம் அனைவருக்கும் உரிமையுடையதாயிருந்தது; அனைவரும் கூட்டாகவே வரிசெலுத்தினர். கிராம வாழ்க்கை நிம்மதியான ஆனந்த மயமாக இருந்தது. அடுத்த வீட்டு அடுப்பிலிருந்து தீ (கங்கு) உபயோகப்படுத்துவது இன்றும் எல்லாக்கிராமங்களிலும் ஒரு சர்வசாதாரணமான சாட்சியாகும். அறுவடை சமயத்தில் அண்டை அயலார்களுக்கு வட்டியில்லாமல் நெல் கடனாகக் கொடுக்கல், வாங்குதல் நடைபெற்றது. ஒரு வீட்டிற்கு விருந்தினர்கள் வரும் போது மற்றவர்கள் தீட்டப்பட்ட அரிசியைக் கடனாகக் கொடுத்தனர். பணப் பொருளாதாரத்தை விட பண்டமாற்றுப் பொருளாதாரமே மிகவும் அதிகமாக உபயோகத்தில் இருந்தது. நம்பிக்கை என்ற சொல்லைச் சுற்றித்தான் கிராம வாழ்க்கை இயங்கியது சமுதாயப்பற்று இருந்தது.

மேற்கூறப்பட்ட நிலைமையால் கிராமப் பஞ்சாயத்து அதிகாரம் மிக்கதாக இருந்தது; சொத்து மற்றும் குற்றங்கள் சம்பந்தமாக வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்கியது. கிராமத் தலைவர்கள் உறவினால் அல்லது மனோபாவத்தால் பிணைக்கப்பட்டிருந்தனர். திருமணம் மற்றும் கிராம விழாக்கள் நடைபெற கூட்டு முயற்சி இருந்தது; உடல் வலிமை உள்ளவர்கள் ஊதியமின்றி உழைத்தனர். பணம், பொன் போன்றவற்றைக் கொடுத்து ஒருவருக்கொருவர் உதவிக் கொண்டனர். இவ்வாறான கூட்டுறவினால் கிராம மக்கள் அன்பினால்இணைக்கப்பட்டனர். இப்பொருளாதார முறை பொருளாதார மேதை காரல்மார்க்ஸினால் வியந்து கூறப்பட்ட ஆங்கிலேயர்களின் தரமான பொருளாதார முறைக்கு இணையாகும். இந்தியக் கிராம வாழ்க்கையின் பூரணத் தன்மை பற்றிக் கூறும் வரலாற்றாசிரியர்கள் இதுவரை தோன்றவில்லை. கிராம வாழ்க்கையில் சமுதாய இசைவு (ஒற்றுமை) ஏற்பட வேண்டுமானால் முற்காலக் ''கிராமக் கூட்டு வாழ்க்கை'' மீண்டும் வருதல் அவசியமாகும்.

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியார் ஒரு வித்தியாசமான நில வரி வசூல முறையைக் கொண்டு வந்த போது தமிழ்நாடு மக்கள் ஆங்கிலேயர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். 1750-முதல் 1799 வரை நடைபெற்ற பாளையக்காரர்கள் புரட்சியிலிருந்து இது தெரிய வருகிறது. கட்டபொம்மன், ஊமைத்துரை மற்றும் மருது சகோதரர்கள் போன்ற பளையக்காரர்கள் அடக்கப்பட்ட பின்னர் ஆங்கிலேயர்கள் 1802-ல் நிரந்தர நிலவரி வசூல் திட்டத்தைக் கொண்டுவர முடிவு செய்தனர்.

1802 முதல் 1857 வரை ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனி தனது மேலதிகாரத்தை நிலைநாட்ட முயன்றது. அதன் விளைவாக 1857-ல் இந்திய சுதந்திரப் போராட்டம் ஆரம்பித்தது. திருவல்லிக்கேணி, திருச்சி, வேலூர், வாணியம்பாடி ஆகிய இடங்களில் பச்சைக் கொடியை உயர்த்தினர். மக்கள் கட்டுமீறி தலை தூக்கும் நிலை ஏற்பட்டது. தாமரையும் சப்பாத்திக் கள்ளியும் கைமாறியது. பெரிய புரட்சிக்கான அறிகுறியைக் காட்டியது.

அந்தச் சமயத்தில் புரட்சி தற்காலிகமாக அடக்கப்பட்டது. 1858-ல் விக்டோரியா பேரரசி, 'இனிமேல் ஆங்கிலேயர்கள் இந்தியர்களின் மத, சமுதாய வழக்கங்களில் குறுக்கிடமாட்டார்கள் என்று அறிக்கை விடுத்தார். ஆங்கிலேயர் இந்தியர்களின் நம்பிக்கையை இழந்தனர். 1885-ல் இந்திய தேசியக் காங்கிரஸ் தோன்றிய பின்னும், 1904-ல் திலகர் சுயராஜ்ஜிய அறிக்கை விடுத்த பின்னும் நம்நாடு சுதந்திரப் போராட்டத்தின் அடுத்த மகத்தான அத்தியாயத்தை நோக்கி பீடுநடை போட்டது.

**தமிழ்நாடு ஆவணக் காப்பகம் — ஆராய்ச்சிமையம் மற்றும் ஆவணக் காப்பியலில் பயிற்சியளிக்கும் ஒரு முன்னேற்றமடைந்த நிறுவனம்:**

சர்வதேச ஆவணக் காப்பியல் குழுவின் தெற்கு மற்றும் மேற்கு ஆசியப் பகுதியின் நிலையான 'ஸ்வார்பிகா' (Swarbica) பிரிவு உபசார விழா 16-7-80 அன்று மாலை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வற்றாத வரலாற்று ஆவணங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள தமிழ் நாடு ஆவணக்காப்பகத்தை ஒரு வரலாற்று ஆராய்ச்சி மையமாக மேம்படுத்த முடியும். ஆவணங்களை ஒழுங்குபடுத்தி வைத்தல் மற்றும் பாதுகாத்தல் முறைகளினால் ஆவணங்களைப் பாதுகாத்தல், நிர்வகித்தல் மற்றும் புதுப்பித்தல் ஆகியவை பற்றிய ஆவணக் காப்பியலில் பயிற்சி அளிக்கும் சிறந்த நிறுவனமாக இக் காப்பகத்தை மேம்படுத்த முடியும். வரலாறு தொடர்பான ஆவணங்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் திரட்டிப் பாதுகாப்பதற்காக வட்டார ஆவணக் களஞ்சியங்கள் அமைக்கலாம் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர், இந்தப் புனித ஜார்ஜ் கோட்டை ஆவணங்களின் மூன்றாவது நூற்றாண்டு விழா நடக்கும் இவ்வாண்டில் அறிவித்தது மிகுந்த உற்சாகத்தை அளிப்பதாக உள்ளது. ஆவணக்காப்பகம் பற்றி எடுக்க உத்தேசித்திருக்கும் வண்ண திரைப்படம் நாடு முழுவதும் ஆவணக்காப்பு உணர்வைப் பேணி வளர்க்கும் என்று உறுதியாகக் கூறலாம்.



# 'ரோகிணி' பாரதத்துப் பெருமை!



**1972**-ம் ஆண்டில் ஒருநாள், ஸ்ரீஹரிகோட்டாவிலுள்ள ராக்கெட் அனுப்பும் மையத்திற்கு மாட்டு வண்டிகள் பொருட்களை ஏற்றிச் சென்று கொண்டிருந்தன. 'இப்பொருட்களை எங்கு ஏற்றிச் செல்கிறீர்கள்' என்ற கேள்வியை வழியே போன ஒருவர் கேட்டார் அவ்வண்டியொன்றில் இருந்த படிக்காத பழங்குடி இனத்தைச் சேர்ந்த பையனிடமிருந்து 'லாஞ்ச் பேடுக்கு' என்று பட்டென்று பதில் வந்தது. நவீன விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத்தை இன்று பட்டிதொட்டிகளில் உள்ள பாமர மக்களும் ஓரளவு புரிந்து கொண்டு விட்டனர்!

வளர்ச்சிப் பாதையில் நாம் மேலும் அடி எடுத்து வைத்திருக்கிறோம் என்பதற்கு 'ரோகினி' ஒரு சிறந்து எடுத்துக் காட்டு. கவுரவத்திற்காக நாம் விண்வெளியில் செயற்கைக்கோளைச் செலுத்தவில்லை. இயற்கைவளங்களை அறிந்து கொள்வதற்காகத் தான் இம்முயற்சிகளில் நவபாரதத்தின் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். இத்துறையில் நாம் காணும் வளர்ச்சி பல நன்மைகளை நமக்கு ஈட்டித் தருகிறது. தகவல் தொடர்பு வசதிகள் மேம்பாடு அடைகின்றன. தூரத்திலுள்ள நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் தரை வழியே தொலைபேசி மற்றும் தந்தி இணைப்பு ஏற்படுத்துவதற்கு பல ஆண்டுகள் ஆகும். சமிக்ஞைகளை செயற்கைக் கோளுக்கு அனுப்புவது மற்றும் பெறுவதற்கான தரை நிலைய வசதிகள் இருக்குமானால் ஒரு செயற்கைக்கோள் நாடு முழுவதற்குமான ஒலிபரப்பு கருவியாகச் செயல்பட முடியும். டெலிவிஷன் நிகழ்ச்சிகளையும் இது ஒளிபரப்பும். இதன் மூலம், ஒரு திரைப்படத்திற்கு பல மொழிகளில் வர்ணனைகள் செய்ய முடியும். ஒரே காலத்தில் பல படங்களை இதன் மூலம் பல பகுதிகளுக்கு ஒளிபரப்ப முடியும். நாட்டில் எழுதப்படிக்க தெரியாத நிலையைப் போக்க இது பெருமளவில் உதவும். வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, தண்ணீர் நிர்வாகம், சிறுதொழில்கள் ஆகியவைகளை மேம்படுத்துவதற்கான ஆக்கரீதியான வளர்ச்சிப் பணிகளுக்கு இது வழி வகுக்கும்.

இதன் மற்றொரு பணி, கால நிலையை முன்னதாக அறிவிப்பதாகும். பருவ நிலை துவங்குவது புயல் ஏற்படுவது, சாதாரண காலநிலை போன்றவற்றை முன்னதாகவே தரையில் அமைக்கப்பட்டுள்ள கருவிகளைவிட நன்றாக இதனால் ஆய்வு செய்ய முடியும். செயற்கைக் கோள்

பூமிக்கு சில நிமிடங்களில் வானிலை புள்ளி விவரங்களை அனுப்பி விடும். குறைந்த தூர மட்டங்களில் கருவிகளுடன்கூடிய ராக்கெட்டுகள் வானிலையை அறிவிக்கக்கூடும்.

### தொலைநோக்கு உணர்வு

இக்கோளில் உள்ள விசேஷ புகைப்படத்தில் தோன்றும் சிவப்பு மற்றும் நீல வண்ணத்தி லிருந்து பயிர்கள் நன்றாக இருக் கின்றதா அல்லது நன்றாக இல்லையா என்று கண்டு கொள்ள முடியும். விவசாயி அறிந்து கொள்வதற்கு முன்ன தாகவே பயிர் நிலைமையை இத னால் அறிந்து அறிவிக்க முடியும். மண்வளம் மற்றும் பயிரைதெரிந் தெடுப்பதில் தொலைநோக்கு உணர்வு விவசாயிகளுக்கு உதவக் கூடும். கடலின் தட்ப வெப்ப நிலையை ஆய்வு செய்யவும் இது உதவும்.

### விண்வெளி ஆராய்ச்சித் திட்டங் களின் துவக்கம்

விண்வெளி தொழில்நுட்பத்தை பாடப்புத்தகத்திலிருந்து காப்பி அடிக்கக்கூடாது என்று காலம் சென்ற டாக்டர் சாராபாய் போன்ற விஞ்ஞானிகள் கருதி னார்கள். மேலே கிளம்பும் எந்த பொருள்களின் வேகத்தை யும் பூமியின் ஈர்ப்புச் சக்தி குறைக்கும். ராக்கெட் இச் சக்தியை எதிர்த்து மேல் நோக் கிச் செல்லும். இதுஉயரப்போகப் போக புவி ஈர்ப்புச் சக்தி குறை யும். உதாரணமாக, ராக்கெட் டின் வேகம் இரட்டிப்பாக்கப்பட் டால், அது இரண்டு மடங்கு உயரத்திற்கு மேல் செல்லும் ராக் கெட்டு பல நிலைகளில் அமைக் கப்பட்டு இருக்கிறது. ஒரு வினா டிக்கு 8 கிலோ மீட்டர் வேகத் தில் ஒரு பொருள் விண்வெளியில் செலுத்தப்பட்டால் அது 235-வது கிலோ மீட்டரில் பூமியைச் சுற்றும்.

காலம் சென்ற அறிவியல் மேதை டாக்டர்சாராபாயின் தீட் சண்யமான எதிர்காலத் தொலை நோக்கே இந்திய விண்வெளி ஆராய்ச்சியின் துவக்கமாகும். திருவனந்தபுரத்திற்கு அருகி லுள்ள தும்பாவில் ராக்கெட் தொழில்நுட்பப்பணி 1960-ம் ஆண்டுகளில்துவங்கியது. இந்தியா வின் முதல் ராக்கெட் 1967-ம் ஆண்டு செலுத்தப்பட்டது. இந்த ராக்கெட்டின் விட்டம் 75 மி. மீட்டராகும். இதை சிலர் பொம்மை ராக்கெட்டுகள் என்று கூறினார்கள். ஆனால் நமது விஞ்ஞானிகள் இத்தொழில்நுட் பத்தில் படிப்படியாக முன்னேறி பல ராக்கெட்டுகளைத் தயாரித் திருக்கிறார்கள். இந்த ராக் கெட்டுகள் வானிலையை ஆய்வு செய்வதோடல்லாமல் செயற்கை கோளை விண்வெளியில்செலுத்து வதற்கும் உபயோகப்படுத்தப் பட்டன.

அறிவியல் துறையில் நம் நாட்டைப் பொறுத்தவரை 1980 ஜூலை 18-ஆம் நாள், பொன் னெழுத்துக்களால் பொறிக்கப் பட வேண்டிய நாளாகும்.

### ரோகினி செயற்கைக்கோள்

இவ்வாண்டு ஜூலை மாதம் 18 ஆம் தேதியன்று ரோகினி என்ற செயற்கைக்கோள் விண்வெளியில் செலுத்தப்பட்டது. சொந்த ராக்கெட்டின் மூலம் விண்வெளி யில் செயற்கைக்கோளை அனுப் பிய நாடுகளில் இந்தியா ஆறாவ தாகும். 1957-ஆம் ஆண்டு சோவி யத் யூனியன் முதன் முதலாக விண்வெளியில் தனது சொந்த ராக்கெட்டின் மூலம் செயற்கைக் கோளை அனுப்பியது. பிறகு அமெரிக்கா செயற்கைக்கோளை அனுப்பியது. 1965-ம் ஆண்டு பிரான்சு செயற்கைக் கோளை அனுப்பியது. 1970-ஆம் ஆண்டு ஜப்பானும் சைனாவும் செயற் கைக்கோளை அனுப்பின.

ஜூலை 18ஆம் நாள் காலை. இடம் ஆந்திரப் பிரதேசக் கடற் கரையில் உள்ள ஸ்ரீஹரி கோட்டா. ராக்கெட்டை விண் வெளியில் செலுத்தத் தயார் நிலையில் யாவரும் இருந்தார்கள். பாதுகாப்புக்காக அந்தப் பகுதி யில் ஆகாய விமானங்கள் பறக்க வும், மீன்பிடிக்கும் படகுகள் மீன் பிடிக்கச் செல்வதற்கும் அனுமதி வழங்கப்படவில்லை.

22 மீட்டர் நீளமும், 1 மீட்டர் விட்டமும் கொண்ட எஸ். எல். வி. 3 ராக்கெட்டின் கனம் 17 டன்னாகும். இதில் ஒரு லட்சத் துக்கும் மேற்பட்ட பாகங்கள் பொறுத்தப்பட்டுள்ளன. எஸ். எல். சி. 3-ன் இயக்கத்தை ஒரு கம்ப்யூட்டர் சோதித்துக்கொண் டிருக்கிறது. காலை 8 மணி 3 நிமிடம் 45 வினாடி. எஸ். எல். வி. 3 விண்வெளியில் செலுத்தப் பட்டது. ராக்கெட்டின் முதல் கட்டத்தை பற்ற வைத்தவுடன் வெண்ணிற புகையைக் கக்கிக் கொண்டு வானத்தை நோக்கிச் சென்றது. சில வினாடிகளில் வெறும் கண்ணோடு பார்க்கும் தூரத்துக்கு அப்பால் சென்று விட்டது. ராக்கெட்டின் முதல் கட்டம் 18 கிலோ மீட்டர்உயரத் தில் எரிந்தது. இரண்டாவது கட்டம் 72-வது கிலோ உயரத் தில் எரிந்தது. மூன்றாவது கட்டம் 140 கிலோ மீட்டர் உய ரத்தில் எரிந்தது. கடைசிக்கட்ட மாக 285 கிலோ மீட்டர் உய ரத்தை ரோகினி செயற்கைக் கோள் அடைந்தது. இதை கம்ப் யூட்டர் கவனித்துக் கொண்டி ருந்தது. பிறகு 12 நிமிடங்களுக் குள் 35 கிலோ கனமுள்ள செயற் கைக்கோள் (ரோகினி) செயற் கைக்கோள் மணிக்கு 28,000 கிலோ மீட்டர் வேகத்தில் விண் வெளியில் செலுத்தப்பட்ட சமிக்ஞை பூமியிலுள்ள நிலையங் களுக்குக் கிடைத்தது. இது பூமி யைச் சுற்றி வருகிறது. ஒருமுறை பூமியைச் சுற்றிவர இதற்கு 97 நிமிடங்கள் ஆகின்றன.

ஸ்ரீஹரிகோட்டா, திருவனந்த புரம், அகமதாபாத், கார்நிகோ பார் ஆகிய இடங்களிலுள்ள தரை நிலையங்களுக்கு 100 நாட் களுக்கு மேல் அல்லது அதற்கு மேலோ பல புள்ளி விவரங்களை இச்செயற்கைக்கோள் அனுப்பிக் கொண்டிருக்கும்.

இந்த ராக்கெட்டில் உயர் நுணுக்கமான முறைகள் இருக் கின்றன. இதில் ஒரு இலட்சம் உறுப்புக்கள் பொருத்தப்பட்டி ருக்கின்றன. திட்டமிட்டபடி நான்கு நிலைகளும் நன்றாகச் செயல்பட்டன. இது ஒரு முழு வெற்றியாகும். எதிர்பார்த்தை விட அதிக அளவு உயரத்திற்கு 35 கிலோ கனம் கொண்ட ரோகினி விண்வெளியில் அனுப் பப்பட்டுள்ளது. இச்செயற்கைக் கோள் குறிப்பிட்ட 100 நாட் களை விட அதிகமாக பூமியைச் சுற்றி வரும். இது விண்வெளி பொறியாளர்களுக்கு ஒரு நம் பிக்கை ஒளியை ஊட்டியுள்ளது. நாட்டின் மண் வளம், நில உப யோகம், பயிர்நிலைமை போன்ற வற்றை தெரிந்தெடுக்க இது உதவக்கூடும். மிகக் கனமான செயற்கைக்கோளை செலுத்து வதற்கு திரவ எரிபொருளில் இயங்கும் ராக்கெட்டுகள் அவ சியம் வேண்டும். எஸ். எல். வி. 3 திட எரிபொருளில் இயங்கியது திரவ எரிபொருளைகையாளுவது கடினமானதாகும். இருந்த போதிலும் இந்திய பொறியா ளர்கள் திரவ எரிபொருளை உப யோகப்படுத்தி இயங்கும் என் ஜின்களை தயாரித்து வரு கிறார்கள். இவ்விஷயம் குறித்து பிரான்சிலிருந்து தொழில்நுட்பங் களை நமது பொறியாளர்கள் கற்று வருகிறார்கள்.

போதுமான தரைநிலையங்கள் இருக்குமானால்நாட்டின்தொலை தூர பகுதிகளுக்குக்கூட டெலி போன் இணைப்புக்களை இத னால் அளிக்கக்கூடும்.

மொத்தத்தில் 'ரோகினி' நமது இந்திய விஞ்ஞானிகளுக்கு மகத் தானதொரு வெற்றிப் பரிசு! அறிவியல் துறையில் நமக்குக் கிடைத்துள்ள ஒப்பற்ற ஒளி விளக்கு !

# தமிழகத்தின் நாட்டுப்புறக் கலைகள் 6

டாக்டர் ஏ. என். பெருமாள்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
அடையாறு, சென்னை.

நாட்டுப்புற மக்களில் பெரும்பாலும் பயிர்த் தொழில் செய்யும் 'பள்ளர்' வகுப்பைச் சேர்ந்த பாத்திரங்களைக் கொண்டு நடிக்கப் பெறுவது பள்ளு நாடகம். உழவுத் தொழிலில் ஈடுபட்டோரின் வாழ்வினை அடிப்படையாகக் கொண்டு கவிச்சுவை சொட்டச் சொட்ட கலிப்பா, கலித்துறை, சிந்து போன்ற பல்வேறு கவிதை அமைப்புகளால் பள்ளு இலக்கியங்கள் பாடப் பெறுகின்றன. பள்ளுகளை நாடகமாக மட்டுமல்லாமல் நடனமாகவும் நடத்திக் காட்டியுள்ளனர்.

பதினாறாம் நூற்றாண்டிலிருந்து பல வகையான நாடக இனங்கள் தமிழ்நாட்டில் தோன்றி நடைபெற்றுள்ளதாக அறியமுடிகிறது. முன்பே மக்களின் வழக்கத்திலிருந்த உழத்திப் பாட்டு, பள்ளுப்பாட்டு, பறைப்பாட்டு, பள்ளேசல் ஆகியவற்றின் வளர்ச்சியாகப் பள்ளு நாடகம் உருவாகி தமிழ் மக்கள் முன் நடிக்கப் பெற்றிருக்க வேண்டும். பள்ளுகள் மிகப் பலவாக இயற்றி நடிக்கப் பட்டிருக்கும் என்று கருதுவதற்கு இடமுள்ளது.

''நெல்லு வகையை எண்ணி
னாலும்
பள்ளு வகையை எண்ண
முடியாது''

என்பது பழமொழி. முன்பு சிறு சிறு பள்ளுகளே இருந்திருக்கின்றன. பின்னர் அது வளர்ந்து நல்ல இலக்கியத் தரத்தை அடைந்து உள்ளதாகக் கருதலாம். முன்னர் எழுதப்பட்ட 'மோகனப் பள்ளு' பதினெட்டுப் பாடல்களையே கொண்டது. பின்பு எழுந்த முக்கூடற் பள்ளு போன்றவை மிகச் சிறந்த முறையில் பாடல்களை அமைத்துச் சரியான ஆடல் பாடல் உத்திகளைக் கொண்டு எழுதப்பட்டுள்ளன.

அக்கால நூல் இயற்றும் மரபினை ஒட்டி பள்ளு நாடகத்தைக் காப்பு, கடவுள் வாழ்த்து, ஆழ்வார், அடியார், பாவலர், நாவலர் ஆகியோர்க்கு வாழ்த்துக் கூறியே தொடங்கி எழுதியுள்ளனர். பின்னர் நாடகக் காட்சி தொடங்குகிறது. பள்ளன் வந்து தன் பெருமையைத் தானே கூறுகிறான். அடுத்து பள்ளியர் தங்கள் குடிப்பெருமை கூறி மகிழ்கிறார்கள். நாட்டு வளம், நகர் வளம், குயில் கூவல், மழைவேண்டல், மழைக் குறி காணல், மழை பொழிதல், ஆறு பெருகல், ஐந்து நிலங்களையும் ஆறு கடந்து செல்லல், பேராறு, சிற்றாறு ஆகியவை ஒன்றோடு ஒன்று கலந்து இணைந்து களித்தல் ஆகிய அனைத்து இயற்கை வளக்காட்சிகளும் விளக்கிக் கூறப்படும். புலவர்கள் தங்கள் கற்பனை வளத்துக்கு ஏற்றவாறு விளக்கப் பகுதிகளைக் கூட்டியோ குறைத்தோ அமைப்பர்.

மழை பொழிந்ததும் பண்ணைக்காரன் வயலை உழுது பயிரிடவேண்டும் என்ற விருப்பத்துடன் பள்ளனிடம் வருகிறான். பள்ளன் இளைய பள்ளியின் அழகில் மயங்கி மூத்த பள்ளியைப் புறக்கணித்து விடுகிறான். அவன் பண்ணைக்காரனின் பார்வையில் படாது மறைந்து விடுகிறான். ஆகையினால் அவனை வெளிப்படையாகப் பண்ணைக்காரன் திட்டுகிறார். அவற்றைக் கேட்டதும் பள்ளனால் தன் மறைவிடத்தில் பதுங்கிருக்க முடியவில்லை. அவன் அங்கிருந்து வெளிப்பட்டு பண்ணைக்காரன் முன் தோன்றுகிறான். அவனிடம் வித்து வகை, மாட்டு வகை, ஏர்க்கால் வகை முதலியவற்றை அடுக்கிக் கூறுகிறான்.

இடையர் ஆட்டுச்கிடை கட்ட வருகிறார்கள். பயிர் வேலைக்கு உரிய ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன. இதற்கிடையில் மூத்தப் பள்ளியின் முறையீட்டைப் பண்ணைக்காரன் பரிசீலித்து பள்ளனைக் குட்டையிலிட்டு தண்டித்தல். அவன் குட்டையிலடிக்கப்பட்டதால் மிகவும் வருந்தித் துடித்தல். மூத்த பள்ளி மனமிரங்கி பண்ணைக்காரனை வேண்டி பள்ளனை விடுவிக்கிறார்.

நிலத்தில் விதைக்கிறார்கள். பயிர் வளர்ந்து வருகிறது. இடையில் உழமிடுகிறார்கள். பயிர் மிகச் செழிப்பாக வளர்ந்து அறுவடையாகிறது. பள்ளன் நெல்லின் கணக்கை அடுக்கிக் கூறுகிறான். இந்த இடத்துக்குப் பின்னரும் பள்ளியர் இருவரும் சண்டையிட்டுக் கொள்வதில் தவறவே இல்லை. ஒருவரையொருவர் ஏசியே இன்பம் சுவைத்து மகிழ்கின்றனர். இறுதியில் மூத்தப் பள்ளியும் இளையப் பள்ளியும் இணையொன்றி இறைவனை இரு கையாலும் கூப்பி வணங்கி அனைவரையும்வாழ்த்தி மகிழ்கின்றனர். பள்ளு வளமையிலும், நிறைந்த அன்பிலும், இன்பக் களிப்பிலும் மிகுந்து முடிவுறுகின்றது.

விளங்கும் இடம், அல்லது வணங்கும் இறை அல்லது போற்றும் தலைவன் ஆகியவற்றில் பள்ளுகள் ஒன்றையொன்று மாறுபட்டலும், பொது விளக்கப்பகுதிகளிலும், அமைப்பிலும் அனைத்துப் பள்ளிகளும் ஒன்றுபோலவே காணப்படும். ( Stereotyped ) பள்ளன், மூத்தப்பள்ளி, இளையப் பள்ளி, பண்ணைச்காரன் ஆகிய பாத்திரங்கள் எல்லாப் பள்ளுகளிலும் மாறாமல் வருவர்.

பாமர மக்களின் எளிமையான வாழ்க்கை நிலை, குடும்ப அமைப்பு, பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், உறவுமுறை, சமய வாழ்க்கை ஆகியவற்றைப் பள்ளுகள் மிகச் சிறப்பாக விளக்கிக் காட்டும். இரு மனைவியரை வைத்து ஒருவன் படும்பாடு நகைச் சுவை ததும்பப் புலப்படுத்துவது





தெருக்கூத்து

அறிவுரையாகவுள்ளது. இறை பற்றிய செய்திகளை இயல்பாக விளக்கிக் காட்ட பள்ளுகள் முயல்கின்றன. காலத்துக்கு ஏற்ற கலையாகப் பள்ளு விளங்கி மக்களை மகிழ்வித்துள்ளது.

குறவஞ்சி.

தமிழ்நாட்டில் மக்கள் மத்தியில் மிகச் சிறப்புற்றிருந்த மேடைக் கலைகளில் ஒன்று குறவஞ்சி. இது 17, 18, 19 ஆகிய மூன்று நூற்றாண்டுகளிலும் மக்களுக்கு இன்பக் களிப்பைக் கொடுத்த நாடக இனமாகும். தொடக்க காலத்தில் முழு நிலையில் நாட்டுப்புற மக்களுக்கே உரிய கலையாகக் குறவஞ்சி விளங்கியது. ஆனால், பின்னர் அது நாகரிகத்தில் வளர்ச்சியுற்றவர்களுக்கும் வசதி படைத்தவர்களுக்கும், தகுதியான முறையில் ஏற்றமாகவும் இலக்கிய மேம்பாட்டுடனும் எழுதப்பட்டது. இருப்பினும் குறவஞ்சி அதன் தொடக்க அமைப்புக் கூறுகளிலிருந்து விடுபடவில்லை. மக்கள் கலைக்குரிய பண்புகளுடனேயே விளங்கியது.

குறம், குறத்திப் பாட்டு ஆகியவை நாட்டுப்புறக் கலையமைப்பில் குறவஞ்சிக்கு முன்னோடியாக அமைந்தவை. குறி சொல்வதே குறத்திப் பாட்டின் முக்கிய குறிப்பு.

''இறப்பு நிகழ்வெதி ரென்னும்
முக்காலமும்
திறப்பட வுரைப்பது குறத்திப்
பாட்டே''

என்று பன்னிரு பாட்டியல் உரைப்பதிலிருந்து இவ்வுண்மை புலப்படும்.

புகழேந்திப் புலவர் பாடியதாகக் கருதப்படும் அல்லியரசாணி அருச்சுனனுக்காக மகா சாமர்த்தியமுள்ள மாறு வேஷம் கொண்டாடிய வித்துவான் குறம் மிக நல்ல படைப்பாக உள்ளது. 'மின்னொளியாள் குறமும்' சிறப்பாக எழுதப் பெற்றுள்ளது. குறம் குறி சொல்வதைப் பற்றியதே ஆகும். ஆனால், குறவஞ்சி அதனை இன்னும் சிறிது விளக்கிப் பல்வேறு சுவைகளைக் கொண்டு உருவாக்கிய மேடைக் கலையாகும்.

குறவஞ்சிகளும் நூல் தொடங்கும் மரபுமுறையில்தான் தொடங்கப்படுகிறது. கடவுள் வாழ்த்துப் பாடியதும் கட்டியங்காரன் அரங்கத்தில் தோன்றித் தலைவனின் உலாவைப் பற்றி அனைவருக்கும் கூறுகிறான். தலைவன் இறைவனாகவோ மானிடனாகவோ இருக்கலாம். உலாவரும் தலைவனைக் கண்டு பல பருவத்தைச் சேர்ந்த பெண்களும் மயங்கிக் காதல் கொள்கின்றனர்.

தலைவியின் காதல் மிகவும் சிறப்பாக விளக்கிக் காட்டப்படும். அவள் தூது அனுப்பித் தன் காதலைக் கூற முயல்கிறாள். அப்பொழுது பச்சைக் குத்தி குறி சொல்வதில் வல்லவளான ஒரு குறத்தி வருகிறார். அவள் தன் மலையைப் புகழ்ந்து தன் திறனை நவின்று தலைவியை வியந்து அவளுக்குக் குறி சொல்கிறாள். அவள் காதல் கொண்டு தவிப்பதை வெளிப்படையாக விளக்கும் குறவஞ்சி அதில் தலைவி வெற்றி பெற்று களிக்கப் போவதையும் கூறுகிறாள். அதைக் கேட்டதும் தலைவி மகிழ்ச்சியடைந்து குறவஞ்சிக்குப் பரிசும் பாராட்டும் கொடுக்கிறாள். அவற்றைப் பெற்றுக் கொண்ட குறத்தி, குறவனைத் தேடி மலைக்குச் செல்கிறாள்.

குறவன், தன் துணைவனான சிங்கனுடன் மிருகங்களையும் பறவைகளையும் வேட்டையாடிக் கொண்டு வருகிறான். தன் வாழ்க்கைத் துணைவியைத் தேடித் திரியும்போது குறவஞ்சியைக் காண்கிறான். அவள் அவனை விட்டுப் பிரிந்து சென்றபோது வறியவளாகச் சென்றாள். இப்பொழுதோ பரிசுப் பொருள்களைப் பெருவாரியாகப் பெற்று அவற்றை அணிந்து வருகிறாள். அணிகலன்களால் அழகுக் கோலம் பூண்டு வரும் குறவஞ்சியை வியப்புடன் பார்த்துப்பல வினாக்களை அடுக்கி அடுக்கிக் கேட்கிறான் குறவன். அத்தனைக்கும் விரும்பி, விரும்பி விடையளிக்கிறாள் குறத்தி. இருவரும் இன்பத்தில் இணைகிறார்கள். அன்பில் கட்டுண்டுக் களிக்கிறார்கள்.

குறவர்களின் வாழ்க்கை இயல்புகளைக் குறவஞ்சியில் மிக விளக்கமாகக் காணலாம். தலைவியும் தலைவனும் மேற்குடி இயல்புகளைக் காட்டினாலும், மிகுதியும் குறக்குடி வாழ்வைச் சித்திரிப்பதாகவே உள்ளது. மேட்டுக்குடியினரின் இன்ப வாழ்வுக்கு உறுதி கூறும் உரிமையுடன் குறமகள் வரவேற்கப்படுவதைக் காணலாம். தலைவிக்கு அன்பாகவும் ஆறுதலாகவும் விளங்குகிறாள். தன் மனம் மகிழ்ந்து ஆறுதல் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் மேல்குடியில் பிறந்த தலைவி தாழ்குடியில் பிறந்த குறத்தியிடம் கைநீட்டியவாறு நின்று அவள் வாயிலிருந்து உதிரும் சொற்களை ஆவலுடன்

எதிர்பார்ப்பதைச் சுவையுடன் விளக்குவது குறவஞ்சி.

முன்னர் எளிய மக்களே கண்டு களித்தனர். பின்னர் அரசரையும் அவரைச் சுற்றிச் சூழ்ந்தோரையும் குறவஞ்சி கவர்ந்தது. புலவர்கள் அதன் இலக்கியத் தரத்தை உயர்த்தி எழுதத் தலைப்பட்டனர். அதன் பயனாகப் பாமரர் கலையாக இருந்த குறவஞ்சிப் பாவலர் கலையாக மாறியது. இருப்பினும் ஏற்றத் தாழ்வு கருதாது அனைவருக்கும் கலை விருந்து தரும் அமைப்பில்தான் குறவஞ்சிகள் படைக்கப்படுகின்றன.



குறவஞ்சி

**நொண்டி நாடகம்**

தமிழ்நாட்டில் 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் நொண்டி நாடகங்கள் மக்கள் முன் ஆடப்பட்டன. இதில் ஒரு நொண்டியின் அவல வாழ்வு மிக விரிவாக நடித்துக் காட்டப் பெறும். அதனை ஒரு நொண்டி வேடம் தாங்கிய நடிகன் நடித்தும், பாடியும் காட்டி மக்களை மகிழ்விப்பான்.

ஒரு இளைஞன் தாய் தந்தையரை வெறுத்து வீட்டை விட்டு வெளியேறுகிறான். அவன் களவு, காமம் ஆகிய தீய பழக்கங்களில் ஈடுபடுகிறான். பரத்தையர் உறவில் பணமெல்லாம் பாழாகிறது. காசில்லாத நாளில் அவனைக் கதவடைத்துத் துரத்தி விடுகிறாள் அந்தப் பரத்தை. வாழ வழியறியாது களவு செய்கிறான். ஒருநாள் அரசனுடைய குதிரையினைக் களவாடும்போது கையுமெய்யுமாகப் பிடிபடுகிறான். அவனை அரசனிடம் கொண்டு செல்கின்றனர். அரசன் வெகுண்டு அவனை, கை வேறு கால் வேறாக வெட்டி விடுமாறு ஆணையிடுகிறான்.

அரசனின் ஆணைப்படி தீயனின் கை கால்கள் வெட்டப்பட்டு நொண்டியாகிறான். அவனுக்கு என்ன செய்ய வேண்டுமென்று தோன்றவில்லை. உடனே கோயிலுக்குச் சென்று இறைவனிடம் தன் பழைய குற்றங்குறைகளை வரிசையாகச் சொல்லி, அவற்றை, மன்னித்து அருளுமாறு வேண்டுகிறான். இறுதியில் கடவுளின் அருளினால் வெட்டுண்ட கையும் காலும் திரும்பக் கிடைத்து அவன் நன்றாக நடக்கும் நிலையை அடைகிறான். ஆனால், பழையபடி தவறு செய்வதே இல்லை. இறைப்பற்று மிகுதியாகி அனைவராலும் நல்லவனாக மதிக்கப் பெறுகிறான்.

நொண்டி நாடகத்தின் பொது அமைப்பு இது. சமயத்துக்குத் தக்க கருத்துக்கள் புகுத்தப் பெற்றிருக்கும். திருச்செந்தூர் நொண்டி நாடகம் முருகனைப் பற்றிய செய்திகளையும், சீதக்காதி நொண்டி நாடகம் இஸ்லாமியத் தத்துவக் கருத்துக்களையும், ஞான நொண்டி நாடகம் கிருஸ்தவ சமய உண்மைகளையும் விளக்கிக் காட்டுகின்றன.

புலவர்கள் தங்களை ஆதரித்த வள்ளல்களைப் பாராட்டிப் புகழ்வதற்காகவும், குறிப்பிட்ட தெய்வங்களின் பெருமையினை எடுத்துச் சொல்வதற்காகவும் நொண்டி நாடக அமைப்பைப் பயன்படுத்தி நூல்கள் இயற்றியுள்ளனர். மக்கள் தீச்செயல்களை விடுத்து நன்மை செய்ய நாட வேண்டும் என்பது நொண்டி நாடகத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்று. மேலும், இறைப்பற்று மக்களுக்கு ஏற்பட வேண்டும். அவ்வாறானால்தான் மனிதன் தவறு செய்ய அஞ்சுவான் என்பது ஒரு கருத்து.

கலைச்சுவையுடன் இத்தகைய ஆட்டங்கள் ஆலய விழாக்களின் போது திறந்த வெளி அரங்கங்களில் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. மக்கள் திரளாகக் கூடி அவற்றைக் கண்டு களித்துள்ள செய்திகள் வரலாறாக உள்ளது. அனைத்துச் சமயத்தினரும் நொண்டி நாடக அமைப்பை மதித்து தங்கள் சமயக்கருத்துக்களை அதன் மூலம் பரபப விரும்பியுள்ளனர். காலத்தால் கரைந்து விட்ட கலையானாலும் நொண்டி நாடகம் மக்களை மகிழ்வித்த ஒரு வகை நாடக இனம் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

**குளுவ நாடகம்**

குளுவ நாடகம் 18-ஆம் நூற்றாண்டில் இராமநாதபுரம் மாவட்டத்தின் வடக்குப் பகுதியில் நாட்டுப்புறக் கலையமைப்பில் ஆடப்பட்ட ஒருவகை நாடக இனமாகும். பல குளுவ நாடகங்கள் வாய்மொழியாக இருந்ததாகக் குறிப்பிடுவதிலிருந்து இத்தகைய நாட்டுப்புற நாடக அமைப்புக் கலைக்கு மக்கள் மத்தியில் நல்ல செல்வாக்கு இருந்துள்ளது எனக் கருதலாம்.

—(தொடரும்)

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப்பணிகள்

## (1.8.80 முதல் 20.8.80 முடிய)

### 1—8—80

விவசாயிகள் செலுத்திவந்த பணப் பயிர் வரி உட்பட பல்வேறு வரிகளை ரத்து செய்ய சட்டமன்றத்தில் மசோதா கொண்டு வரப்பட்டுள்ளது. மொத்தம் 4.43 கோடி ரூபாய்க்கு வரிகள் ரத்து செய்யப்படுகின்றன என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

### 2—8—80

தமிழ்நாட்டில் சுற்றுலாத் தலங்கள் வளர்ச்சிக்கு அரசு திட்டங்களை வகுத்துள்ளது. இந்த ஆண்டு முக்கிய சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தவும், சுற்றுலா மாளிகைகள் கட்டவும் ரூ. 2கோடி செலவிடப்படும். இதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன என்று சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு துரை. கோவிந்தராசன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### 3—8—80

நாடகக் கலைஞர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க, மாவட்டந்தோறும் நாடக அரங்குகளைக் கட்ட தமிழக அரசு ஆலோசித்து வருகிறது என்று மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தெரிவித்துள்ளார்.

### 4—8—80

தமிழக அரசில் தற்போது தனித்தனியாக உள்ள கூட்டுறவுத்துறையும், உணவுத்துறையும் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரே துறையாக உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இன்றியமையாப் பண்டங்களை ஒரு சீராக இணைத்து, பொது மக்களுக்குப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் கொண்டு வருவதற்கான ஏற்பாடாக இது செய்யப்பட்டுள்ளது.

### 5—8—80

இந்த ஆண்டில் 20 ஆயிரம் பெண்களுக்கு வேலைவாய்ப்பும், 7,100 முதியவர்களுக்கு உதவித்தொகையும் அளிக்கப்படும் என்று மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் கூறியுள்ளார்.

### 6—8—80

இருநூறு ஆண்டுக் காலமாக நிர்வாகத்தில் காலதாமதத்தை ஏற்படுத்தி வந்த வருவாய் வாரியம் (ரெவன்யூ போர்டு) எடுக்கப்பட்டுவிட்டது.

ஆண்டுக்கு இத்தனைச் சிறுவர்கள் என்று தேர்ந்தெடுத்து அவர்களுக்குக் கல்வியுடன் விளையாட்டும் கற்றுக்கொடுத்து வீர விளையாட்டுகளில் தேர்ச்சிபெறச் செய்யும் பொறுப்பைத் தமிழக அரசு ஏற்கவிரும்புகிறது என்று மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் கூறியுள்ளார்.

### 7—8—80

தென்னார்க்காடு மாவட்டம் சிதம்பரம் அருகில் உள்ள மருதூர் கிராமத்தில் வள்ளலார் இராமலிங்க அடிகளுக்கு மணிமண்டபம் கட்டப்படும் என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

### 8—8—80

கோவை நகருக்குச் சிறுவாணி குடிநீர் இந்த ஆண்டு டிசம்பர் மாதம் முதல் விநியோகிக்கப்படும் என்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

குமரிமுனையில் விவேகானந்தர் பாறை அருகில் 90 இலட்ச ரூபாய் மதிப்பீட்டுச் செலவில், 75 அடி உயர வள்ளுவர் சிலை வைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளது. சிலை அமைக்கும் செலவு முழுவதையும் அரசு ஏற்றுக் கொள்ளும். இந்தச் சிலை அமைப்புக்குப் பிறகு அருகிலேயே திருக்குறள் ஆராய்ச்சி, கருத்தரங்கு ஆகியவை நடத்துவதற்காகவும், திருக்குறள் சுண்காட்சிக்காகவும் அரங்கம் கட்டுவது குறித்து யோசிக்கப்படும் என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் மேலவையில் தெரிவித்தார்.

தொகுப்பு : பி. வி. கிரி

## 9—8—80

மருத்துவத்துறையில், பொறியியல் பிரிவு ஒன்றை அமைக்கத் தமிழக அரசு உத்தேசித்துள்ளது. மாநிலத்திலுள்ள பல்வேறு அரசு மருத்துவமனைகளிலுள்ள மருத்துவக் கருவிகளைப் பராமரிப்பதில் இந்தப் பிரிவு செயல்படும் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் திரு எச். வி. ஹண்டே அவர்கள் தெரிவித்தார்.

## 10—8—80

நலிவுற்ற பழம்பெரும் நாடகக் கலைஞர்கள் 10 பேருக்கு 500 ரூபாயுடன் முதல்வர் நிதியிலிருந்து மேலும், 1,500 ரூபாய் வழங்கப்படும் எனவும், நாடகத் தந்தை கந்தசாமி முதலியாருக்குச் சிலை எழுப்பப்படும் எனவும் மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற வெள்ளிவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

## 11—8—80

ரூபாய் 40 கோடிச் செலவில் ஒன்பது மாவட்டங்களில் 2வது பால்பெருக்கத் திட்டம் அமல்படுத்தப்படும். தற்போது நாள் ஒன்றுக்கு 22 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தியாகிறது. இதனை 34 இலட்சம் லிட்டராக உயர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு ஊரக-தொழில் அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் கூறியுள்ளார்.

## 12—8—80

பலவகையான இரும்புக் கலப்பு உள்ளதும், இல்லாததுமான துண்டுகளை உற்பத்தி செய்வதற்காகக் கூட்டுறவுத்துறையில் ஒரு நிறுவனமும், தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் உப்பு வயல்களிலிருந்து கிடைக்கும் 'பிட்டர்னஸ்' அடிப்படையாகக் கொண்டு 600 டன் எடையுள்ள மாங்கனீஷியம் உலோகம் உற்பத்தி செய்ய அரசுத்துறையில் ஒரு நிறுவனம் ஒன்றும், கிழக்கு இராமநாதபுரம் முதுகுளத்தூர் வட்டத்தில் துவக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

## 13—8—80

சிவில் நீதிமன்றங்களில், முதல் கட்டமாக உயர்நீதிமன்றங்களுக்குக் கீழே இருக்கும் சிவில் நீதிமன்றங்களில் தமிழில் தீர்ப்பு அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

## 14—8—80

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோயிலில் 6 புதிய தடங்களில் பேருந்துப் போக்குவரத்தை மாண்புமிகு தொழிலமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் துவக்கி வைத்தார்.

## 15—8—80

தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின்கீழ், சென்னை மாநகரில் ஏற்படுத்தவிருக்கும் 50 தானியங்கிப் பால் வழங்கு நிலையங்களில் 13வது நிலையத்தை மாண்புமிகு ஊரக-தொழில் அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் மேற்கு அண்ணாநகரில் துவக்கி வைத்தார். இந்தத் தானியங்கிப் பால் வழங்கு நிறுவனங்கள் முன்னாள் இராணுவத்தினர் பொறுப்பில் விடப்படும். இதற்காக இதுவரை தேர்வு செய்யப்பட்ட 9 முன்னாள் இராணுவத்தினருக்கு, இந்தத் தானியங்கிப் பால் வழங்கு நிலையங்களின் சாவிகளை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

## 16—8—80

தமிழ்க் கலைக்களஞ்சியத்தின் இரண்டாவது பதிப்பை வெளியிடும் திட்டத்தைத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் மூலம் மேற்கொள்ளுவது குறித்து அரசு ஆய்ந்து வருகிறது என்று மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் மேலவையில் தெரிவித்தார்.

சென்னையில் மூன்று புதிய காய்கறிகள் விற்பனை நிலையங்கள் ரூ. 3.37 இலட்ச செலவில் அமைக்கப்படவிருக்கின்றன. வீட்டுத் தோட்டத்திற்குத் தேவையான காய்கறி விதைகள், நாற்றுக்கள், பழச் செடிகள் ஆகியவை இந்நிலையத்தின் மூலம் வழங்கப்படும். காய்கறிகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், இந்த நிலையங்கள் அடையாறு, வடபழனி, வியாசர்பாடி ஆகிய இடங்களில் அமைக்கப்படும். ஏற்கெனவே, எல்டாம்ஸ் சாலையிலும், அறிஞர் அண்ணா நகரிலும் இத்தகைய நிலையங்கள் உள்ளன.

## 17—8—80

சமூக நலத்துறை சார்பில், கடலூரில் ஏழை எளியோர்களுக்கு உதவித்தொகை கருவிகள், வீட்டுமனைப்பட்டா போன்றவை வழங்கப்பட்டன.

சிதம்பரம் வட்டத்தைச் சேர்ந்த ஆதரவற்ற வயது முதிர்ந்தோர், விதவைகள், ஊனமுற்றோர்கள் ஆகியோரில் ஏழைகள் 800 பேர்களுக்குத் தமிழக அரசின் சமூகநலத் திட்டப்படி வேட்டி, சேலைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

## 18—8—80

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகத்தில் சமூகநலத்துறை சார்பில் உடல் ஊனமுற்றவர்கள் இருவருக்குப் பெட்டிக் கடை வைக்கத் தலா 4ஆயிரம் ரூபாயும், மூன்று சிறுவர்களுக்குக் காது கேட்கும் கருவியும், ஐந்து பெண்களுக்கு இலவசத் தையல் இயந்திரங்களும், உடல் ஊனமுற்ற மூவருக்கு மூன்று சக்கர வண்டி

யும், 6 பேருக்கு இலவச வீட்டு மனைப் பட்டாவும், விதவையை மணம் புரிந்த மாரி என்பவருக்கு 5 ஆயிரம் ரூபாயும் மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் வழங்கினார்.

உடற்பயிற்சிக்காக, விளையாட்டுக்காகத் தனித்துறை ஒன்றை ஏற்படுத்தி, அதற்காக ஒரு அமைச்சரை நியமிக்க தமிழக அரசு கருத்து கொண்டிருக்கிறது என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியுள்ளார்.

## 19—8—80

திருச்சி நகரசபைக்கு ரூ. 18 கோடி செலவில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் ஒன்று தயாரிக்கப் பட்டிருக்கிறது. இத்திட்டத்தை உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.பி. குழந்தைவேலு அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

## 20—8—80

தமிழ்நாட்டில் மதுவிலக்கு அமல்படுத்துவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கூடுதல் மாவட்டப்போலீஸ் சூப்பிரண்டு ஒருவர் தலைமையில் இரண்டு போலீஸ் இன்ஸ்பெக்டர்களும், நான்கு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்களும், நான்கு தலைமைக் காவலர்களும், 40 காவலர்கள், 10 ஓட்டுநர்கள் ஆகியோர் இதில் அடங்குவர். போலீஸ் மாவட்டங்கள் இருபதிலும் இந்தக் கூடுதல் படை அமைக்கப்படும். மாநிலத்தில் கூடுதலாக மொத்தம் 600 பெண் போலீசாரும் நியமிக்கப்படுவர்.

தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் மற்றும் இங்குள்ள கூட்டுத்துறை நிறுவனங்கள் தயாரிக்கும் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய, மத்திய ஏஜென்சி (சிங்கிள் சென்ட்சல் ஏஜென்சி) ஒன்றை அமைக்கலாமா என அரசு ஆலோசித்து வருகிறது என்று மாண்புமிகு தொழில்அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் உள்ள மடங்கள், அறநிலையங்களின் நிர்வாகம், நிதி விவகாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக, அறநிலையத்துறை இணை ஆணையாளர் தலைமையில் ஒரு தனிக்குழுவை அமைக்கத் தமிழக அரசு தீர்மானித்துள்ளது.

தமிழ்நாட்டிலேயே முதல் முறையாக, பெரியகுளம் அருகேயுள்ள தாமரைக்குளம் என்ற கிராமத்தில் பெண்களாலேயே நடத்தப்படும் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் சங்கம் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. இந்தச் சங்கத்தை மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு கா. ராஜாமுகம்மது அவர்கள் துவக்கி வைத்தார். இந்தச் சங்கத்திற்கு தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் பாங்க் ஆப் இந்தியா கடன் உதவி அளித்திருக்கிறது.

# பார்த்தோம் படித்தோம்

**பாராட்டுக்குரியது!**

பட்ஜெட் பற்றிப் பத்துப் பேர் பேட்டி—பாராட்டுக்குரியது!

—டி. எல். ரெட்டி,
வேலிபட்டி, எட்டயபுரம்.

**கேள்வி—பதில்!**

பள்ளிப் பாடம் சம்பந்தமான கேள்வி - பதில்களும் இடம் பெற்றால், மிக்க உதவியாக இருக்கும்.

—எம். கேசவன்,
கள்ளக்காட்டுவலசு.

ஒவ்வொரு இதழிலும் சிறுகதைகள் இடம்பெற வேண்டும்.

—த. சித்ரா,
சேத்துப்பட்டு.

**சிறுகதை எங்கே?**

புதுக்கவிதைகளும், நகைச்சுவைத் துணுக்குகளும் நிறைய இடம்பெற வேண்டும். அதுசரி சிறுகதையை எங்கே காண வில்லை?

—மங்களாம்பாள்மகன்,
ஒழுவெட்டி.

**கண்கொள்ளாக் காட்சி**

'முத்துப்பல் முறுவலிக்க... கட்டுரை உயர்வாக இருந்தது. கல்லணையும் காவிரியும்- இயற்கையழகுக் காட்சிகள் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தன.

ஆர். அமுதா,
வடுகவிருட்சியூர்.

அதிக அளவில் பொது அறிவுப் புதிர்கள், விடுகதைகள் இடம் பெற வேண்டும்.

—ஆர். நாராயணன்,
கீழ்க்கண்டனி,
சிவகங்கை.

விவசாயக் குறிப்புகளைச் சிறிது குறைத்து, அதற்கு ஈடு தருகின்ற வகையிலே சிறுகதைகளை - நீதிக் கதைகளை வெளியிடவேண்டுகிறேன்.

—விண்ணவர் மன்னன்,
சென்னை-1.

**அறிவு விருந்து**

'கிரையோ கிரை' கட்டுரை அருமை. 'தமிழகத்தின் நாட்டுப் புறக் கலைகள்' தொடர் கட்டுரை சிறந்த ஆய்வுப் பெட்டகம்; பி.வி. கிரியின் 'பழைய பேப்பர்' கதை, விந்தைச் செய்திகள் சிறந்த அறிவு விருந்து!

—புலவர் நக்கீரன்,
செங்கல்பட்டு.

# படமும் செய்தியும்



டெல்லியில் தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதியாக நியமனம் செய்யப்பெற்ற பாவலர் திரு. மா முத்துசாமி அவர்களுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 15.8.80-ல் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்கள்.

தமிழக திட்டங்கள் குறித்து, மாண்புமிகு முதல்வர் அவர்களும் தமிழக அமைச்சரவையினரும், மத்திய நிதியமைச்சர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்களும் 18.8.80-ல் சந்தித்துப் பேசினர்.









சென்னை, சேத்துப்பட்டுப் பகுதியிலுள்ள பிருந்தாவனம் நகரில் ஏற்பட்ட தீவிபத்துப் பகுதிகளை மாண்புமிகு முதல்வர் 5.8.80-ல் பார்வையிட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறினார்.



சென்னை, அண்ணா நகரில் (மேற்கு) தானியங்கு பால் நிலையத்தை, மாண்புமிகு ஊரக தொழில் அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் 15.8.80-ல் திறந்து வைத்தார்கள்.

பொன்னேரி—மணலி, செங்குன்றம்—பழவேற்காடு ஆகிய பகுதிகளில் புதிய பேருந்து வழித்தடங்களை, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு முத்துசாமி அவர்கள் 18.8.80-ல் துவக்கி வைத்தார்கள்.





# காசநோய் கவனிப்பு

—மாலவன்

காசநோய்—

முதியோர் முதல் இளையோர் வரை அனைவரையும் பாதிக்கும் நோய்.

முதிராக் குழந்தைகளும் இந்நோய்க்கு ஆளாவது உண்டு.

காசநோய் தொற்றுநோயாகப் பரவுகிறது. இந்நோயாளி ஒருவரின் ஒருதுளி கோழையால் காசநோய்க்கான கிருமிகள் கோடிக் கணக்கில் இருக்கும்.

இந்நோய்க்கு ஆளானவர்கள் கண்ட இடங்களில் எச்சிலைத் துப்பவதாலும் இருமும்பொழுது கைக்குட்டையால் வாயை முடிக் கொள்ளாததாலும் நோய் பரவுகிறது.

பீடி சுற்றும் தொழிலாளர்களும் நெசவாளர்களும் தாங்கள் வேலை செய்யும் இடங்களின் பக்கத்திலேயே எச்சிலைத் துப்பிக் கொள்வதாலும் இந்நோய் வருகிறது.

தொடக்கத்திலேயே இந்நோய் கண்டவர்கள் சிகிச்சை செய்துகொள்ள முன்வரவேண்டும். வயதானவர்கள் இருமினால் மூப்பு தான் காரணம் என்று அலட்சியமாக இருந்துவிடாமல் மருத்துவ மனைக்குச் சென்று பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி போடுவதன் மூலம் காசநோய் வராமல் பாதுகாக்கமுடியும்.

ஏழை எளிய மக்களை பெரிதும் பாதிக்கக்கூடிய அளவில் உள்ள இந்நோய் எங்கெங்கு எப்படி பரவியுள்ளது என்பதைப் பல்வேறு நிலைகளில் ஆய்வுசெய்து அவர்களுக்கு உரிய சிகிச்சை அளித்திட நமது அரசு முனைப்புடன் செயலாற்றி வருகிறது.

அப்பணியில் முன்னணியில் திகழ்ந்து அரும்பணியாற்றி வருகிறது சென்னை சேத்துப்பட்டிலுள்ள காசநோய் மற்றும் மார்பு நோய்கள் நிறுவனம்.

சென்னை பொது மருத்துவ மனையின் ஒரு பகுதியாகத் திகழும் சேத்துப்பட்டு காசநோய் மற்றும் மார்பு நோய்கள் நிறுவனத்தின் இயக்குநரும், சென்னை மருத்துவக் கல்லூரி பேராசிரியருமான டாக்டர் திரு கே.வி. கிருஷ்ணசாமி அவர்கள் காசநோய் மற்றும் மார்புநோய்களுக்குச் சிகிச்சை அளிப்பதில் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் கொண்டவர்.

காசநோய் மற்றும் மார்பு நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதில் சிறப்பான சேவைகளுக்காக டாக்டர் திரு கே. வி. கிருஷ்ணசாமி அவர்களுக்கு 1979ஆம் ஆண்டுக்கான டாக்டர் பி.சி.ராய் தேசிய விருது வழங்கப்பட்டது.

சேத்துப்பட்டிலுள்ள காசநோய் மருத்துவ மனையைத் தவிர தாம்பரம், ஓட்டேரி ஆகிய இடங்களிலும் காசநோய்க்கு மருத்துவ மனைகள் உள்ளன. சென்னை மாநகரில் 45 இடங்களில் புறநோயாளிக்கான சிகிச்சையளிக்கப்படுகிறது. மாவட்டங்களிலும், நகர்ப்புறங்களிலும் காசநோய்த் தடுப்புக்கான பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காசநோய் மற்றும் மார்பு நோய்கள் நிறுவன இயக்குநர் டாக்டர் திரு கே.வி. கிருஷ்ணசாமி அவர்கள் காசநோய்த் தடுப்புக்காக எடுத்துவரும் நடவடிக்கைகளைப் பற்றிக் குறிப்பிட்டதாவது:







''சென்னை மாநகரில் பீடித் தொழிலாளர்கள் வசிக்கும் பகுதிகளில் காசநோய் பரவியிருப்பது குறித்து ஆய்வு நடத்தினோம். அதுபோன்று நெசவாளர்கள் வாழும் பகுதியிலும் ஆய்வு நடத்தினோம். சென்னை மத்தியச் சிறைச்சாலையிலுள்ள கைதிகளிடமும் காசநோய் உள்ளதா என்று சோதனை நடத்தினோம். சென்னை மனநோய் மருத்துவமனையிலுள்ள நோயாளிகளிடத்திலும் சோதனைகள் நடத்தினோம். பால்வினை நோயால் பாதிக்கப் பட்டவர்களிடமும் சோதனைகள் செய்தோம். இதன் மூலம் இவர்களிடம் பரவியுள்ள காசநோய் கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

''குழந்தைகளுக்குத் தடுப்பூசி போடுவதன் மூலம் இந்நோய் வராமல் பாதுகாத்துக் கொள்ளலாம். கண்ட இடங்களில் இந்நோய் உள்ளவர்கள் எச்சிலைத் துப்புவதாலேயே காசநோய் காற்றின் மூலம் பரவுகிறது.

''காசநோய்க்கு மருத்துவமனையில் தங்கித்தான் சிகிச்சை பெற வேண்டும் என்பதில்லை. வீட்டில் இருந்துகொண்டு மருந்து சாப்பிட்டுக் கொண்டு சிகிச்சை பெறலாம். ஆனால் தொடர்ந்து மருந்து சாப்பிட வேண்டும்.

''சேத்துப்பட்டு காசநோய் மருத்துவமனைக்கு வருபவர்களிடம் தொடர்ச்சியாக ஏன் மருந்து சாப்பிட வேண்டும் என்பதையும் இருமல் வந்தால் கைக்குட்டையால் வாயை மூடிக்கொண்டு இரும வேண்டும் என்பதையும் பாடம் சொல்லிக் கொடுப்பது போல் கற்பிக்கிறார்கள்.

நாள்தோறும் சேத்துப்பட்டு மருத்துவமனைக்கு 250 பழைய நோயாளிகளும் 50 புதிய நோயாளிகளும் சிகிச்சைக்கு வருகிறார்கள். அனைவரும் புறநோயாளிகள்தாம்.

இங்கே காசநோய்க்குச் சிகிச்சையளிப்பதுடன் 'குடும்பநலத் திட்டம்' போன்ற நலப்பணிகளுக்கு உரிய அறிவுரையையும் வழங்குகிறார்கள். மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர்களும் இங்கு பயிற்சி பெறுகிறார்கள். ஹெல்த் விசிட்டர்கள் போன்றவர்களுக்கும் இங்கே பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.''

இப்படி சேத்துப்பட்டு காசநோய் மருத்துவமனை பற்றி விளக்கங்களை அதன் இயக்குநர் டாக்டர் கே.வி. கிருஷ்ணசாமி அவர்கள் விளக்கும்போது மருத்துவமனையின் துப்புரவும் நம்மை மிகவும் கவருகிறது.

வெளிநாட்டவர்கள் பலர் இம்மருத்துவ மனையைப் பார்த்துப் புகழ்ந்துள்ளனர். உலக நல்வாழ்வு நிறுவனத்தைச் சேர்ந்தவரும் பல்கேரிய நாட்டினருமான டாக்டர் Ivan A Ivanov சேத்துப்பட்டு மருத்துவமனையின் பணிகளை நன்கு புகழ்ந்துள்ளார்.

வளர்ந்து வரும் சமுதாயத்தின் நல்வாழ்வுப் பணிக்கு பெருந்தொண்டாற்றும் நிறுவனமாக—

நாளுக்கு நாள் வளர்ந்துவரும் சென்னை மாநகர மக்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் அரண்களில் ஒன்றாகத் திகழும் காசநோய் மருத்துவமனை எதிர்காலச் சமுதாயத்தின் நல்வாழ்வுக்கு அருந்தொண்டாற்றும் அமைப்பாகும்.

# மகாகவியின் சங்கற்பங்கள்

இயன்றவரை 'தமிழே பேசுவேன்; தமிழே எழுதுவேன்; சிந்தனை செய்வது தமிழிலே செய்வேன். எப்போதும் பராசக்தி-முழு உலகின் முதற் பொருள்-அதனையே தியானம் செய்து கொண்டிருக்க முயல்வேன். அதனைக் குறித்தே ஓயாமல் எழுதிக் கொண்டிருக்க முயல்வேன்.

பொழுது வீணே கழிய இடங் கொடேன். லௌகிக காரியங்களை ஊக்கத்துடனும், மகிழ்ச்சியுடனும், அவை தோன்றும் பொழுதே பிழையறச் செய்து முடிக்கப் பழகுவேன்.

உடலை நல்ல காற்றாலும், இயன்றவரை சலிப்பதாலும் தூய்மையுறச் செய்வேன்.

மறந்தும் தற்புகழ்ச்சி பாராட்டுதல் விரும்பேன்.

மூடரின் உள்ளத்தில் என்னைப் பற்றிய பொய் மதிப்புண்டாக இடங்கொடேன்.

சர்வ சக்தியுடைய பரம்பொருளைத் தியானத்தால் என்னுள்ளே புகச்செய்து எனது தொழில்களெல்லாம் தேவர்களின் தொழில்போல் இயலுமாறு சூழ்வேன்.

பொய்மை, இரட்டுற மொழிதல், நயவஞ்சனை, இவற்றால் பொருளீட்டிப் பிழைத்தல் நாய்ப் பிழைப்பென்று கொள்வேன்.

இடையறாது தொழில் புரிந்து இவ்வுலகப் பெருமைகள் பெற முயல்வேன். இயலாவிடின் விதிவசமென்று மகிழ்ச்சியோடிருப்பேன்.

எப்போதும் மலர்ந்த முகம், இனிய சொல், தெளிந்த சித்தம் இவற்றோடிருப்பேன்.



## பாரதியாரும் பதினொன்றும்



அவர் 'பாரதி' என்னும் பட்டம் பெற்றது, தம் 11-வது வயதில்!

அவர் நம்மையெல்லாம் பிரிந்தது 1921-ஆம் ஆண்டு செப்டம்பர் 11-ஆம் நாளில்!

மகாகவி பாரதியாருக்கும், 11-ஆம் எண்ணுக்கும் ஏதோ நெருங்கிய தொடர்பு இருந்திருக்க வேண்டும்.

பாரதியார் பிறந்தது 1882-ஆம் ஆண்டு டிசம்பர் 11-ஆம் நாள்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.